# முத்துலட்சுமி ராகவன்



# நிலா வெளியில்..

# நிலா வெளியில்

## 1

**மார்கழிப் பனி போல் குளுமையானது - காதல்**
**மலரினை விட மென்மையானது.**
**அதைப் புரிந்தே உறவைத் துறந்து போனேன்.**
**எனைப் பிரிந்தே அவளோ பறந்து போனாள்.**

அழகான மலர்தோட்டம். அந்தத் தோட்டத்தில் ஒரு பூ அவனை அழைத்தது. நெருங்கிச் செல்ல செல்ல அந்த மலர் முகம் நிலவு முகமாகி அவனைப் பார்த்துச் சிரித்தது. அவனது இதழ்களிலும் இளமுறுவல் அரும்பியது. அந்த இனிய கனவுடன் கண்விழித்தான் அரவிந்தன். எழுந்து அறையின் ஜன்னல் திரைகளை விலக்கி தோட்டத்தைப் பார்த்தான். நேற்றைய இரவின் பனித்துளிகளோடு தோட்டத்துச் செடிகளின் இலைகள் உறவாடிக் கொண் டிருந்தன. மலர் செடிகளின் மணம் பனிகாலத்து

விடியலின் அற்புதத்தை உணர்த்தின. ஜோடியாய் பறந்த குயில்கள் 'குக்கூ, குக்கூ' என ராகம் பாடிக் கொண்டு சென்றன. உலகமே உற்சாகமாய் இருந்தது அரவிந்தனைத் தவிர. கதவு தட்டப்படுவது கேட்டுத் திரும்பினான். கதவைத் திறந்தான். விசாலம் காபியுடன் நின்றிருந்தாள். சிவந்திருந்த அவன் விழிகளைப் பார்த்தபடி அருகி லிருந்த டீபாயின் மேல் காபியை வைத்தவள்,

''என்னடா அரவிந்த், கண்ணெல்லாம் சிவந்திருக்கு. உடம்பு சரியில்லையா?'' என்றவாறு அருகில் வந்து அவன் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.

அவள் கையை தட்டிவிட்ட அரவிந்தன், கோபமாய் முகத்தை திருப்பிக் கொண்டான்.

கோபத்துடன் மகனைப் பார்த்த விசாலம்.

''ஏண்டா என்மேல் கோபிக்கிறே. நான் என்ன செய் தேன்?'' என்று கேட்டாள். பதில் சொல்லாமல் காபிக் கோப்பையை அரவிந்தன் டீபாயின் மேல் வைக்க,

''அரவிந்த். நான் ஒருத்தி இங்கே நின்று காட்டுக் கத்தலா கத்திக்கிட்டு இருக்கேன். பதிலே பேசாமல் இருக்க.'' என்று எரிச்சலுடன் கேட்டாள் விசாலம்.

''அதான் காட்டுக்கத்தலா கத்தறேன்னு உன் வாயா லேயே சொல்லிட்டே இல்ல. இப்படிக் கத்தினா அவன் எப்படி பதில் சொல்வான்,''என்ற குரலைக் கேட்டு திரும்பிப் பார்த்தாள் விசாலம். ராஜதுரை அறைவாசலில் நின்று கொண்டிருந்தார். தந்தையைப் பார்த்ததும் அரவிந்தன் ஜன்னலருகில் போய் வெளியே பார்க்க ஆரம்பிக்க ராஜ துரை மெதுவாக உள்ளே வந்தார். மகனின் முதுகை தடவி யவர்.

''அரவிந்த். உன் கோபம் காரணமில்லாதது. நானும் உன் வயதை கடந்து வந்தவன்தான். இளவயது ஆசைகள் அறிவார்ந்தவைகளாக எப்போதுமே இருக்காது. தகுதிக்கு சமமான இடத்தில் கல்யாணம் செய்வதுதான் உன் எதிர் காலத்திற்கு நல்லது. இதை உன்னிடம் ஆயிரம் முறை சொல்லிவிட்டேன். நீ காதில் வாங்கிக் கொள்ளவில்லை. நம்மை விட பெரிய இடத்திலெல்லாம் நான், நீயென்று உனக்குப் பெண் கொடுக்க போட்டி போடுகிறார்கள். நீயென்னவென்றால் சாதாரண பேங்க் மேனேஜர் மகளைத் தான் கட்டுவேனென்று ஒற்றைக் காலில் நின்றாய். ஆனாலும் உன் விருப்பத்திற்கு மதிப்புக் கொடுத்துப் பெண் கேட்க நானும் உன் அம்மாவும் போனோமா, இல்லையா? அந்தப் பெண் உன்னை மணக்க சம்மதமில்லை என்று எங்கள் முகத்தில் அடித்தது போல் சொல்லிவிட்டது. என் கௌரவத்திற்கு உன்னால் ஒரு சிறு அவமரியாதை ஏற்பட்டுவிட்டது. இருந்தாலும் என் பிள்ளைக்காக என்று நான் பொறுத்துக் கொண்டேன். நீ என்னவென்றால் என்னையும், உன் அம்மாவையும் எதிரிப்போல் பார்க்கிறாய்,'' என்றார் ராஜதுரை அழுத்தமான குரலில்.

''அப்பா! பெண் கேட்டுப் போனோம், போனோம்னு சொல்கிறீர்கள. அங்கே போய் எப்படிப் பெண் கேட்டீர்கள் என்பதை சொல்கிறீர்களா? அம்மா பேசிய விதத்திற்கு சுயமரியாதையுள்ள எந்தப் பெண்தான் சரியென்று சொல்வாள். அதனால்தான் காயத்ரி என்னை மறுத்துவிட்டாள்,'' என்றான் அரவிந்தன் கோபமாக.

''அப்படி என்னடா நான் பேசிட்டேன். அவர்கள் வீடு நம் போர்டிகோ அளவில் கூட இல்லைன்னு சொன்னேன். உண்மையைத்தானே சொன்னேன். நாளைக்கு ஒரு வேளை கல்யாணம் ஆயிட்டா எங்க அரவிந்தன் இங்கே

வந்து போகவெல்லாம் தோதுப்படாதுன்னு சொன்னேன். என் மனதுக்கு பட்டதைத்தானே சொன்னேன். 'உங்களுக்கும், எங்களுக்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது ஆனால் என்ன பண்றது? எங்க அரவிந்தன் உங்க பெண் மேல் ஆசைப்பட்டுட்டான். அதனால்தான் எங்க தகுதிக்கு இறங்கி வந்து பெண்கேட்க வந்தோம்'ன்னு சொன்னேன். அது தப்பா?'' விசாலம் நொடித்தாள்.

''தப்பில்லைம்மா. உங்களைப் பொறுத்தவரை நீங்க பேசியது எல்லாம் சரி. எப்படிப் பெண் கேட்டால் அவர்கள் மாட்டேன்னு சொல்வாங்கன்னு சரியா நாடி பிடிச்சு பேசிட்டு வந்தீங்க பாருங்க. அங்கதான் நீங்க கைதேர்ந்த வியாபாரி ராஜதுரையின் மனைவின்னு நிரூபிச்சுட்டு வந்தீங்க. உங்களைப் போய் தப்புச் சொல்வேனா. உங்களை நம்பி பெண் கேட்க அனுப்பினேன் பாருங்க. என்னைச் சொல்லணும்.'' அரவிந்தன் எரிச்சலுடன் பேசினான்.

''அரவிந்த் என்ன இது நீயும் அம்மா கூட சண்டை போட்டுக்கிட்டு. அம்மா அவள் மனதுக்கு பட்டதைப் பேசினாள். இப்போ நீ உன் மனதுக்குப் பட்டதை பேசு கிறாய் இல்லையா. இதைப்போல் அம்மாவுக்கும் பேச உரிமை இருக்கிறதா இல்லையா?''

''நன்றாகச் சொன்னீர்கள் அப்பா. உங்கள் கெட்டிக்காரத் தனத்தை என் வாழ்க்கையில் காட்டிவிட்டு அதை நியாயப்படுத்தி பேசவும் செய்கிறீர்கள்.''

''இப்போ என்ன செய்யலாம் அரவிந்த். நாங்கள் போய் காயத்ரி வீட்டில் மன்னிப்பு கேட்கவா? சொல். அதையும் செய்கிறோம். நீ அதைத்தான் விரும்புகிறாய் போல.''

''இதைப்போல் இக்கட்டாகப் பேசி என்னை உங்கள் வழிக்கு கொண்டு வர முயல வேண்டாம்ப்பா. நீங்கள்

போய் இனி காயத்ரி வீட்டில் எதுவும் பேச வேண்டாம். பேசியது வரை போதும். இனி நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''என்.. என்...என்னடா சொல்கிறாய். நீ பார்த்துக் கொள் கிறாயா? என்ன பார்த்துக் கொள்வாய்? நீ சொல்வதுக்கு என்ன அர்த்தம்?'' விசாலம் பதற்றமாகப் பேச அதையே கண்களால் கேட்டபடி ராஜதுரை நிற்க இருவரையும் பார்த்தபடி,

''ஆமாம். நான் காயத்ரியிடம் பேசப் போகிறேன். 'நான் உன்னை விரும்புகிறேன். முறைப்படி பெண் கேட்பது தான் உனக்குப் பிடிக்கும்ன்னு என் அப்பா, அம்மாவை அனுப்பினேன். அவங்க எடுத்தேன் கவிழ்த்தேன்னு பேசிட்டாங்க. அவங்க பேச்சுக்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை'ன்னு சொல்லப்போகிறேன்..'' என்றான் அரவிந்தன்.

''எங்கள் பேச்சுக்கும் உனக்கும் சம்பந்தமில்லை என் கிறாயா? இல்லை உனக்கும் எங்களுக்குமே சம்பந்த மில்லை என்கிறாயா?'' நிதானமாக வினவினார் ராஜதுரை.

''அப்பா! என் மேல் குறை சொல்ல வேண்டாம். நான் காயத்ரியிடம் பேசி எப்படியும் அவளை கல்யாணத்திற்கு சம்மதிக்க வைப்பேன். அப்போது உங்களிடம் வருவேன். நீங்கள் சம்மதித்தால் முழுமனதாய் எங்களிருவரின் கல்யாணத்தை நடத்தி வைய்யுங்கள்.''

''சம்மதிக்காவிட்டால்....?'' விசாலம் ஆத்திரத்துடன் இடைமறிக்க,

''மனதில் உங்கள் இருவரின் ஆசீர்வாதத்தை வேண் டிக்கொண்டு என் கல்யாணத்தை நானே நடத்திக் கொள் வேன்,'' என்றான் அரவிந்தன்.

''எப்படிப் பேசறான் பாருங்க,''என்று இரைந்த விசாலத்தை சமாதானப்படுத்திக் கொண்டிருந்த தகப்பனாரை கவனிக்காமல் குளியலறைக்குள் போய் கதவைச் சாத்திக் கொண்டான் அரவிந்தன். சிறிது நேரத்தில் அலுவலகம் கிளம்பத் தயாராகி கீழே வந்தவனைப் பார்த்து ''சாப்பிட வாப்பா,'' என்றார் ராஜாதுரை.

''பசியில்லைப்பா எனக்கு வேண்டாம்'' என்றவாறு விருட்டென்று வெளியேறி காரை எடுத்தான் அரவிந்தன்.

காரை ஓட்டிக் கொண்டிருந்த அரவிந்தனின் கண்முன் களங்கமில்லாத நிலவு போன்ற முகத்துடன் காயத்ரியே தோன்றிக் கொண்டிருந்தாள். வண்டாடும் கண்கள், வட்ட நிலவு முகம், நீண்ட கூந்தல் என்று வனப்பு அனைத்தும் உருவான தேவதை போன்ற அந்தப் பெண்ணை ஒரு திருமணத்தில் பார்த்தான் அவன். கண்ணை எடுக்க முடியாமல் அவன் தடுமாறிக் கொண்டிருந்தபோது அருகிலிருந்த அவனது உறவுப் பெரியவர் ஒருவர் தான் கூறினார்.

''ஏந்தம்பி. என்ன அப்படி மலைச்சுப்போய் பார்க்கிறே. அந்தப் பொண்ணு நம்ம சொந்தம்தான்,'' என்று.

''நம்ம சொந்தமா. என்ன மாமா இப்படிச் சொல்றீங்க. நான் பார்த்ததேயில்லையே.''

''என் ஒன்றுவிட்ட தம்பி பொண்ணுதான் அது. காயத்ரின்னு பேரு. அவன் பேங்கிலே மேனேஜர். எல்லாம் சரி. இம்புட்டு ஆசையா விசாரிக்கறியே. உனக்கு மாமன் பொண்ணுதான் வேணும். கட்டப்போறியா என்ன?'' கிழவர் கிண்டலாக கேட்க.

''நிஜம்தான் மாமா. கட்டினால் இவளைத்தான் கட்டணும்னு நினைக்கிறேன்,'' என்று பட்டென்று சொல்லிவிட்டு எழுந்து போனான் அரவிந்தன்.

சொன்னதை செய்தும் காண்பித்தான். பெற்றவர்களை அனுப்பினான் பெண் கேட்க. நடக்க வேண்டுமென்று நினைத்து அவர்கள் பேசியிருந்தால் இந்நேரம் காயத்ரி அவன் மனைவி. ஆனால் அவர்களோ..? அரவிந்தனின் முகம் ஆத்திரத்தில் சிவந்தது. அவன் நிச்சயம் காயத்ரியைப் பார்ப்பான். அவன் காதலைச் சொல்வான். பெற்றோர் பேசியதற்கு மன்னிப்பும் கேட்பான். 'அவள் மன்னிப்பாளா? அவன் உயிரை அவனுக்கு மீட்டுத்தருவாளா' அவன் மனம் புலம்பித் தவித்தது. அதோ அந்தத் திருப்பத்தில் திரும்பினால் ஆறாவது வீடு காயத்ரியின் வீடு. படபடக் கும் இதயத்தோடு அவள் வீட்டின் முன் வண்டியை நிறுத்தியவனை வரவேற்றது பூட்டு.

காரின் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த பக்கத்து வீட்டு அம்மாளிடம் விசாரித்தான்.

"அவங்க வீட்டில் யாருமில்லையே தம்பி. காயத்ரியின் அப்பாவும், அம்மாவும் நேற்று அதிகாலையிலேயே கிளம்பிப் போயிட்டாங்க. அவங்க பெரியப்பா ஒருத்தர் நேற்று ராத்திரி வந்து காயத்ரியை கூட்டிப் போனார்," என்றாள் அந்த அம்மாள்.

"எங்கே போனாங்கன்னு தெரியுமா?"

"அவங்க சொந்தக்காரங்க ஊருக்காம்."

அத்தோடு பேச்சை முடித்தவளாக அவள் சென்று விட அரவிந்தன் திகைத்துப்போய் நின்றுவிட்டான். பெற்றோரை பகைத்துக் கொண்டு தன் மனதை எடுத்து சொல்ல அவன் ஓடோடி வந்த வேகமென்ன? இப்போது இப்படி நிற்கின்ற கோலமென்ன? காயத்ரி ஊருக்குப் போய்விட்டாளா? அவன் வாய்விட்டுக் கேட்டுக் கொண்டான்.

"எந்த ஊருக்கு?"

# 2

**நேற்றோடு நான் விதைத்து நினைவில் பூத்த காதல் மலர்**
**காற்றோடு போனதெங்கே என் காதல் போன**
**பாதையெங்கே**
**எந்த ஊர் என்பதையே, இயம்பாமல் சென்றவளே**
**நீ சென்ற ஊரின் என் நினைவு வந்தால் என்**
**நெஞ்சத்தை மன்னித்துவிடு.**

''எந்த ஊருக்கு?'' காயத்ரி கேட்டாள். கார் ஓடிக் கொண் டிருந்தது. காரின் பின்சீட்டில் அமர்ந்திருந்த காயத்ரி, முன் சீட்டில் அமர்ந்திருந்த கோபால்சாமி பெரியப்பாவிடம் இந்தக் கேள்வியை ஆயிரத்தோராவது முறையாக கேட் டாள். அவரும் சளைக்காமல் பதில் சொன்னார்.

''பூங்குளத்திற்கும்மா.''

''அங்கே எதுக்கு பெரியப்பா போகிறோம். குளிக்கவா?''

''ப்ச்சு. பூங்குளம்ன்னா ஊரும்மா.''

''தெரியுது. மொட்டையா பூங்குளம், பூங்குளம்ன்னா வேறு எப்படிப் கேட்பாங்க. சொல்லுங்க பெரியப்பா அந்த ஊருக்கு எதுக்குப் போகிறோம்?''

''உங்க அப்பா அம்மாவைப் பார்க்க.''

''ஆமாம். நான் பிறந்ததிலேயிருந்து அவங்களைப் பார்த்ததே இல்லை பாருங்க. இப்போ நீங்க கூட்டிப் போய் புதுசா இதுதான் உங்க அப்பா, அம்மான்னு அடையாளம் காட்டப்போறீங்க.''

''ஹாஹா... சோக்காப் பேசறேம்மா.''

கடுப்பானாள் காயத்ரி. அவரைப் போலவே.

''ஹாஹா... சோக்கு... ம்?'' என்றாள். முன்னால் காரை ஒட்டிக் கொண்டிருந்த டிரைவரின் முகத்தில் புன்னகை உதித்தது.

காயத்ரி எம்பி முன்னாலிருந்த கோபால்சாமியின் சட்டையை பிடித்து இழுத்தாள். தலைமுடி, மீசையெல்லாம் நரைத்த அந்த அன்புப் பெரியப்பா திரும்பி,

''என்ன தாயி,'' என்றார்.

''இதில் ஒன்றும் குறைச்சலில்லை தாயி, சேயின்னு. இப்போ சொல்லுங்க பெரியப்பா. அப்பாம்மா காலையில் ஊருக்கு போகும்போது நல்லாத்தான் இருந்தாங்க...''

''அடடே நீ அப்படி பயந்துட்டியா. இல்லை தாயி. உன் அப்பனும் ஆத்தாளும் சொகமா இருக்காங்க.''

'அப்பாடி' என்றிருந்தது, காயத்ரிக்கு. ஆக பெற்றோர்களுக்கு ஒன்றுமில்லை. 'வேறு என்னவாக இருக்கும். இந்த பெரிசு எதையும் சொல்ல மாட்டேன்கிறாரே?' யோசனையோடு கோபால்சாமியைப் பார்த்தவளுக்கு சிரிப்பு வந்தது. ம.பொ.சியை நினைவு படுத்தும் தோற்றமுள்ளவர். இவளை ஓரக்கண்ணால் பார்ப்பதும் இவள் பார்ப்பது போல் தோன்றினால் படக்கென்று தூங்குவது போல் பாவனை செய்வதுமாக இருந்தார். எதையோ சொல்ல முடியாமல் அவஸ்தைப்படுவது கண்கூடாக தெரிந்தது. 'என்னவாக இருக்கும்?' என்று எண்ணமிட்டவள்.

''பெரியப்பா'' என்று அழைத்தாள்.

''ஊம்'' என்றார் தூங்குவது போல் நடித்த கோபால்சாமி.

''என் தங்கப் பெரியப்பா இல்லை. நான் கேட்கிறதுக்கு சரியான பதிலைச் சொல்லுவீங்களாம்.''

''நீ என்னத்தை கேட்டு நான் என்னத்தைச் சொல்லி...''

''பெரியப்பா அப்பாம்மா என்னை எதுக்கு அவசரமா கூட்டிக்கிட்டு வரச் சொன்னாங்க?''

''அதை நான் என்னத்தைச் சொல்லி நீ என்னத்தைக் கேட்டு..''

''சரியான என்னத்தை கன்னையா' என்று தலையிலடித்துக் கொண்ட காயத்ரி கிழவரை அதட்டினாள்.

''பெரியப்பா இப்போ சொல்லப் போறீங்களா இல்லையா நாம் எங்கே போறோம்? எதுக்குப் போறோம்?''

''அதை என் வாயாலே நான் சொன்னா நல்லாயிருக்காது தாயி.''

''வேறு யார் வாயாலே சொல்லணும்.''

''சொல்றவங்க சொல்லணும்.''

''என்ன பெரியப்பா மர்மதேசம் போல புதிர் போட்டுக்கிட்டே வர்றீங்க.''

''நான் கிழவன் என்னத்தை புதிர்போட்டு.. தாயி. நான் வெறும் அம்புதான். எய்தவன் உங்க அப்பன். அவனை வந்து கேளு. ஏன் என்னை வரச்சொன்னேன்னு. இப்போ இந்தக் கிழவனை கொஞ்சம் தூங்க விடு தாயி,'' அவர் கெஞ்ச காரை ஓட்டிக் கொண்டிருந்த டிரைவர் இப்போது வாய்விட்டு சிரித்தார்.

ஒரு முறைப்புடன் சீட்டில் சாய்ந்து அமர்ந்துகொண்ட காயத்ரி வெளியே பார்த்தாள். இருளினூடே ஓடி மறைந்த மரங்களைப் பார்க்க கொஞ்சம் பயமாக இருந்தது. மிக அதிகாலையில் நெருங்கிய உறவினர் ஒருவருக்கு உடல்நலம் சரியில்லையென்று பார்த்து வர காயத்ரியின் பெற்றோர் கிளம்பிச் சென்றனர். இரவாகியும் வரவில்லை. கோபால்

சாமி பெரியப்பாதான் காரோடு வந்து நின்றார். உடனே கிளம்பச் சொன்னார். "உடனே பெரியப்பாவுடன் கிளம்பி வா," என்ற தந்தையின் கடிதத்தை தந்தார். பெரியப்பாவை பிறந்தது முதல் அறிந்தவள். தந்தையின் கட்டளைப்படி அவருடன் கிளம்பத் தயங்கவில்லை. காரணம் என்ன என்பது மட்டும் தெரியவில்லை. அதை அறிந்து கொள்ள அவள் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகளும் பலன் அளிக்காமல் போக 'ஊருக்குப்போனால் தெரிந்து போகிறது. பூனைக் குட்டி வெளியே வந்துதானே ஆக வேண்டும்' என்று நினைத்துக் கொண்டவள் கொஞ்சம் அமைதியானாள். இரவு நேரப் பயணம் பயமாக இருந்தாலும் மிகவும் இதமாக இருந்தது. ஏதேதோ யோசித்துக் கொண்டிருந்தவளுக்கு அரவிந்தனின் நினைவு வந்தது. இரண்டு தினங்களுக்கு முன்னர் பெண் கேட்டு வந்த அவனின் பெற்றோர் பேசிய பேச்சு.. அதை நினைக்கையிலே அவளது தாடை இறுகியது.

அவர்களது மகன் தகுதியில்லாத இடத்தில் ஆசைப் பட்டு விட்டானாம். வேறு வழியில்லாமல் பெண் கேட்க வந்தார்களாம் காயத்ரி கொதித்துவிட்டாள். அம்மா பதறப் பதற அவனது தந்தை முன்போய் நின்று கரம் கூப்பி,

"சார். உங்கள் மகன்தான் என்மேல் ஆசைப்படுகிறார். ஆனால் நான் உங்கள் மகனை விரும்பவில்லை. எனக்கு உங்கள் மகனை கல்யாணம் செய்து கொள்ள விருப்பமில்லை," என்று சொல்லிவிட்டாள். 'அவர்கள் முகம் போன போக்கை பார்க்க வேண்டுமே' என்று நினைத்து சிரித்துக் கொண்டாள்.

கார் ஒரு சிறு நகரத்தின் டீக்கடை முன் நின்றது. இறங்கி டிரைவருடன் காபி சாப்பிடப்போன பெரியப்பா,

''காபி சாப்பிடம்மா,''என்று அவளது பதிலை எதிர் பாராமல் காபி தம்ளரை அவள் கையில் திணித்தார். தொண்டையில் இறங்கிய காபி அந்த இரவு நேரத்துக்கு குளிருக்கு இதமாக இருந்தது. இதே போல் அவளது சம்மதம் என்ற சொல் அரவிந்தனுக்கு இதமாக இருந்திருக் கலாம். ஆனால் என்றுமே அரவிந்தன் மேல் அவளுக்கு நாட்டம் இருந்ததில்லை. இணக்கமில்லாத மனதை இழுத் துப்பிடித்து சம்மதம் சொல்ல விருப்பமில்லை. மனதில் இருந்ததை பளிச்சென்று நெற்றியடியாக கூறிவிட்டாள்.

வெளியே விடியலின் ஆட்சி ஆரம்பமாகியிருந்தது. இப்போது கார் சென்று கொண்டிருந்த பாதையும் மாறி யிருந்தது. மரங்களோடு பசுமையான வயல்வெளிகள் கண்ணுக்குத் தெரிந்தன. சுளித்தோடும் வாய்க்கால் நீரும், அதில் பறக்கும் நாரைகளும் இதமாய் தொட்டுச் செல்லும் ஈரக் காற்றும் பயணத்தை சுகமாக்கின.

தொலைவில் ஊர் கண்ணுக்குத் தெரிந்தது. முதலில் தெரிந்தது ஊருக்கு வெளியே நின்ற சிறு குன்றும் அதன் உச்சியில் இருந்த கோவிலும்தான். 'நல்ல வளமையான அழகான ஊர்' என்று எண்ணிக் கொண்டாள் காயத்ரி. மலையடிவாரத்தில் கார் நின்றது.

''இறங்கும்மா.''

''கோவிலுக்கா பெரியப்பா. அப்பாம்மாவை பார்த்துட்டு குளிச்சிட்டு சாமி கும்பிட வரலாம் பெரியப்பா. காரை எடுக்கச் சொல்லுங்க.''

''அப்பாம்மா கோவிலில்தான் இருக்காங்கம்மா.''

''இந்தக் கோவிலிலா, ஏதாவது வேண்டுதலா பெரி யப்பா?''

''என்னத்தை வேண்டி.. நீ வாம்மா.''

எங்கே நின்றால் திரும்பவும் கேள்விக்கணைகளை வீச ஆரம்பித்து விடுவாளோ என்ற பயத்துடன் அதிலிருந்து தப்ப வேண்டி இரண்டிரண்டு படிகளாய் தாவி மேலே ஏற ஆரம்பித்தவரை விசித்திரமாய் பார்த்தபடி தொடர்ந்து படியேறினாள் காயத்ரி. மலையுச்சியை அடைந்தவுடன் கோவில் வாசலில் அவளது பெற்றோர் நிறைய உறவினர் களோடு நின்றிருப்பது தெரிந்தது. ஒரு கலகலப்பான சூழல் இருந்தது. அவள் மனதிற்கு நிம்மதியை அளித்தது. கவலைப்படும்படி ஏதுமில்லை. ஆனால் அவளது தாயாரின் முகம் தவிப்புடன் அவளைப் பார்த்தது.

''என்னம்மா என்ன விசயம்,'' கேள்வி கேட்டபடி தாயாரின் அருகே சென்றவளை அவசரமாய் அழைத்துச் சென்றாள் அவளது தாயார் நவநீதம். கோவிலின் அருகே அமைக்கப்பட்டிருந்த மண்டபத்தின் அருகேயிருந்த அறையில் குளிக்க வைத்து உயர்ந்த ரகப் பட்டுப்புடவை யொன்றை உடுத்த வைத்தாள். தலை வாரிப் பின்ன லிட்டு பூவை அலங்காரமாய் பின்னலைச் சுற்றி வைத்தாள். சில நகைகளை அணிவித்தாள். அங்கேயிருந்த கண் ணாடியில் தன்னைத்தானே பார்த்துக் கொண்ட காயத்ரி திகைத்தாள்.

''இது என்ன அலங்காரம் மணப்பெண் போல?''

மணப்பெண்ணேதான் என்று சிறிது நேரத்தில் அவளது தாய் அவளை அழைத்துச் சென்று கோவிலின் மைய மண்டபத்தில் ஒரு ஆணின் அருகே அமர வைத்த போது தெரிந்தது.

'என்ன நடக்கிறது' என்று அவள் திகைத்து நிமிரும் போது கெட்டிமேளம் கொட்டியது. நாதஸ்வர ஓசையுடன் மந்திரம் இணைந்து ஒலிக்க அவளருகே அமர்ந்திருந்த

ஆணின் கரங்கள் தாலியை எடுத்து அவள் கழுத்தில் கட்டியது. மூன்று முடிச்சுக்கள் போட்ட அந்தக் கரங்களுக்கு சொந்தக்காரனை அவளது வாழ்க்கையை சொந்தமாக்கிக் கொண்டவனை அந்த வினாடிதான் முதன் முதலாக விழியகல நிமிர்ந்து பார்த்தாள் காயத்ரி. அந்த விழிகள் கேட்டன.

"நீ யார்?"

## 3

**முகமுமறியாமல் அறிமுகமுமில்லாமல்**
**இணைந்தோம் வாழ்வினிலே இறைவனின்**
**திருவிளையாடலால்**
**'யாரோ நீ'யென்று வினவும் இனியவளே**
**நானும் உயிரென்று நீ சொல்லிடும் நாள் என்று?**

"நீ யார்?" என்று வினவும் அந்த விழிகளைப் பார்த்த படி மூன்று முடிச்சுக்களைப் போட்டான் பார்த்திபன்.

'பெண்ணே! எனக்கும் நீ யாரென்று தெரியாது. இந்த மூன்று முடிச்சு பந்தம் உனக்கும், எனக்குமிடையே ஏற் படும் என்பதை நேற்றுவரை நான் அறியாதவன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

"பெண்ணையும், மாப்பிள்ளையையும் அக்கினியை வலம் வரச் சொல்லுங்க," அய்யர் ஆணையிட அவளது கரம்பிடித்து வலம் வர ஆரம்பித்தான். அவனது கைப்பிடிக் குள் அடங்கிய அவளது மெல்லிய விரல்கள் நடுங்குவது தெரிந்தது. மெதுவாகத் திரும்பி அவளைப் பார்த்தான்.

'மிக இளவயது' என்று நினைத்துக் கொண்டான்.

'என்னை விட பனிரெண்டு வயதாவது இளையவளாய் இருப்பாள். இப்போதுதான் படிப்பை முடித்திருப்பதாகச் சொல்லிக் கொண்டார்களே. திடீர் கல்யாணம். அதிர்ந்து போயிருக்கிறாள். பாவம்! இரக்கத்துடன் பற்றியிருந்த அவளது விரல்களை லேசாக அழுத்தினான். மரவட்டையாய் அவள் விரல்கள் சுருண்டன. அவள் உடல் நடுங்கியது.

முப்பத்தி மூன்று வயதான பார்த்திபன் இது நாள் வரை திருமணத்தை தள்ளிப் போட்டதன் காரணத்தை உற வினரும், ஊராரும் நன்கு அறிவார்கள். அவனது இருபத்தி ஐந்தாம் வயதில் அவனுக்கு திருமணம் பேசி முடிக்கப் பட்டது. ஊரின் பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளை. ஒரே வாரிசு. அதுவும் சாவித்திரியம்மாளின் மணி வயிற்றில் பத்து வருடம் கழித்து உதித்த மகன். கோவில், குளம் சுற்றி விரதமிருந்து பெற்ற நன்முத்து. பார்த்திபனுக்கு பெண் கொடுக்க 'நீ, நானெ'ன்று போட்டி போட்டார்கள் பெண்ணைப் பெற்ற பெருந்தனக்காரர்கள். அவர்களில் அடுத்த ஊரிலிருந்த ரங்கநாதனின் மூத்த மகளைப் பேசி முடித்தார் பார்த்திபனின் தந்தை.

பெண் அழகாக இருந்தாள் படித்திருந்தாள். 'பணம் பணத்தோடு' என்று கணக்குப் போட்டார் பார்த்திபனின் தந்தை ஜம்புலிங்கம். விதி வேறு கணக்குப் போட்டு விட்டது. விவசாய பட்ட மேற்படிப்பு படித்துக் கொண் டிருந்த பார்த்திபன் படிப்பை முடித்துவிட்டு அது சம்பந்த மான மேற்படிப்பு ஒன்றை படித்துக் கொண்டிருந்தான். அது முடிந்து அவன் ஊர்வந்த ஒரு வாரத்தில் கல்யாணம் என்று முடிவாகியிருந்தது. திருமணத்திற்கு முதல்நாள் பரிசம் போட்டு நிச்சயதார்த்தம் வைத்துக் கொள்வதாக

இருந்தார்கள். மறுநாள் திருமண ஏற்பாடுகளோடு அன்றைய நிச்சயதார்த்த வேலைகளையும் இழுத்துப்போட்டு செய்ததாலோ என்னவோ திடீரென்று ஜம்புலிங்கம் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சரிந்தார். மருத்துவமனை செல்லும் வழியிலேயே அவர் இறைவனடி சேர்ந்து விட திருமணம் நின்று போனது. தந்தையின் இந்த முடிவு பார்த்திபனை உலுக்கிவிட்டது. திருமணத்தை புறக்கணித்தான். குடும்பம், தொழில் இரண்டும் பார்த்திபனின் பொறுப்பில் வந்தன. தொழிலை விருத்தி செய்தவன் கூடவே வேறு சில தொழில்களையும் தொடங்கினான். எடுத்த காரியம் எல்லாம் அவனுக்கு வெற்றியையே கொடுத்தன. தொட்ட தொழிலெல்லாம் துளிர் விட்டு தழைத்து வளர்ந்தது. பணம் பெருகியது. ஊரில் அவனது செல்வாக்கு உயர்ந்தது. எங்கும் எதிலும் முதல் மரியாதை.

ஆனால் மகனின் புகழ் பெருகப் பெருக அவன் தனியனாய் நிற்பது கண்ட தாயுள்ளம் தவித்தது. அல்லும், பகலும் அதையே நினைத்து துயர் கொண்ட சாவித்திரியம்மாள் மகனின் மனதை மாற்ற பல வகையிலும் போராடினார். அன்னை எதைக் கேட்டாலும் செய்து முடித்த மகன் திருமண விசயத்தில் பணிய மறுத்தான்.

சாவித்திரியம்மாளின் உடல் நலம் கெட்டது. படுக்கையில் விழுந்தவரை விசாரிக்க உறவினர்கள் வந்து சென்றனர். அந்த முறையில் நலம் விசாரிக்க சென்றவர்கள்தான் காயத்ரியின் பெற்றோர். காயத்ரியின் தந்தை கோவிந்தசாமி சாவித்திரியம்மாளின் சொந்த சித்தப்பாவின் மகன். சிறுவயதில் நெருக்கடி வந்து குடும்பச் சொத்துக்களை இழந்து நின்றபோது, ''தம்பி''யென்று சாவித்திரியம்மாள் தான் கோவிந்தசாமியை தாங்கி நின்றார். கோவிந்த

சாமியை படிக்க வைத்து வேலையில் சேர்ந்தவுடன் நவநீதத்தைப் பெண் பார்த்து திருமணத்தை முன்னே நின்று நடத்தி வைத்து தாய், தகப்பனை இழந்த கோவிந்தசாமிக்கு அனைத்துமாய் நின்றவள் சாவித்திரி. குடும்பச் சொத்தான பரம்பரை வீட்டை மீட்டுக் கொடுத்த போது "இந்த நன்றியை மறக்க மாட்டேன்க்கா," என்று தமக்கையின் கரம் பிடித்து அழுதவர் கோவிந்தசாமி. வேலையின் நிமித்தம் அவர் வெளியூர் சென்று விட குடும்பம் சென்னையில் அமைந்துவிட்டது. அவர் மட்டுமே அடிக்கடி சொந்த ஊர் சென்று வருவார். காயத்ரி வளர்ந்தபின் வந்ததில்லை. தமக்கையின் உடல்நலம் மிகச்சீர் கேடடைந்திருக்கிறதை அறிந்தவர் பதறிவிட்டார். காயத்ரி தனித்து இருந்தாலும் பரவாயில்லை என்று நவநீதத்துடன் பூங்குளம் வந்து சாவித்திரியம்மாளைப் பார்த்தார். தமக்கையின் கையைப் பிடித்துப் பேசிக் கொண்டிருக்கையில் பார்த்திபன் உள்ளே வந்தான். அப்போது யாரும் எதிர்பாராத காரியம் ஒன்றைச் செய்து விட்டார் சாவித்திரியம்மாள்.

தன் முந்தானையை எடுத்து விரித்து ஒரே நேரத்தில் கோவிந்தசாமியிடமும், பார்த்திபனிடமும் மடிப்பிச்சை கேட்டார்.

"கோவிந்தா! உன் அக்கா கேட்கிறேண்டா தம்பி! உன் மகளை என் மகனுக்கு கட்டிக்கொடு. பார்த்திபா! உன் காலில் விழுகறேண்டா மகனே! கோவிந்தன் மாமா மகளைக் கட்டிக்க."

இருவரிடமும் ஒரே நேரத்தில் கோரிக்கை வைக்கப்பட முதலில் தன்னிலைக்கு வந்தவர் கோவிந்தசாமிதான். சாவித்திரியம்மாளின் பாதம் பணிந்து அவர் மடிப்பிச்சை

கேட்பதை தடுத்தவர் அங்கிருந்த கோபால்சாமியை அழைத்துச் சொன்னார்.

''அண்ணா! என் உடம்பிலிருக்கிற உயிர் முதற் கொண்டு எங்க அக்காவுக்குத்தான் சொந்தம். என் மகளா அவளுக்குச் சொந்தமில்லைன்னு போகப் போகுது? போண்ணா, போய் இந்தக் கடிதத்தை காட்டி காயத்ரியை கையோடு கூட்டிவா. நாளை காலையிலே மலைக் கோவி லில் என் மகளுக்கும், பார்த்திபனுக்கும் கல்யாணம். அக்கா காயத்ரி இனி என் மகளில்லை. உன் மருமகள்.''

நவநீதம் திகைத்து நின்றாள். பணம் கொழிக்கும் இல்லம். ஆனாலும் மகளை ஒரு வார்த்தை கேட்காமல் மணம் பேசி முடிப்பதா? அதுவும் திடீர் திருமணமா? நடுத்தர குடும்பமென்றாலும் அவளும் ஒற்றை மகளைப் பெற்றவள். இருப்பினும் வாய் திறக்காமல் உணர்ச்சி களைக் கொட்டாமல் மௌனித்தாள். கணவனின் நன்றிக் கடன் அறிந்தவள். செய்நன்றிக் கடன் கழிக்க பெற்ற மகளை தாரை வார்த்துக் கொடுக்கத் தயரானார்.

இந்த முறை பார்த்திபன் மறுத்துப்பேச வழியில்லாமல் போனது. கல்யாண காரியங்களை ஊரே கூடி ஒரே நாளில் சிருஷ்டித்தது. உறவினர்கள் ஒன்று கூடினர். மறுநாள் கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு மாப்பிள்ளையாக அமர்த்தி வைக்கப்பட்டான். முன்பின் பார்த்தறியாத வெறும் வார்த்தைகளால் கேள்விப்பட்ட காயத்ரியின் கழுத்தில் மூன்று முடிச்சுக்களைப் போட்டு மனைவி யாக்கிக் கொண்டான்.

''சுவாமி தரிசனம், அம்பாள் தரிசனம் முடிஞ்சாச்சு. பொண்ணு, மாப்பிள்ளையை வீட்டுக்கு அழைச்சுட்டுப் போங்க,'' உறவினர் ஒருவர் உரக்கக் கூறுகின்றார். நேற்று வரை ஒருவரையொருவர் நினைத்துக் கூட பார்க்காத

அறியாத அந்த இருவரும் இன்று வாழ்க்கையில் இணைந்தவர்களாய் அந்த மாளிகையில் அடியெடுத்து வைத்தனர்.

ஆரத்தி எடுத்து உள்ளே அழைத்துச் சென்றவர்கள் சாவித்திரியம்மாளின் அறைக்கு அழைத்துச் சென்றனர். தன் அறைக்கு வந்து தாள் பணிந்த மணமக்களைக் கண்டு, ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார் அந்த மூதாட்டி. காயத்ரியின் முகத்தை இமை கொட்டாமல் பார்த்தவர் மகனிடம் திரும்பிச் சொன்னார்.

''அந்த மகாலட்சுமியே நம்ம வீட்டுக்கு வந்திட்டாப்பா. என் மனசு குளிர்ந்திருச்சு ஐயா!''

மன நிறைவுடன் சொன்னாள் அந்த மூதாட்டி. மனக்குறையுடன் திரும்பிக் கொண்டாள் காயத்ரி. அவள் மனம் கேட்டது.

''எனக்கு வேறென்ன வேண்டும்?''

## 4

**இது அவளறியாத தேசம்**

**அவளை அழைத்தது மலர்வாசம்**

**இவள் திருமகளின் உருவே**

**புகுந்த வீட்டினுள் நுழைந்தாள் திருவே**

''எனக்கு வேறென்ன வேண்டும்?'' தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள் காயத்ரி. மாளிகை போல் வீடு. அன்பான மாமியார். ஊரின் நன்மதிப்பையும், மரியாதையையும்

பெற்ற கணவன். செல்வ சீமாட்டியாய் வாழும் வாய்ப்பு. ஒரு பெண்ணுக்கு இதைவிட வேறென்ன வேண்டும்?

'ஒரு திருமணத்திற்கு அந்த மணப்பெண்ணின் சம்மதம் வேண்டுமா வேண்டாமா?' என்று அவள் மனம் அவளைத் திரும்பிக் கேட்டது. பெற்ற காரணத்தினால் பெற்றவர்களுக்கு பெண் அடிமையா? அதைப் பெற்ற வர்களை வளைத்துப்போட்டு ஒரு தாலிக்கயிறின் மூலம் அவளை சிறைப்பிடித்த அந்த ஆண்மகனுக்குத்தான் அவள் அடிமையா? உள்ளம் கொதித்தது.

அதே நேரத்தில் பார்த்திபனின் மனமும் கொதித்துக் கொண்டிருந்தது. காரணம் யதார்த்தமாய் கோபால்சாமி கூறிய வார்த்தைகள்.

"நல்லபடியா கல்யாணம் முடிஞ்சிருச்சு தம்பி. உங்க அம்மா மனசு குளிர்ந்துருச்சு. காயத்ரி பெண்ணைக் கூட் டிக்கிட்டு வரும்போது மனசு பக்கு, பக்குன்னு அடிச்சுக் கிச்சு. நல்லவேளை புள்ளைத் தகராறு பண்ணாம கல் யாணத்துக்கு ஒத்துக்கிச்சு."

"ஏன் மாமா அப்படி சொல்றீங்க. காயத்ரி என்ன சொல்லிரும்ன்னு நினைச்சீங்க."

"அட உனக்குத் தெரியாதா தம்பி. மெட்ராஸிலே ராஜதுரை மகன் அரவிந்தனுக்கு காயத்ரியை கட்டணும்னு எண்ணம். ஒரு கல்யாணத்திலே பொண்ணப் பார்த்துட்டு யாரு, எவருன்னு என் கிட்டத்தான் விசாரிச்சான். கட்டுற முறைன்னு நான்தான் சொன்னேன். கட்டினா இந்தப் பொண்ணைத்தான் கட்டுவேன்னு எங்கிட்டயே சொன் னான்னா பார்த்துக்கயேன்."

"அப்புறம்," தாடை இறுக அழுத்தமாய் கேட்டான் பார்த்திபன்.

''அப்புறமென்ன பையன் ஆசைப்படவும் ராஜதுரை பொண்ணு கேட்டு வீட்டுக்கு வரப்போறதா போனாவாரம் கோவிந்தன் சொன்னான். என்ன ஆச்சுன்னு தெரியலையே. நானொரு மடப்பய. இனி என்ன ஆனா என்ன? காயத்ரி கழுத்தில் நீ தான் தாலி கட்டணும்னு விதிச்சிருக்கும்போது அந்தப்பய ஆசைப்பட்டா முடியுமா?''

''காயத்ரி என்ன நினைச்சான்னு தெரியுமா?'' யோசனையாய் வினவினான் பார்த்திபன்.

''எனக்கு அது தெரியாது தம்பி. ஆனா ஒண்ணு வரும் போது எதுக்கு பெரியப்பா என்னைத் திடீர்னு கூட்டிப் போறீங்கன்னு என்னைப் போட்டு துளைச்சிருச்சு. அங்க மனசு இருந்துச்சோ என்னவோ,'' என்றவர்,

''கோபால்சாமி,''என்று யாரோ அழைக்க,

''இதோ வரேன்,'' என்றபடி போய்விட்டார்.

போனது அவர் மட்டுமல்ல பார்த்திபனின் நிம்மதியும் தான். அமிலத்தை பார்த்திபனின் இதயத்தில் ஊற்றி விட்டு அவர் சென்றுவிட அவன் தலையைப் பிடித்துக் கொண்டான். 'அரவிந்தன்' அவனை விட வயதில் இளையவன். பட்டணத்துக்காரன். சிறு வயதான பிறந்தது முதல் நகர வாழ்க்கையில் வாழ்ந்த காயத்ரிக்கு தன்னை விட அரவிந்தனே பொருத்தமானவனாக இருந்திருக்கக் கூடும். காயத்ரியிடம் ஒரு வார்த்தை 'இந்தத் திருமணத் திற்கு சம்மதமா' என்று முன்னரே கேட்டிருந்தால் அவள் ஒரு வேளை மறுத்திருப்பாளோ? இப்போது இந்தத் திருமணத் தால் அவளது சந்தோசம் சாகடிக்கப்பட்டு விட்டதோ?

பார்த்திபன் தவித்துப்போனான். விலகிப்போன திரு மண வாழ்க்கை உடும்புப்பிடியாய் அவனை பிடித்து விட்டது. மணந்தவளிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்க வேண்டும் என்று மனம் மறுகியது.

'கேட்டிருந்தால்..' அவன் மனம் இந்தக் கேள்வியைத் தான் கேட்டது. 'கேட்டிருந்தால் அவள் யாரைத் தேர்ந் தெடுத்து இருப்பாள்? பார்த்திபனையா, அரவிந்தனையா?'

இதற்கு விடை தெரியாமல் அவளோடு வாழ்வது சாத்தியமில்லாத விசயம். இடிந்துப்போன மனத்தோடு, நொறுங்கிப்போன உணர்வோடு அவன் இங்கிருக்க உரிமை மறுக்கப்பட்ட உணர்வோடு அவமதிப்பைப் பெற்ற பெண்மனமாய் அவள் அங்கிருக்க இரவு வந்தது. முதலிரவு. ஊர் பெரிய மனிதன். உள் மனதின் சுமை வெளியே தெரியக்கூடாது.

பார்த்திபன் அறைக்குள் நுழைந்தான். காயத்ரியின் முகம் பார்த்தான். கலங்கியிருந்த விழிகளை அவள் திருப்பிக் கொண்டாள். பார்த்திபன் துணுக்குற்றான். அழு திருக்கிறாளா? எதற்காக? அல்லது யாருக்காக? அரவிந்த னுக்காகவா? அவனது இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. அருகே சென்று நின்றான். காயத்ரி குனிந்த தலை நிமிரவில்லை.

''காயத்ரி.''

''ம்ம்ம்..''

''உன்னை எனக்குத் தெரியாது. கேள்விப்பட்டதுதான்.''

''நான் கேள்வி கூடப் படவில்லை,'' பச்சை மிளகாயின் காரம் தெறித்தது காயத்ரியின் வார்த்தைகளில். பார்த்திபன் திகைத்துப் போனான்.

''அப்படியா. எனக்குத் தெரியாது.''

''எதுதான் உங்களுக்குத் தெரியும்..?'' காயத்ரியின் மிடுக் கான பதிலில் பார்த்திபனின் ஆண்மை கோபம் கொண்டது.

''உன் அப்பாவை என் தாய் மாமனாக எனக்குத் தெரி யும். என் மகளைக் கட்டிக் கொடுக்கிறேன்னு அவர்தான்

முன் வந்தார்ன்னு தெரியும். இந்த கல்யாணம் திடீர் கல்யாணமா ஆனது உனக்கு மட்டுமில்லை எனக்கும்தான்.''

காயத்ரி திகைத்தாள். இப்படி ஒன்று இருக்கிறதா? பார்த்திபன் தொடர்ந்தான்.

''உன்னோடு பேச சம்மதம் கேட்க அவகாசமில்லாமல் போய்விட்டது என் குற்றமில்லை.''

காயத்ரி யோசித்துக் கொண்டிருக்க பார்த்திபன் அந்தக் கேள்வியை கேட்டான்.

''இப்போது சொல். உனக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டமா, இல்லையா?''

எதிர்பாராத சம்பவங்களால் மனம் குலைந்திருந்த காயத்ரி, சிறுவயது முதல்மனதில் நினைத்ததை வெளியில் கேட்டுவிடும் காயத்ரி, இன்னும் கல்லூரி பருவத்திலிருந்து வெளியே வராத பட்டாம்பூச்சியான காயத்ரி, தன் பதிலால் ஏற்படப் போகும் விளைவுகளை அறியாதவளாய், தான் இப்போது பார்த்திபனின் மனைவி என்பதை புரியாதவளாய் பதில் கூறிவிட்டாள்.

''ஏன் சம்மதமில்லைன்னு நான் சொல்ல மாட்டேன்கிற தைரியமா? என்னடா கழுத்தில் தாலி கட்டிவிட்டோம் இனி இவள் சம்மதம் என்றுதானே சொல்ல வேண்டும் என்ற எண்ணமா?''

பார்த்திபன் உச்சந்தலையில் அடிபட்டது போல் பொறிகலங்கிப்போனான். ஆக தான் அவள் வாழ்வைக் குலைத்திருக்கிறோம். திருமணத்திற்கு முன் கேட்டிருந்தால் அவள் அரவிந்தனைத்தான் மணப்பேனென்று சொல்லியிருப்பாள். ஒரு சிறு பெண்ணின் வாழ்வில் விளையாடி விட்டோம். பார்த்திபன் சரேலென்று ஜன்னலருகில் போய் நின்று நீண்ட நெடும் மூச்சுக்களைவிட்டு

தன்னை அமைதிப்படுத்திக் கொண்டான். பின் மெதுவாகத் திரும்பி காயத்ரியைப் பார்த்தான்.

''உன் மனதிலிருப்பதை மறைக்காமல் சொல்லிட்ட காயத்ரி. நல்லது. இந்த மனகுமைச்சலோடு நாம் வாழ்க்கையை ஆரம்பித்தால் நன்றாயிருக்காது.''

இவன் ஏதோ சொல்கிறான் என்று மட்டும் உடலும் மனமும் களைத்திருந்த காயத்ரிக்குப் புரிந்தது. தலைபாட்டுக்கு 'ஆமா'மென்று ஆட மனமோ 'தூங்கினால் நன்றாயிருக்கும்' என்று நினைத்தது.

''ஆனால் ஒன்றை நீ நினைவில் வைத்துக் கொள்வது முக்கியம். கல்யாணம் என்பது ஒரு வழிப்பாதை.'' அவன் சொல்லிக் கொண்டிருக்க 'இது என்ன தேவையில்லாத அறிவுரை' என்று எரிச்சலுற்றாள் அவள். திருமணம் என்பது வாழ்வில் ஓர் முறை என்பதை அவளும் அறிந்தவள்தானே.

பார்த்திபன் தொடர்ந்தான். ''அதுவும் என்னுடன் ஆன உன் கல்யாணம் நடந்தது நடந்ததுதான் மாற்ற முடியாதது. நீ திரும்பிப் போக முடியாத கல்யாணப் பாதை இது. மறந்துவிடாதே.''

'கடவுளே' என்று நினைத்துக் கொண்டாள் காயத்ரி. யார் திரும்பிப் போக நினைக்கிறார்களாம். அவள் மனதிலிருப்பதை அறியாத பார்த்திபன் சொன்னான்.

''இந்த அறைக்குள்ளேயே துணி மாத்தற ரூமிருக்கு. நீ அதை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.''

''சரி.''

''இந்த ரூமுக்குள்ள நாம் பேசிக்கிட்டது வெளியே தெரிய வேண்டாம்.''

'இப்படியும் இருப்பானா. யாராவது புருசன் பெண்டாட்டி பேசிக் கொள்வதை வெளியில் சொல்வார்களா' பல்லைக் கடித்துக் கொண்ட காயத்ரி எரிச்சலுடன்,

''அவ்வளவுதானே. நான் எதையும் சொல்ல மாட்டேன். நீங்கள் வாயைத் திறக்காமலிருந்தால் சரி. இப்போது ஆளை விடுகிறீர்களா. நான் தூங்கப் போக வேண்டும்,'' என்று திரும்பினாள். ''ஒரு நிமிசம்,'' என்று தடுத்தான் பார்த்திபன்.

''இன்னும் என்ன?''

''என்னோட அம்மாவுக்கு உடம்பு சரியில்லைன்னு உனக்குத் தெரியும்ன்னு நினைக்கிறேன்.''

''அதனால்தான் இந்த அவசரக் கல்யாணம் நடந்தது. அப்புறம் தெரியாமல் போகுமா?''

''அந்தக் கோபத்தை என் அம்மாவிடம் காட்டி விடாதே?''

''என்னது?'' என்று முறைத்தாள் காயத்ரி. 'இவன் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான்?' பெரியவர்கள் அதிலும் அத்தை அவர்களிடம் கோபத்தை காண்பிப்பவளா அவள்?

''என் வீட்டில் என்னை அப்படி வளர்க்கவில்லை,'' என்றாள் இடக்காக.

''நன்றி. மகன் நல்லா வாழணும்னு நினைச்சு இந்தக் கல்யாணத்தை நடத்தியிருக்காங்க. அவங்க கிட்ட நீ நல்ல மருமகளா நடந்துக்கணும்னு கேட்டுக்கறேன் காயத்ரி. அதுக்காக எனக்கு நல்ல மனைவியா நடந்துக்கன்னு சொல்ல வரவில்லை. பாவம். வயசானவங்க...'' அவன் கெஞ்சுதலாய் இழுக்க அதற்குமேல் தாங்க மாட்டாதவளாய் காயத்ரி பொரிந்து தள்ளினாள்.

''எனக்கும் இங்கிதம் தெரியும். அத்தை என்ற பாசம் உண்டு. பெரியவங்க கிட்ட மரியாதையாய் நடந்துதான் என் வழக்கம். இனிமே இந்த மாதிரி ராமாயணம் எல்லாம்

என்கிட்ட படிக்க வேண்டாம். சொல்லிக் கொடுத்து புதி தாய் மரியாதை தெரிந்துக்கிற மாதிரி நான் வளரவில்லை. என் ரத்தத்திலேயே அது ஊறிப்போயிருக்கு. அத்தை என் பொறுப்பு. இப்போ வழி விடறீங்களா? நான் தூங்கப் போகணும்.''

அவ்வளவுதான் அவர்களது உரையாடல் முடிந்து விட்டது. அவள் உடை மாற்றும் அறைக்குள் சென்றுவிட்டாள். சென்ற வேகத்தில் உடைமாற்றி குளித்தவள் பயணக் களைப்பிலும் விழா அயர்விலும் படுத்தவுடன் உறங்கி விட்டாள்.

பார்த்திபன் இரவு பூராவும் தூங்காமல் நடை பயின்று கொண்டிருந்தான். அலங்கரிக்கப்பட்ட கட்டில் அவனைப் பார்த்து சிரித்தது. ஒரு பெருமூச்சோடு அங்கிருந்த சோபாவில் சாய்ந்தவன் அப்படியே தூங்கிவிட்டான்.

அதிகாலையில் கண்விழித்த காயத்ரி முதலில் இது யார் வீடு நாம் ஏன் இங்கிருக்கிறோம் என்று ஒரு வினாடி தூக்கம் கலையாமல் குழம்பினாள். கண்ணில் பட்ட திருமாங்கல்யம் அவள் யாரென்பதையும் இது அவள் வீடு என்பதையும் கூற எழுந்து கொண்ட காயத்ரி தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

## 5

**பெண் வாழ்வில் பிறந்த வீடு முதல் பகுதி**
**ஆண் சேர புகுந்த வீடு மறு பகுதி**
**இரண்டையுமே போற்றி வாழ்தல் அவள்பாடு**
**இதுதானே தமது நாட்டின் பண்பாடு.**

தனக்குள் சிரித்துக் கொண்டாள் நவநீதம். மகளின் விருப்பம் கேட்காமல் திருமணம் முடித்து விட்டோமே என்று மறுகிக் கொண்டிருந்தவள் காலையில் எழுந்ததும் கணவரோடு சாவித்திரியம்மாளின் அருகே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாலும் மகளின் வரவை 'பக்பக்' கென்று அடிக்கும் மனதோடு எதிர்பார்த்துக் கொண்டிருந் தாள். ஆனால் மகள் வரவும் குளித்து முடித்த அவளது கோலமும், அயர்வாய் தெரிந்த விழிகளும் நிறைவைத் தர மகிழ்ந்து போனாள். கோவிந்தசாமி நவநீதத்திடம் 'பார்த் தாயா' என்பதுபோல் விழிகளால் வினவ புரிந்ததற்கு அடையாளமாய் தலை அசைத்துக் கொண்டவள்தான் தனக்குள் சிரித்தாள்.

சிறிது நேரத்தில் பார்த்திபனும் இறங்கி வர எல்லோரும் ஒன்றாக அமர்ந்து காலை சிற்றுண்டியை சாப்பிட்டார்கள். உணவு முடிந்ததும் பார்த்திபன் கிளம்பத் தயாராக கோவிந்தசாமி அவசரமாய்,

''மாப்பிள்ளை, எப்போ மறுவீடு வருவீங்கன்னு தெரிஞ்சா நல்லாயிருக்கும்,'' என்றார்.

''இல்லை மாமா. எனக்குத் தொழிலில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டி இருக்கு. அம்மாவுக்கு உடம்பு சரியில்லாத காரணத்தாலே சரியா தொழிலை பார்க்க முடியலை. இப்போ காயத்ரி வந்தாச்சு. அம்மாவை காயத்ரி பொறுப்பில் விட்டுவிட்டு நான் தொழில் கவனம் காட்ட ணும். அதனால நாங்க ரெண்டு பேரும் இப்போ வர தோதுப்படாது,'' என்றான் பார்த்திபன்.

காயத்ரியின் முகம் வாடிவிட்டதைக் கண்ட நவநீதம் அவசரமாய் சாவித்திரியைப் பார்த்து,

''என்னங்கண்ணி. தம்பி இப்படி சொல்லிட்டாங்க. மறுவீட்டுக்கு சென்னைக்கு வந்துதான் ஆகணும்

அண்ணி. அங்கே அக்கம் பக்கத்தில் இருப்பவங்க கேட்க மாட்டாங்களா? உங்க தம்பி பேங்கில் வேலை பார்க்கிறவரு. கூட வேலை பார்க்கிறவங்க கேட்க மாட்டாங்களா. சென்னைக்கு மறுவீடு வந்திட்டு நாங்க ஏற்பாடு பண்ற கல்யாண வரவேற்பில் கலந்துக்கிட்டாத்தான் நல்லாயிருக்கும் அண்ணி,'' என்று கூறினாள்.

நவநீதத்தை நேராகப் பார்த்த பார்த்திபன்,

''அத்தை இப்போது நகர முடியாத சூழ்நிலை. எப்படியும் இன்னும் நான்கு, ஐந்து மாதங்கள் நாங்க இரண்டு பேருமே இங்கிருந்து நகர முடியாது. வரவேற்பையெல்லாம் அப்புறம் வைத்துக் கொள்ளலாம்,'' என்று கூறினான்.

''அது சரி ஆறுமாதம் கழித்து திருமண வரவேற்பாம். சொன்னால் சிரிப்பார்கள்,'' என்று முணுமுணுத்தாள் காயத்ரி. அது அருகே நின்றிருந்த பார்த்திபனின் காதில் மட்டும் நன்றாக விழுந்தது. ஆனால் அவன் முகத்தில் எந்த வித உணர்ச்சியையும் பிரதிபலிக்காமல்,

''அப்போ காயத்ரி நான் கிளம்பட்டுமா,'' என்று அவளிடம் சொல்லிவிட்டு எல்லோருக்கும் பொதுவாய் தலை அசைத்தபடி போயே போய் விட்டான்.

கலக்கமாய் பார்த்த நவநீதத்தை அருகே அமர்த்திக் கொண்ட சாவித்திரி,

''விட்டுப் பிடிக்கலாம் நவநீதம். அவன் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டு கல்யாணம் பண்ணிக்கிட்டதே பெரிசு. இதையெல்லாம் பெரிசு பண்ணாதே,'' என்று சமாதானம் செய்தார்.

''ஆனாலும் அண்ணி, நாலுபேர் நாலு விதமாகப் பேசுவார்களே,'' என்று நவநீதம் கலங்க.

''நாலு பேர் நாலு விதமா பேசினா பேசிட்டுப் போறாங்க. மத்தவங்களுக்காக நாம வாழலை. நமக்காகத்தான் வாழ

றோம். பொண்ணு கல்யாண போட்டோ, வீடியோவை வர்ரவங்க போறவங்களுக்கு காட்டு போதும். இப்போ ஊருக்கு கிளம்புகிற வழியைப் பாரு,'' என்று கோவிந்த சாமி அதட்டினார்.

''என்னடா தம்பி அதுக்குள்ள கிளம்பிட்ட,'' என்று சாவித்திரி அதட்ட, ''இல்லைக்கா, லீவு போட்டது ஒருநாள்தான். இப்போ கல்யாணத்திற்காக மேற்கொண்டு இரண்டு நாள் எடுத்துவிட்டேன். ஆடிட் சமயம். போய் விட்டு இரண்டு மாதத்தில் வரப்பார்க்கிறேன்,'' என்றார் கோவிந்தசாமி. மறுத்துப் பேச முடியாமல் நவநீதம் கிளம்ப, கோவிந்தசாமி தமக்கையின் அருகில் வந்தார்.

''அக்கா,'' என்றார் தழுதழுத்த குரலில்.

''என்னடா,'' என்றாள் சாவித்திரி ஆதுரத்துடன்.

''காயத்ரி குழந்தைக்கா. நீ கேட்டதும் உன்கிட்ட ஒப் படைச்சிட்டேன். இதுவரைக்கும் அவ கண்ணில இருந்து ஒரு சொட்டு கண்ணீர் வர நான் விட்டதில்லைக்கா.''

''இனியும் வராதுடா தம்பி. நானிருக்கேன் கவலைப் படாதே. காயத்ரி என் மருமகளில்லை. மகள் போதுமா. நிம்மதியா போயிட்டு வாங்கடா.''

அறிவுரைகள் பல சொல்லிவிட்டு பெற்றவர்கள் கிளம்பிச் சென்றுவிட புதிதான இடத்தில் காயத்ரி தனி யாக நின்றாள். பசுவைப் பிரிந்த கன்றாக பரிதவித்தவளைப் பார்த்த சாவித்திரியம்மாள் மருமகளை அருகே அழைத்தார்.

''என்னங்கத்தை,'' கண்ணைத் துடைத்தவாறு காயத்ரி வினவ.

''இங்கே வாம்மா. ஏன் கண் கலங்குது. அப்பாம்மா நினைவா,'' என்று ஆதரவாய் கேட்டார் சாவித்திரி.

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை அத்தை.''

''வாய் இல்லைன்னு சொன்னாலும் உன் முகம் காட்டிக் கொடுக்குதே. என்ன செய்யலாம் சொல்லு? பெண்கள் நாற்று மாதிரி. ஒரு வீட்டிலிருந்து பிடுங்கி இன்னொரு வீட்டில் கல்யாணம்கிற பெயரில் நட்டு விடுவாங்க. அந்த நெல் பயிர் மாதிரி செழிச்சு வளர்ந்து வாழ வந்த வீட்டைக் காப்பாத்த வேண்டியது அந்தப் பொண்ணோட பொறுப்பு.''

கிராமத்துப் பெண்மணி அழகாய் உவமை சொன்னாள். நகரத்தில் வளர்ந்தவள் வியப்போடு கேட்டுக் கொண்டாள்.

''இப்படி பக்கத்தில் உட்காரும்மா,'' காயத்ரி அருகே அமர்ந்து கொண்டாள். அவளது கையைப் பிடித்துக் கொண்டு அவள் முகத்தையே உற்றுப் பார்த்த சாவித்திரி,

''ஏம்மா. உன் சம்மதம் கேட்காம கல்யாணம் பண்ணிட் டாங்களேன்னு நினைக்கறியா?'' என்று கேட்டார்.

தூக்கி வாரிப் போட்டது காயத்ரிக்கு.

''ஏன்... ஏன்.. அத்தை அப்படிக் கேட்கறீங்க.''

''படிச்ச பொண்ணு. எந்தம்பி செல்லமா வளர்த்த பொண்ணு. உன் குணம் என்னன்னு எனக்குத் தெரியாதா கண்ணு. அப்படி ஏதும் கோபமிருந்தா அந்தக் கோபத்தை என்மேல் காட்டும்மா. ஏன்னா இந்தக் கல்யாணம் திடீர் கல்யாணமா என்னாலதான் நடந்துச்சு. என் கட்டளையை என் புள்ளை மீறுவான். உங்க அப்பன் மீற மாட்டான். மடிப்பிச்சை கேட்டேன். பிச்சை போடும் கை பிச்சை கேட்பதை உங்கப்பன் சகிக்கலை. பொண்ணைக் கொடுத் துட்டான். நீயெப்படி உங்க அப்பனுக்கும் சூழ்நிலைக்கும் கட்டுப்பட்டியோ அப்படித்தான் எம்புள்ளயும் எனக்கும் சூழ்நிலைக்கும் கட்டுப்பட்டான். ஏதாச்சும், கோபம், குறையிருந்தா எம்மேல காட்டிரும்மா. எம்புள்ளை மேல

காட்டிராதே. அவன் இந்த விசயத்தில் ஒரு பாவமும் அறியாதவன். நீ மழையாயிருந்து அவனை குளிர வைக்கணும் தாயி. வெயிலாயிருந்து பிளந்துடாதே காயத்ரி.''

காயத்ரி விக்கித்துப் போனாள். அந்த ஊரின் மகாராணிக்கு நிகரான பெரிய வீட்டம்மாள் தன் மகனுக்காக மடிப்பிச்சை கேட்டாளா? சாவித்திரி தொடர்ந்து பேசினார்.

''அவனுக்கு கல்யாணம் பேசி முடிச்சோம்மா. மறுநாள் கல்யாணம்ன்னா முதல் நாள் பார்த்திபனோட அப்பா நெஞ்சு வலில்லே போயிட்டாரும்மா. பார்த்திபனால அதை மறக்க முடியல. எம்மகன் கல்யாணத்தையே வெறுத்து ஒதுக்கிட்டான் தாயி. அவன் சம்மதிச்சு இந்த வீட்டில் விளக்கேத்த ஒரு மகராசி வரமட்டாளான்னு நான் வேண்டாத தெய்வமில்லை. கடைசியில் தெய்வம் கண் திறந்திடுச்சு. எங்க வீட்டுக்கு மகாலட்சுமியா நீ வந்திட்டே. இந்தா கண்ணு... இதைப்பிடி.''

சாவித்திரி தலையணைக்கு அடியிலிருந்த சாவிக் கொத்தை எடுத்துக் கொடுத்தார்.

''இது என்னது அத்தை.''

''சாவிக் கொத்தும்மா. இந்த வீடு இனி உன் பொறுப்பு.''

காயத்ரி ஒரு கணம் திகைத்து பின் கலகலவென்று நகைத்தாள்.

''என்னம்மா சிரிக்கறே?''

''எனக்கு இதெல்லாம் பழக்கமில்லை அத்தை. எனக்கு என்ன தெரியும்? நேத்து வரைக்கும் எங்க அம்மாதான் வீட்டு நிர்வாகத்தை பார்த்துக்கிட்டாங்க. நான் படிக்க, சாப்பிட, தூங்க என்று இருந்து விட்டேன். இவ்வளவு பெரிய வீட்டை கட்டிக் காப்பாற்ற என்னால் எப்படி முடியும். நீங்க கத்துக் கொடுங்க நான் கத்துக்கறேன். நீங்கதான்

எப்போதுமே இந்த வீட்டுக்கு முதலாளி. என்னை வழி நடத்துங்கள் போதும்.''

சாவித்திரி தன் மருமகளை பெருமையுடன் நோக்கினார். பார்க்க சிறு பெண்போல் தெரிந்தாலும் எவ்வளவு பக்குவமான பேச்சு. வந்த மறுநாளே அதிகாரம் பண்ணத் துடிக்கும் மக்கள் மத்தியில் இப்படியும் ஒருத்தி. கோவிந்தசாமியின் நேர்மையையும் நவநீதத்தின் பண்பாட்டையும் தன்னுள் வளர்த்துக் கொண்டிருக்கும் மருமகளை பிரியமுடன் பார்த்தாள். வாசலில் அரவம் கேட்டது. திரும்பிப் பார்த்தனர். பார்த்திபன் வந்து கொண்டிருந்தான்.

''அத்தை மாமாவை காணோமே எங்கேம்மா?''

''ஊருக்குப் போயிட்டாங்கப்பா.''

''என்னம்மா இது என்கிட்டக் கூட சொல்லாமல் அதுக்குள்ள போயிட்டாங்க. என்மேல் கோபமா?''

''அப்படியெல்லாம் இல்லைடா தம்பி. மாமனுக்கு வேலை இருக்காம். அதான் கிளம்பிட்டான். நீ மனசை போட்டு குழப்பிக்காதே. போய் சாப்பிடு. காயத்ரி சாப்பாடு எடுத்து வையம்மா.''

''ஏன் வீட்டில் வேலையாள் இல்லையா? அவளைப் போய் தொந்தரவு செய்வானேன்?''

காயத்ரி வெடுக்கென்று திரும்பினாள்.

''ஏன் அத்தை மாமா இருந்தபோது அவருக்கு சாப்பாடு போட்டது எந்த வேலையாள்?''

சாவித்திரி குதூகலமாய் பதில் சொன்னாள்.

''அந்த வேலையாள் பெயர் சாவித்திரி. சாகும் வரைக்கும் என் கையாலே பரிமாறினாத்தான் என் வீட்டுக்காரருக்கு சோறு தொண்டையில் இறங்கும்.''

'பார்த்தாயா' என்பதுபோல் பார்த்திபனை பார்த்து விட்டு பின்னலை ஒரு சுண்டு சுண்டி பின்னால் விட்ட காயத்ரி சாப்பாட்டு அறையை நோக்கி நடந்தாள். பார்த்திபன் பல்லைக் கடிக்க சிறிசுகளின் விளையாட்டை கண்டும் காணாதவள் போல் நமுட்டு சிரிப்பு சிரித்தபடி சாவித்திரி அமர்ந்திருந்தாள்.

சாப்பாட்டு மேஜைக்கு கை கழுவி விட்டு வந்து அமர்ந்த பார்த்திபன்,

''என்ன அதிகாரம் தூள் பறக்குது?'' என்றான்.

''இது ஆரம்பம்தான் போகப்போக பாருங்க,'' என்றாள் காயத்ரி.

''அப்படியா. என்ன செய்து விடுவாய்.''

''அதைப் பார்க்கத்தானே போறீங்க.''

கண்களில் குறும்பு மின்னச் சொன்னவளை விசித்திர மாய் பார்த்தான் பார்த்திபன். இரவுதான் அவனை விருப்ப மில்லாமல் திருமணம் செய்து கொண்டதாக கூறினாள். விடியற்காலை குளித்து முடித்து மங்கலமாய் தாயின் அருகே சென்றுவிட்டாள். மதியம் என்னவென்றால் ஆண் டாண்டு காலம் குடும்பம் நடத்தியதுபோல் ஆளுகை செய்கிறாள். புரியாத புதிராக இருக்கிறாளே. சிந்தனை செய்தபடி சாப்பிட்டவனுக்கு விக்கியது. அருகில் நின்று பரிமாறிக் கொண்டிருந்த காயத்ரி உடனே அவன் தலை யில் தட்டியபடி,

''தண்ணீர் குடிங்க,'' என்றாள். தண்ணீரைக் குடித்து விட்டு அவளை நிமிர்ந்து பார்த்தவன்,

''சந்தடி சாக்கில் அடிச்சுப் பார்க்கலாம்னு ஆசைபோல,'' என்றான்.

''அது சரி புதுப் பெண்டாட்டி எதெதுக்கோ ஆசைப்படு வாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன். அடிச்சுப் பார்க்கவும் ஆசைப்படுவாங்கன்னு இப்போதான் கேள்விப்படறேன்,'' என்றாள் காயத்ரி.

பதில் சொல்லாமல் சாப்பிடும் பாவனையில் குனிந்து கொண்ட கணவனை பார்வையால் அளவெடுத்தாள் காயத்ரி. மாநிறம். திருத்தமான முகம். ஆறடி உயரம். கம்பீரமான தோற்றம். கண்டிப்பை மட்டுமே காட்டும் விழிகள். கண்டிப்பை மட்டுமே காட்டும் அந்த விழிகள் காதலைக் காட்டுமா? தலையை குலுக்கி தந்நிலைக்கு திரும்பினாள் காயத்ரி. அவளிடம் அசைவை உணர்ந்து அவன் விழிகள் அவளை ஏறிட்டு நோக்கின. அவன் விழிகளை பார்க்க முடியாமல் எங்கிருந்தோ வெட்கம் வந்து அவளை சூழ்ந்து கொண்டது. முகச்சிவப்புடன் ஏதோ வேலையிருப்பதுபோல் உள்ளே விரைந்தவள் தன்னை எண்ணி தானே வியந்து போனாள்.

'ஒரே நாளில் அவன் மேல் காதல் கொண்டு விட் டேனா?' 'என்ன இது?'

# 6

**மயங்குது நெஞ்சம்**
**தயங்குது கொஞ்சம்**
**மன்னவன் தாள்களில்**
**அவள் மனம் தஞ்சம்.**

''என்ன இது?'' என்று கேட்டான் பார்த்திபன். அவன் குளித்து வருமுன்னர் அவனுக்கான உடைகளை தயாராய் எடுத்து வைத்திருந்தாள் காயத்ரி.

"ஏன் பார்த்தா தெரியலையா? உங்க பேண்ட் சர்ட்."

"அது தெரியுது. அதை நீயேன் எடுத்து வைக்கிற."

"ஏன் எடுத்து வைத்தால் என்ன?"

"எனக்குப் பிடித்ததை நான் எடுத்து உடுத்திக்குவேன். நீ சிரமப்பட்டுக்க வேணாம்."

"நீங்க உடுத்திக்கறது உங்களுக்குப் பிடிச்சிருந்தாப் போதுமா. எனக்கும் பிடிக்கணும்."

முறைத்தான் அவன். ஆனாலும் முறைத்துக் கொண்டே அவள் எடுத்து வைத்த துணியைத்தான் உடுத்தினான்.

கடைக்கண்ணில் அதை கவனித்துக் கொண்டிருந்த காயத்ரிக்கு இதழோரம் முறுவல் தோன்றியது. அதை கலைப்பதுபோல் பார்த்திபன் கடுமையாகப் பேசினான். "ரூமிற்கு வெளியே அம்மா முன்னாடி நடித்தால் போதும் காயத்ரி. உள்ளே நீ நீயாய் இரு. எனக்காக எந்த வேலையை யும் இங்கே நீ செய்ய வேண்டாம்," அவன் அழுத்தமாகக் கூற நொடிப் பொழுதில் காயத்ரியின் புன்னகை மறைந்தது. கன்னத்தில் அடித்தால் கூட வலி சிறிது நேரத்தில் மறைந்துவிடும். எண்ணத்தில் அடித்தால்..? கலங்கிய விழிகளை அவன் கண்டுவிடாமல் மறுபுறம் திருப்பிக் கொண்ட காயத்ரி,

"வேலைக்காரி வெளியேதான் வேலை செய்ய வேண் டும் என்ற கட்டாயமொன்றுமில்லை. உள்ளேயும் செய்ய லாம்." என்றாள். பார்த்திபன் சினத்துடன் பேசினான்.

"நீ வேலைக்காரியா?"

"அப்புறம் யார்? வீட்டுக்காரியா?"

"உன் கழுத்தில் உள்ள தாலியைக் கேட்டுப் பாருடி. அது சொல்லும் நீ யாரென்று," அவன் கோபத்தில் முகம்

சிவக்க நிதானமிழந்து பேச அந்தப் பேச்சு காயத்ரிக்கு உவப்பானதாக மாறிவிட்டது. சென்ற நிமிட வேதனை மறைந்தவளாய் உள்ளத்தில் உவகை பொங்க அவனை மேலும் உசுப்பேற்றினாள்.

''இந்த வக்கனைப் பேச்சுக்கொன்றும் குறைவில்லை. நின்றால் குத்தம். நடந்தால் குத்தம். இந்த வீட்டில் எனக்கு என்ன உரிமையிருக்கிறது. நான் என் வீட்டிற்குப் போகிறேன்.''

அவளது தந்திரம் புரியாமல் அவன் சினம் தலைக்கேற அவளது வலையில் மாட்டினான்.

''எதுடி உன் வீடு?''

''ஏன் எங்க அப்பாம்மா இருக்கிற வீடுதான்.''

''அது போன வாரம் வரைக்கும். இனி சாகும் வரை இதுதான் உன் வீடு தெரிஞ்சுக்கோ.''

''என் வீடுன்னா உள்ளே ஒரு வேசம் வெளியே ஒரு வேசம்னு ஏன் நான் நடிக்கணும்? என் இஷ்டம் போலே எல்லா இடத்திலும் இருப்பேன். என் மனதுக்கு பிடிச்சதை செய்வேன்.''

''அம்மா தாயே! நீ என்ன வேண்டும்னாலும் செய். நான் இனிமே ஏன்னு கேட்கலை. இனி வேலைக்காரி.. அது.. இதுன்னு ஏதாவது பேசினே நடக்கிறதே வேற. சொல்லிட்டேன்.''

பார்த்திபனுக்கு உடல் நடுங்கியது. ஊரில் எல்லாம் இவனை கண்டால் நடுங்கிப் போகிறார்கள். ஒரு சிறு பெண். என்னமாய் வாய் பேசுகிறாள். வாய்க்குள் கோபமாய் அவன் முணுமுணுத்துக் கொண்டு இருக்க, கடுகடுப்பாய் முகத்தை வைத்துக் கொண்டு படுக்கையை சரி செய்து

கொண்டிருந்த காயத்ரி மனதிற்குள் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டு இருந்தாள்.

'போரா புரிகின்றாய் கணவனே. வாட்போரில் பெண்கள் தோற்றுவிடலாம். சொற்போரில்..? பேசித்தான் பாரேன். ஜெயிப்பது யாரென்று பார்க்கலாம்.'

''இங்கே இருந்த பைல் எங்கே?''

''இதோ, அலமாரியை சுத்தம் பண்ணினேன். எல்லாம் கலைந்து கிடந்தது. ஒழுங்குப் படுத்தி வைத்தேன்.''

''என் வாட்ச் எங்கே.'' ''இதோ.''

''செல்போன் எங்கே.'' ''இதோ.''

''பேனா..?'' ''இதோ.''

''நீயேன் சுத்தம் பண்றேன்னு அலட்டிக்கிட்டு இதையெல்லாம் இடம் மாத்தி வைக்கிறே?''

''ஊம். நீங்க கேட்டால் இதோ, இதோன்னு எடுத்துக் கொடுக்கணும்னு எனக்கு ஆசை பாருங்க. இடுப்பு ஒடிய ரூமை சுத்தம் பண்ணினா சொல்லமாட்டிங்க.''

''நான் சுத்தம் பண்ணச் சொன்னேனான்னுதான் கேட்டேன்.''

''குப்பைக்கு மத்தியில் என்னால் குப்பை கொட்ட முடியாது. அதனால் சுத்தம் பண்ணினேன்.''

''என் ரூம் குப்பையாயிருந்தா உனக்கென்ன? துணி மாத்தற ரூம்தானே உன்னது. அதை சரி பண்ண வேண்டியதுதானே?''

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த பார்த்திபன் சரியான இடத்தில் அடித்து விட பேச்சின்றி நின்றுவிட்டாள் காயத்ரி. சுதாரித்துக் கொண்டு,

''சாப்பாடு போட்டு, தங்க இடம் கொடுத்திருக்கீங்க பதிலுக்கு வேலை செய்து கழிக்கலாம்னுதான்,'' என்று

கண் இமைகளை மூடி மூடித் திறந்தபடி அப்பாவியாய் பதில் சொன்னாள்.

இப்போது பேச்சிழந்து முறைத்தது பார்த்திபன்.

''ஏண்டி உயிரை எடுக்கிற. இப்படிப் பேசாதேன்னு ஒரு தடவை சொன்னா கேட்கமாட்டியா?''

''உயிரை எடுக்கிறது நீங்களா நானா? இப்படி என்னை பேச வைக்காதீங்கன்னு நானும் எத்தனை தரம் சொல்வது?''

சாட்டை போன்ற பின்னலை அலட்சியமாய் தூக்கி பின்னால் போட்டுக் கொண்டே பதில் சொன்னவளை அவள் பாராதபோது இவன் பார்த்தான். மிக அழகான நிலவு முகம். நீண்ட பின்னல், பெரிய பொட்டிட்டு நேர் வகிட்டில் குங்குமம் தீற்றி, கழுத்தில் அவன் கட்டிய மாங்கல்யம் மின்ன, கால்களில் அவன் போட்டு விட்ட மெட்டி யொலிக்க 'நானும் மனைவி' யென்று மங்கலமாய் முன்னே நின்றவளை அள்ளி அணைக்க வேண்டும் போல் அவன் மனதில் வேகம் எழ அவசரமாய் அதை அழித்துக் கொண்டு எழுந்தான். இனியும் தாமதித்தால் வசமிழந்து விடுவோம் என்று தோன்ற அவள் முகம் பார்க்காமல் கிளம்பினான். காயத்ரி ஓட்டமும் நடையுமாய் அவனைத் தொடர்ந்தபடி,

''மதியம் சாப்பிட வருவீங்க இல்ல'' என்று கேட்டாள்.

''வரமாட்டேன். கொடுத்துவிடு.''

''மதியம் வர மாட்டிங்களா? அப்போ சாயந்திரம் சீக்கிரம் வந்து விடுங்கள்.''

''எதுக்கு? எனக்கு வேலையிருக்கு.''

''எனக்கு டவுனுக்கு போகணுங்க...'' காயத்ரியின் கெஞ்சல் குரல் அவன் இதயத்தை துளைத்தது. தன்னை சிரமப்படுத்தி கட்டுப்படுத்திக் கொண்டவன்,

''கார் அனுப்பறேன் போயிட்டு வா'' என்றான்.

''நீங்கள் இல்லாமலா? வேண்டாம். நான் தனியாக எங்கேயும் போனதில்லை.''

அவள் 'படக்'கென்று உள்ளே விரைந்து விட பார்த்திபன் அவள் போன திசையை வெறித்துப் பார்த்தபடி அசையாமல் நின்றான். பின்னர் ஒரு பெருமூச்சுடன் காரில் ஏறிப் போய்விட்டான். உள்ளே ஜன்னல் வழியே கார் கிளம்பிப் போன பாதையை பார்த்துக் கொண்டே நின்றாள் காயத்ரி. மனது ரணமாய் வலித்தது.

என்ன செய்தால் அவன் மனம் இளகும்? அவள் என்ன தவறுதான் செய்தாள்? கல்யாண நாளன்று அவள் கோபப்பட்டதில் நியாயமில்லையா? அதற்கா அவனுக்கு இவ்வளவு கோபம். இல்லை வேறு ஏதோ இருக்கிறது. யோசனையுடன் உள்ளே போனாள். சாவித்திரியை எழுந்திருக்க வைத்து சாப்பிட அழைத்துப் போனாள்.

''இன்னும் கொஞ்சம் சட்னி போடவா அத்தை?''

''போதும்மா. நீயும் உட்கார்ந்து சாப்பிடு.''

அருகே அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தவள் மெதுவாக, ''அத்தை,'' என்று அழைத்தாள்.

''என்னம்மா?''

''அந்தப் பெண் ரொம்ப அழகோ?''

''எந்தப் பொண்ணும்மா?''

''அதுதான் அவர் கல்யாணம் நின்று போய்விட்டதே. அந்தக் கல்யாணப் பெண்.''

''யார் செண்பகவள்ளியை கேட்கிறாயா? அழகுதானம்மா. உன்னைப் போல் இவ்வளவு கொள்ளை அழகில்லை. ஆனால் களையாகத்தானிருப்பாள்.''

"அவங்க வீட்டில் திரும்பவும் வந்து பேசலையா?"

"பேசினாங்கம்மா. கல்யாணம் நின்று போனா அந்தப் பொண்ணுக்கு திரும்பவும் கல்யாணம் ஆகிறது சிரமம்ன்னு அடுத்து கேட்டு வந்த இடத்தில் கொடுக்கிறதுக்கு முன்னால் நம்ம கிட்ட பேச வந்தாங்க."

"நீங்க என்ன சொன்னீங்க?"

"சொல்ற நிலைமையிலயா நாங்க இருந்தோம். சொத்து பத்து தொழிலையெல்லாம் உன் மாமாதான் பார்த்துகிட்டு இருந்தார். பார்த்தி படிச்சுக்கிட்டு இருந்தவன். தலையும் புரியாமல் வாலும் புரியாமல் அதைக் கட்டிக் காப்பாத்த போராடிக்கிட்டு இருந்தான். நான் தந்நினைவு இல்லாம ஆஸ்பத்திரியில் கெடந்தேன். அப்பா செத்த துக்கம் ஆறக் கூட இடம் கொடுக்காம அவங்க அவசரப்பட்டா நாம என்ன செய்ய முடியும்? வேற இடம் வந்தா கொடுத் திடுங்கன்னு பார்த்திபனே சொல்லிட்டான். அவங்களும் அடுத்த முகூர்த்தத்தில் அந்தப் பொண்ணுக்கு கல்யாணம் பண்ணிட்டாங்க."

அதுதானா என் கணவனே! முதல்முறையாக உனக்குப் பார்த்த பெண். அவளை மறக்க முடியவில்லையா? அந்த நினைவில்தான் என்னை தவிர்க்கிறாயா? பிடிக்காத திருமணம். பிடிக்காத மனைவி. மனம் கசந்தது.

அங்கே தொழிலை பார்க்க முடியாமல் பார்த்திபன் தவித்தான். டவுனில் ஜவுளிக்கடை வைத்திருந்தார்கள். இன்னும் பைனான்ஸ் கம்பெனியும் கிராமத்து நிலபுலன் கள் செங்கல் காளவாசல் என பல தொழில்கள் அவன் பொறுப்பிலிருந்தன. கடையில் மேனேஜர் வந்து சரக்கு இறங்கியிருப்பதாக சொல்லிய பின்னரும் மேற்பார்வை யிடப் போகாமல் அறையிலேயே அமர்ந்திருந்தான்.

அவன் மனம் பூராவும் மனைவியிடம் லயித்திருந்தது. காலையில் அவள் பேசிய பேச்சுக்கள் அனைத்தும் அவன் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தது. ஏன் சாயந்திரம் சீக்கிரம் வரச் சொன்னாள்? உண்மையிலேயே அவனுடன் டவுனுக்கு வர ஆசைப்படுகிறாளா? அவனை அவள் மனம் ஏற்றுக் கொண்டுவிட்டதா? மேஜையின் மேலிருந்த காயத்ரியின் புகைப்படத்தை எடுத்துப் பார்த்தான். திருமண ஆல்பத்தில் அவனுக்கு பிடித்த இந்தப் படத்தை பிரேம் செய்து அடுத்த நாளே அலுவலக மேஜை மேல் வைத்து விட்டான். ஆழ்ந்த பார்வையுடன் இருந்த அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன் சிந்தித்தான். ஒரு வேளை அவள் பேச்சில் உண்மை இருக்குமோ? திருமணத்திற்கு முன் ஆயிரம் பேர் பெண் கேட்டு வரலாம். ஏன் அவனுக்கே எத்தனையோ இடங்களில் பெண் கொடுக்க போட்டி போட்டார்களே. அவர்களை எல்லாம் அவன் விரும்புகிறான் என்றா அர்த்தம். அவன் வாழ்க்கையில் மயங்கியது அவன் மனைவியிடம் மட்டும்தானே. அதேபோல் அவளும் ஏன் இருந்திருக்கக் கூடாது? இந்த எண்ணம் எழுந்ததும் அவனால் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை. அவளோட உடனே பேச வேண்டுமென்ற தாபம் எழ செல்போனை எடுக்கப் போனான். அதே நேரம் மேஜை மேலிருந்த தொலைபேசி மணி அடித்தது. எடுத்து காதில் வைத்தான்.

"ஹலோ பார்த்திபன் பேசுகிறேன்."

"காயத்ரி இருக்காங்களா?" கரகரப்பான ஆண்குரல் கேட்டது. பார்த்திபனின் புருவம் மேலேறியது.

"நீங்கள் யார்?"

"நான் அரவிந்தன் பேசுகிறேன் என்று சொல்லுங்கள்."

மனதில் பொங்கிய தாபம் தண்ணீர் பட்ட சுடுபாலாய் அடங்கிப் போக பார்த்திபனின் மனதில் வெறுமை சூழ்ந்தது. அவன் என்ன டெலிபோன் ஆபரேட்டரா? மனதை கட்டுக்குள் கொண்டு வந்தவன்,

''இது ஆபீஸ் போன். வீட்டு நெம்பர் கொடுக்கிறேன். கூப்பிட்டுப் பேசுங்கள்'' என்றான்.

தொலைபேசியை வைத்தவன் சக்கர நாற்காலியில் சுற்றியவாறு வெறுமனே தலையை பிடித்துக் கொண்டான்.

வீட்டில் தொலைபேசி ஒலிக்க காயத்ரி ஆவலாய் எடுத்தாள். ஒருவேளை மனம் மாறி பார்த்திடன் சீக்கிரம் வருவதாய் கூறப் போகிறானோ? ஆனால் மறுமுனையில் அழைத்ததோ..?

''நான் அரவிந்தன் பேசுகிறேன் காயத்ரி! திடீரென்று கல்யாணம் முடிந்துவிட்டதாகச் சொன்னார்கள். வாழ்த்துச் சொல்லக் கூப்பிட்டேன். அங்கே உன் புகுந்த வீட்டில் நன்றாக வைத்துக் கொள்கிறார்களா? நீ நன்றாக இருக்கிறாயா?''

''நன்றி அரவிந்தன். இந்த ஊரும், வீடும் எனக்கு நிரம்பவும் பிடித்திருக்கிறது. என் அத்தை என்னை பெற்ற பெண் போல் பார்த்துக் கொள்கிறார்கள்.''

''அப்படியா. சென்னை வந்தால் தகவல் சொல் காயத்ரி. உன் கணவரைப் பார்க்க ஆசைப்படுகிறேன்.''

''கட்டாயம் நான் சென்னை வந்ததும் பேசுகிறேன்.''

தொலைபேசியை வைத்த காயத்ரியின் மனம் ஆச் சரியப்பட்டது. எவ்வளவு பண்பானவன். அவள் அவனை மறுத்து விட்ட கோபமின்றி வாழ்த்து சொல்கிறானே.

இரவு வெகுநேரம் கழித்து வந்தான் பார்த்திபன். காத்திருந்த காயத்ரி வழி மறித்தாள்.

"சாப்பிட வாங்க."

"நான் சாப்பிட்டு விட்டேன். சாப்பாடு வேண்டாம்."

முகம் திருப்பாமல் பதில் சொல்லிக் கொண்டே மாடிப்படியேறிய கணவனின் முதுகை வெறித்தபடி அசையாது நின்றாள் காயத்ரி. தான் மட்டும் உணவுண்ண மனமின்றி தண்ணீர் ஊற்றிவிட்டுப் படுக்கச் சென்றாள். வருடக் கணக்கில் அவன் மனதில் ஒருத்தி குடியிருக்கும் போது காயத்ரிக்கு எப்படி அவன் இடமளிப்பான்? அவள் விழிகள் கலங்கின. கலங்கின விழிகளை மூடி துயில் கொள்ளச் செய்ய இமைகள் முன்வரவில்லை. இதயம் அமைதியை இழந்து தவிக்கும்போது இமைகள் எப்படி மூடும்?

உறக்கம்தான் எப்படி நெருங்கும்?

# 7

**நீர் கூட உறங்கும் நிசியான இரவில்**
**நிலவோடு நானும் உறங்கவில்லை**
**கானோடு காற்றும் களைத்துறங்கும் இரவில்**
**வானோடு நானும் உறங்கவில்லை.**

உறக்கம்தான் எப்படி நெருங்கும்? உணர்வுகளோடு போராடிக் கொண்டிருக்கும் பார்த்திபனை, உறக்கமின்றி விடிய விடிய நடை பயின்று கொண்டிருந்தான். வெறும் வயிறு பசித்தது. ஜவுளிக் கடையிலிருந்து நேரே செங்கற் சூளைக்குப் போய் பொழுதைக் கழித்துவிட்டு இல்லம் திரும்பினான். என்ன முயன்றாலும் நினைவுகளை அடக்க

அவனால் முடியவில்லை. காலையில் மழைச் சாரலின் இதமாக மனைவியுடன் வார்த்தையாடியபோது தோன்றிய மையலின் ஆயுள் வெறும் இரண்டு மணி நேரம்தானா? அரவிந்தனின் போன் மட்டும் வராமலிருந்தால்...

'அரவிந்தன்! என்னை விட வயதில் இளையவன், அழகானவன்' அடங்க மறுத்த மனக்குதிரை சிலிர்த்துக் கொண்டு எழுந்து மீண்டும் மீண்டும் இந்த வார்த்தை களையே உச்சரித்தது. அழகான இளம் மனைவி அவனை விடுத்து இவனை எப்படி ஏற்பாள்? இவன் விதி இது தானா? மறுகி, மறுகி துயருற்றவன் விடியலின் அரு காமையில் தன்னை மறந்து கண்ணயர்ந்தான்.

மெதுவாய் குலுங்கி குலுங்கி சென்று கொண்டிருந்தது அந்த வில் வண்டி. மகனின் திருமணம் போக இருந்த சாவித்திரியின் உயிரை மீட்டு விட்டது. 'இத்தனை நாளாய் எங்கிருந்தது இந்த ஆரோக்கியம்?' என்று அனைவரும் வியக்கும் வண்ணம் எழுந்து ஓடியாடி சுறுசுறுப்பாய் மீண்டும் இல்லத்தில் பவனி வர ஆரம்பித்தார். குலதெய் வத்துக்கு பொங்கல் வைத்து வேண்டுதலை நிறைவேற்ற மாட்டு வண்டி கட்டிப் பயணம். பசுமையான வயல்களின் ஊடே மேடு பள்ளமுமான பாதை. கார் வரத் தோதுப் படா தென்று வண்டியை பூட்டியிருந்தனர். இதமான மாலை நேரம். தாலாட்டுவது போல் அசைந்தாடிய வில்வண்டி. காயத்ரி மிக ரசித்தாள்.

''கொஞ்சம் பின்னால் நகர்ந்து உட்காரம்மா.'' என்று சாவித்திரி கட்டளையிட்டார். வண்டியின் பாரம் சமப்பட காயத்ரி பின்னால் நகர்ந்து உட்கார வேண்டியதாயிற்று. பின்னால் அமர்ந்திருந்த பார்த்திபனின் தோளோடு தோள் இழைய அமரவேண்டி வர இருவருமே மனதிற்குள்

சிலிர்த்தார்கள். காயத்ரியின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. உடல் நடுங்க ஆரம்பித்தது. மனதை மறைக்க காயத்ரி சாலையை வேடிக்கை பார்ப்பதுபோல் பாவனை செய்தாள். பார்த்திபனின் நிலையை சொல்லவே வேண்டாம். காற்றில் அவள் கூந்தல் பறந்து வந்து அவனின் செவியை தொட்டு விலகியது. அவளது சேலை முந்தானை அவனின் கை விரல்கள் மேல் படர்ந்தது. இதமான மல்லிகையின் மணம் அவன் நாசியில் நுழைந்தது. கண்ணுக்குத் தெரியாத மாயவெளியில் மோக வலையில் கணவன் மனைவி இருவரும் சிக்குண்டனர். சில நாள் களாய் இருவர் மனதிலும் சூழ்ந்திருந்த சோகமூட்டம் மறைந்து மனம் லேசாகியது. பார்த்திபனின் வாய் அவனை யறியாமல் ஏதோ ஒரு பாடலை முணுமுணுக்க விழிகள் காயத்ரியை விழுங்கின. காயத்ரியின் முகம் சிவந்ததை அவன் ரசனையாகப் பார்த்தான். இந்தப் பயணம் முடியவே கூடாதென்று இருவரின் மனமும் மிகவும் விரும்பியது.

"இறங்கம்மா கோவில் வந்தாச்சு."

சாவித்திரியின் குரல் இருவரையும் கனவுலகத்தி லிருந்து நனவுலகிற்கு கொண்டு வந்தது. மிட்டாயை பறிகொடுத்த சிறுவனின் மனநிலையோடு முகம் சிணுங்க பார்த்திபன் இறங்கினான்.

"கைகொடுய்யா காயத்ரிக்கு இதெல்லாம் பழக்கமில் லைல்ல. எப்படி பிள்ளை தானா இறங்கும். நீ பாட்டுக்கு இறங்கி பராக்கு பார்த்துக்கிட்டு நிற்கிறே." சாவித்திரியின் குரல் அதட்டலாய் ஒலிக்க பார்த்திபனின் ஒளியிழந்த முகம் கணப்பொழுதில் பிரகாசித்தது.

காயத்ரி இறங்க கை கொடுத்தான் பார்த்திபன். கடின மான அவனின் கரங்கள் மலரினும் மென்மையான

காயத்ரியின் கரங்களை இறுக்கிப் பிடித்து இறங்க உதவின. அந்த ஸ்பரிசத்தில் கிறங்கிப்போனாள் காயத்ரி. ஒரு கோடி மின்னல்கள் இருவரையும் தாக்கின. 'நன்றி தெய்வமே இந்த வினாடியில் உயிர் பெற்றுவிட்டேன்,' என்று காயத்ரி மனதிற்குள் கூறிக் கொண்டாள். மெதுவாக, மிக மெதுவாக அவள் இறங்க விடுவிக்க மனமேயில் லாமல் அவளுடைய கரங்களை பார்த்திபன் விடுவித்தான். அவள் முகத்திலிருந்த பார்வையை விலக்காமலேயே தாய் இறங்க உதவி செய்தான்.

வீட்டு வேலை செய்யும் காவேரியின் உதவியுடன் சாவித்திரியின் மேற்பார்வையில் காயத்ரி பொங்கல் வைத் துக் கொண்டிருப்பதை சற்றுத் தள்ளி நின்று பார்த்துக் கொண்டே இருந்தான் பார்த்திபன். அரக்குக் கறையிட்ட மஞ்சள் பட்டுப் புடவையை இழுத்துச் செருகிக் கொண்டு, முன்னால் வந்து விழும் நீண்ட பின்னலை அடிக்கடி பின்னால் தூக்கிப்போட்டுக் கொண்டு இடது முழங்கை யால் அடிக்கடி வியர்வையை துடைத்துக் கொண்டு அவள் செயல்பட்டது ஒரு அழகான தேவதையொன்று இங்கும் அங்கும் நடை பயிலும் காவியமாய் அவனுக்குத் தோன்றியதென்றால் அவன் எந்த மூலையில் நின்று கொண்டிருந்தாலும் தேடியலைந்து அவன் மேல் படிந்து நின்ற அவளது பார்வையின் வீச்சு அவனை தேவலோகத் திற்கே கொண்டு சென்றது.

பூசாரி தீபஆராதனை காட்ட இருவரும் அருகருகே நின்று வேண்டிக் கொண்டார்கள். அவள் நெற்றியிலிட்டுக் கொண்ட அபிஷேக குங்குமம் வியர்வையில் வழிய இவன் அதை இயல்பாக சரி செய்தான். தெய்வத்தின் சந்நிதியில் அவன் அதைச் செய்ததும் காயத்ரியின் உள்ளம் நெகிழ்ந் தது. இருவரும் மௌனமே பாஷையாக பார்வைகள்

சம்பாஷிக்க உணர்ச்சிக் குவியலில் சிக்குண்டனர். இருவரின் ஜோடிப் பொருத்தத்தையும் அந்நியோன்யத் தையும் பார்த்துப் பார்த்து சாவித்திரி பூரித்துப் போனாள்.

இரவு திரும்பினார்கள் நிலாவொளியில் மனதுக்கினிய மாலையிட்ட மணாளன் அருகினிலே வில் வண்டியின் தாலாட்டோடு மீண்டும் அந்த இனிய அனுபவம் தந்த பயணம். இந்த முறை சாவித்திரியம்மாள் சொல்லாமலே இருவரும் நெருங்கி அமர்ந்தனர். லேசாக தூக்க கிறக்கம் போல் பார்த்திபனின் தோளில் காயத்ரியின் தலை சாய தவித்துப் போன பார்த்திபன் இயல்பாய் அவளது விரல் களைப் பற்றிக் கொண்டான்.

வீடு வந்துவிட்டது. அவனின் கரம் பற்றி இறங்கிய காயத்ரி உள்ளே செல்ல மனமின்றி வாசலிலே நின்றுவிட் டாள். பார்த்திபன் தயக்கத்தோடு அவள் முகம் பார்த்து நின்று விட சாவித்திரி திகைத்தாள்.

"என்னடா ரெண்டு பேரும் வாசலில் நிற்கறீங்க. கோவி லுக்குப் போய் பொங்கல் வைச்சுட்டு வந்திருக்கிறோம். உள்ளே போய் சாமி கும்பிட்டுட்டு உட்கார்ந்துட்டு மத்த வேலையைப் பார்க்க வேணாமா," என்று அவர் கூறவும் காயத்ரி உள்ளே விரைந்தாள். ஒரு பெருமூச்சோடு அவளைத் தொடர்ந்தான் பார்த்திபன்.

இரவு உணவு முடிந்தவுடன் வழக்கமாக தாயின் அருகே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான் பார்த்திபன். பேச்சி னூடே காயத்ரியையும் இணைய வைத்து பேச்சில் கலந்து கொள்ள வைத்தான். சாவித்திரியை நடுவிலிருத்தி இரு வரும் உரையாடிக் கொண்டார்கள். இயல்பாக இருக்க முயற்சி செய்தாலும் பார்த்திபனின் மனதில் முள் குத்திக் கொண்டிருந்தது. காயத்ரிக்கு அவன் மனதில் தான்

இருக்கிறோமா, இல்லையா என்ற கலக்கம் இருந்தது. கண்ணுக்குத் தெரியாத மாயத்திரை இருவர் நடுவேயும் தொங்க யார் முதலில் விலக்குவது என்று இருவருமே தயங்கினார்கள். அவன் முதலில் பேசக்கூடாதா என்று அவளும் ஒரு சொல் அவள் வாயிலிருந்து உதிர்ந்தால் போதுமே என்று அவனும் பரிதவித்தனர்.

இரவு பார்த்திபனின் படுக்கையைக் கடந்து உள்ளறைக்குச் செல்லும்போது காயத்ரியின் கால்கள் பின்னின. இதயம் துடித்தது.

'அழைத்து விடு என் கணவா! என் மனத்தீயை அணைத்துவிடு' அவளிடம் அறைக்கதவு சாத்தப்படும் போது அவன் மனம் தவித்தது.

'வந்துவிடு என் அன்பே! உன் மனதை தந்துவிடு'

இரண்டு ஜீவன்களும் ஒருவருக்காய் ஒருவர் உருகினர். இருந்தும் ஒருவர் துயரை மற்றவர் அறியாமலும் இருந்தனர். இதழ்கள் இசைக்காமல் இதயம் மட்டும் இசைக்கும் இசை இது.

இது ஊமையின் ராகம்.

## 8

**நிலவை மேகம் மூடலாம். என்நினைவு எப்படி வாடலாம்?**
**உறவறியா இந்த ஊமையின் ராகத்தை**
**அவர் உள்ளமறியாமல் எப்படி போகலாம்?**

'இது ஊமையின் ராகம்' காயத்ரி தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். பார்த்திபனின் ஒரு பார்வைக்காக அவள் துடிப்பதை அறியாதவனாய் அவன் செயல்பட்

டான். காயத்ரி தாய், தந்தையை மறந்தாள். தன்னை மறந்தாள். எல்லாமும் அவனாக வாழ்ந்தாள். அவனுக்காய் உடையுடுத்தி. அவன் வரவிற்காய் காத்து நின்று அவன் உண்பதையும், உறங்குவதையும் தள்ளி நின்று ரசித்து துடித்தாலும், தன் போக்கில் அவன் செயல்பட்டான். அவள் இதயம் பாடும் இசை அவனுக்காக என்பதை அவன் உணரவில்லை. ஊமைபாடும் ராகமாய் உள்ளுக் குள்ளே உருகிக் கொண்டிருந்த காயத்ரி கலங்கினாள்.

காயத்ரி திருமணத்தை குறிக்கோளாய் நினைக்க வில்லை. மேலே படிக்க ஆசைப்பட்டாள். ஆனால் திரு மணம் அவளை தேடி வந்தது. அவளைக் கேளாமல் மாலையிட்டவனை அவள் ஏற்க விரும்பவில்லை. ஆனால் அவளைக் கேளாமல் அவள் மனம் அவன் காலடி யில் சரணடைந்து விட்டது. அவளோ அவன் நினைவில், அவனோ யார் நினைவில்?

''காயத்ரி'' முன் வரவேற்பறையிலிருந்து சாவித்திரி அழைக்கும் குரல் கேட்டு கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டு அவள் எழுந்து சென்றாள். அங்கே அமர்ந்திருந்த வயதான தம்பதியிடம்,

''இதுதான் காயத்ரி. என் மருமகள்,'' என்று அறிமுகம் செய்து வைத்தார் சாவித்திரி. வந்தவர்களுக்கு கை குவித்து வணக்கம் சொல்லி ''வாங்க,'' என்று வரவேற் றாள் காயத்ரி.

''உட்காரும்மா,''என்று அருகில் அமர வைத்துக் கொண்ட சாவித்திரி மருமகளைப் பெருமையுடன் பார்த்தார்.

வந்தவர்கள் ஒரு தட்டை எடுத்து வைத்து அதில் பூ, பழம், வெற்றிலை பாக்கு இவற்றுடன் ஒரு திருமணப் பத்திரிகையை வைத்து சாவித்திரியிடம் நீட்டினார்கள்.

''இனி எல்லாம் என் மருமகள் பொறுப்புத்தான் அவ கிட்டயே கொடுங்க,'' என்றார் சாவித்திரி.

காயத்ரி கூச்சத்துடன் எழுந்து தட்டை பெற்றுக் கொண்டாள்.

''சரிம்மா சாவித்திரி. பழசை மனசில் வைச்சுக்காம நீயும் மருமகப்பிள்ளையும் மகனைக் கூட்டிக்கிட்டு கண்டிப்பா கல்யாணத்துக்கு வந்திரணும்.''

''அதுக்கென்ன அண்ணே. வந்திட்டால் போகுது.''

''அப்படிச் சொல்லக்கூடாது தங்கச்சி. நீ எங்களை மன்னிச்சிட்டது நிசம்ன்னா கட்டாயம் வரணும்.''

''பெரிய வார்த்தையெல்லாம் ஏன்னே பேசுறீங்க. நாங்க கண்டிப்பா வரோம்.''

''வரோம்மா.'' அவர்கள் விடைபெற்று சென்றுவிட காயத்ரியைப் பார்த்து புன்னகைத்தார் சாவித்திரி.

''நம்ம சொந்தக்காரங்களா அத்தை?''

''இவங்க யாருன்னு நினைக்கிற. நம்ம பார்த்திபனுக்கு முத முதல்ல கல்யாணம் பேசி முடிச்சது இவங்க மூத்த பொண்ணு செண்பக வள்ளியைத்தான். இவங்களோட கடைசி பெண்ணுக்கு கல்யாணம். நாம ஏதோ இவங்க மேல கோபமாயிருந்த மாதிரி இப்படி விழுந்து விழுந்து மன்னிப்புக் கேட்டுட்டுப் போறாங்க.''

''அவங்க ஏன் அப்படி நினைக்கணும்?''

''காக்கா உட்கார பனம்பழம் விழுந்த கதையா இவங்க இரண்டாவது பொண்ணுக்கு கல்யாணம் வச்சப்போ நாங்க வெளியூர் போயிட்டோம். இவங்களா என்னவோ இவங்க மேல கோபப்பட்டுத்தான் நாங்க வரலைன்னு நினைச்சுக்கிட்டு எங்களைப் பார்த்தா தலையை குனிஞ்

சுக்கிட்டு போவாங்க. என்னவோ பார்த்திபன் தனி மரமா நின்னதுக்கு இவங்கதான் காரணம்னு இவங்களா நினைச்சுக்கிட்டு ஒதுக்கிப் போனாங்க. இப்ப உன்னை அவன் கல்யாணம் செஞ்சு நீ மகாலட்சுமியாட்டம் வந்த பின்ன எங்க மனசு குளிர்ந்து போயிருக்கும்ன்னு நினைச்சு வந்திருக்காங்க. விட்டுப் போன உறவு பட்டுப் போக கூடாதில்ல. அதான் கல்யாணத்துக்கு அழைப்பு.''

''அப்படியா,'' என்ற காயத்ரி அதற்கு மேல் எதுவும் பேசவில்லை. இரவு பார்த்திபன் வரும்போதே கோபத் துடன் வந்தான். பெங்களூரிலிருந்து வந்திருந்த துணி பண்டில்கள் கிழிந்து வந்திருந்தன. அனுப்பிய கம்பெனிக்கு போன் போட்டு சராமரியாக திட்டியவன் அவற்றை திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டு தாமதமாக வந்தான். வந்தவுடன் தாயிடம் கூடப் பேசாமல் கை கழுவி விட்டு அதே யோசனையுடன் சாப்பிட உட்கார்ந்தவனின் அரு கில் சாவித்திரி வந்து அமர்ந்து கொண்டார். அவனது இறுகிய முகத்தைப் பார்த்துக்கொண்டே காயத்ரி பரிமாற ஆரம்பித்தாள். சாவித்திரி பேச்சை ஆரம்பித்தார்.

''கோட்டையூரிலிருந்து ரங்கநாத அண்ணனும், அண்ணியும் வந்திருந்தாங்கப்பா.''

''என்னவாம்?''

''அவங்க கடைசி பொண்ணுக்கு கல்யாணம்..''

சாவித்திரி பேசிக் கொண்டிருக்கையிலேயே செல்போன் ஒலிக்க எடுத்துப் பேசியவன் கோபமானான். சாப்பாட்டை பாதியில் விட்டுவிட்டு எழுந்து கை கழுவியவனிடம் சாவித்திரி, ''அதான்ப்பா...'' என்று தொடர,

''ஸ்ஸ்.. அம்மா. இந்தக் கல்யாணம் கார்த்திகைக்கு எல்லாம் நீங்க போயிட்டு வாங்க. இதையெல்லாம் என்

காதில் ஏன் போடறீங்க? மனுசனுக்கு ஆயிரத்தெட்டு கவலை இருக்கு. இதில் யார் வந்தாங்க, போனாங்கன்னு நான் கவனிச்சுக்கிட்டு இருக்க முடியுமா? போறதானா நீங்க போயிட்டு வாங்க,'' என்றபடி மீண்டும் வாசலுக்கு போய் காரில் ஏறிப் போய்விட்டான்.

''அடேங்கப்பா என்னவா கோபம் வருது. இப்படித் தான்ம்மா. வேலையில் பிரச்சனைன்னா கோபபட்டிரு வான். நான் ஒரு கூறு கெட்டவ. சாப்பிடும்போது சம்பந்த மில்லாம எதையாவது பேசிடறேன். என் பிள்ளை பாதிச் சாப்பாட்டில் எழுந்திருச்சு போயிட்டான்,'' சாவித்திரி மனத்தாங்கலுடன் பேசியதை கேட்டவாறு பார்த்திபன் சாப்பிட்ட தட்டை எடுத்தவளின் மனம் அழுதது.

'இவ்வளவு கோபம் எதற்காக? அவர்கள் மேல் உள்ள கோபத்தால்தானே. எதற்காக இந்த கோபம்? அந்தப் பெண் கிடைக்கவில்லை என்றுதானே.'

காயத்ரி சாப்பிட்டதாய் பேர் பண்ணி விட்டு வரவேற் பறையில் காத்திருந்தாள். நள்ளிரவைத் தாண்டி பார்த் தியன் வந்தான். பசியாலும், களைப்பாலும் சோர்ந்திருந் தவன் அவள் காத்திருப்பதைக் கூட கவனியாமல் மாடி யேறிச் சென்றுவிட அவள் சிலையாக நின்றாள்.

மாடியறையில் அவள் நுழைந்தபோது அவள் முகம் பார்க்க முடியாமல் போர்வையில் முகம் மறைத்து அவன் தூங்கிக் கொண்டிருந்தான். அவனது பாராமுகம் கண்டு தீராத்துயர் கொண்டு அவள் அவனைக் கடந்து சென்றாள்.

வாழ்க்கையென்னும் வண்டியில் பூட்டப்பட்ட கோடி மாடுகளிரண்டும் வேறு வேறு திசையில் பயணப்பட முடியுமா? அப்படி செல்ல நினைத்தால்,

வாழ்க்கை வண்டி எப்படி ஓடும்?

# 9

**வாழ்க்கையென்னும் வண்டியோட**
**வந்து சேர்ந்த ஜோடி மாடு**
**கிழக்கு மேற்கா பிரிஞ்சுப் போனா**
**வழக்குத்தானே எண்ணிப் பாரு**
**ஒருவர் மனதை ஒருவர் புரிஞ்சா**
**இறுதி வரைக்கும் நிலாச் சோறு**

வாழ்க்கை வண்டி எப்படி ஓடும்? என்ற கவலையை விட்டுவிட்டான் பார்த்திபன். காலையில் காயத்ரியின் முகத்தில்தான் விழிக்கிறான். அவள் கையால் காபி அருந்தும்போது விடியலே அற்புதமானதாய் அமைந்து விடுகிறது. அவள் பார்த்து பார்த்து பரிமாறும்போது ஒரு சக்ரவர்த்தி போல் மனதில் உணர்கிறான். அவனது உடைகள் அவளால் தேர்ந்தெடுக்கப்பட்டு வரும்போது மனதில் பெருமிதம் பொங்குகிறது. அவள் பார்த்து எடுத்து வைக்கும் உடைகளைத்தான் அணிகிறான். அவனது அலமாரி அவளால் சுத்தம் செய்யப்பட்டு அடுக்கி வைக் கப்படுவதை விரும்புகிறான். பூஜையறையில் உள்ள சுவாமிப் படங்கள் தினமும் புது மலர்களுடன் காட்சி தரு கின்றன. ஏதோ சூன்யவெளியில் நடமாடுவது போன்று அந்த மாளிகையில் நடமாடியவன் அவள் வந்தபின் ஆனந்தமயமான சோலையில் நடமாடுவது போல் மகிழ்ந்து போகிறான்.

எந்த மனக்குறையும் அவனுக்கு இல்லை. இரவு அவன் வர எவ்வளவு நேரமானாலும் வெளி வராண்டாவில் நடை

பயின்று கொண்டு அவள் காத்திருப்பதால் இருள் சூழ ஆரம்பித்தவுடன் பறந்து கொண்டு வீட்டுக்கு வந்து விடுவான். இவன் உணவருந்தாமல் விட்டால் அவளும் பட்டினி கிடப்பதை அறிந்ததும் மலைத்து விட்டான். அதன் பின்னர் வெளியே விருந்துகளில் கலந்து கொண்டாலும் சாப்பிடாமல் வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விடுவான். அதைக் கண்ட காயத்ரியின் முகத்தில் நிலவும் திருப்தி போதுமென்று தோன்றும் அவனுக்கு.

ஜவுளிக் கடைக்கு புதிதாக வரும் புடவைகளில் அவளுக்கு நன்றாக இருக்குமென்று அவனுக்கு தோன்றுவதை எடுத்து வந்தால் மிகப் பிரியமுடன் அவள் பெற்றுக் கொள்வாள். மறுநாளே அதை உடுத்திக் கொள்வதை பார்க்கையில் வானில் பறப்பது போல் அவன் உணர்வான். பண்டிகை காலத்தில் நகைகள் வாங்கி வருவான். அதிக நகை அணிவதில் ஆர்வமில்லாத காயத்ரி உடனே அதை அணிந்து கொள்வாள். அவனுடைய சொந்த பந்த திருமணங்கள், தொழிலாளர் வீட்டு சுப நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் அவன் அழைத்தால் ஆனந்தமாய் அவனுடன் இணைந்து செல்வாள். அதை விரும்பவும் செய்வாள். அதை உணரும் பார்த்திபன் இதமாய் உணர்வான்.

இவையெல்லாம் சாவித்திரிக்காக மட்டும் அவள் செய்யவில்லை என்பதை நன்கு அறிவான். கடமைக்காக என்றால் அவள் முகம் மலர்ந்து இவற்றை செய்வானேன்? ஆனால் இது பற்றிய ஆராய்ச்சியில் அவன் அதிகம் இறங்கவில்லை. அவன் காயத்ரியை காதலித்தான். அது அவன் மனதிற்கு நன்கு தெரியும். அவள் அவனைக் காதலிக்கிறாளா? அதை அறிய இன்னும் கொஞ்சம் காலம் பொறுத்திருக்க வேண்டும் என்று முடிவு செய்திருந்தான்.

அவள் மனம் முழுமையாகத் தெரியாத வரை தன் மனதை திறந்து காட்டவும் அவன் தயாராக இல்லை.

வெளியே காலடி சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த் தான். காயத்ரி வந்து கொண்டிருந்தாள். வழக்கம் போல் அவனது பார்வையில் முகம் சிவந்தவள்,

''கீழே ஊர் பெரியவர்கள் வந்திருக்காங்க. அத்தை பேசிக்கிட்டு இருக்காங்க. உங்களை வரச் சொன்னாங்க.''

''பொங்கல் வருதில்லை. அது விசயமா பேச வந்திருப் பாங்க. இதோ வரேன்.''

மனைவி பின் தொடர கீழே இறங்கி வந்தான்.

வரவேற்பறையில் ஊர் பெரிய மனிதர்களான மருத நாயகமும், உலகளந்த பெருமாளும், சின்னப்பனும் இருந் தனர்.

''வாங்க, வாங்க,'' என்று கரம் குவித்து வணங்கியபடி அவர்கள் எதிரே வந்து அமர்ந்தான் பார்த்திபன்.

''காபி பலகாரம் சாப்பிட்டிங்களா.. அம்மா...''

''அதெல்லாம் அப்பவே சாப்பிட்டோம் தம்பி. அம்மா வந்ததும் முதல் வேலையா கொடுத்திட்டாங்க,'' என்றார் மருதநாயகம்.

''பெரியவங்கள்லாம் இவ்வளவு தூரம் என்னைத் தேடிக்கிட்டு வரணுமா? சொல்லியனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே,'' என்றான் பார்த்திபன் உபசாரமாய்.

''அதனாலென்ன தம்பி! நீங்க பல ஜோலிக்காரர். வர நேரமிருக்காது. நாங்க வந்தா என்ன குறைஞ்சு போயிடும்,'' என்றார் சின்னப்பன்.

''பொங்கல் வருதில்ல. திருவிழா பத்திப் பேச வந்திருப் பீங்க.''

''தம்பி கணக்கு சரி. அதுக்குத்தான் வந்தோம்,'' என்றார் பெருமாள்.

''ஜமாய்ச்சுடலாம் கவலைப்படாதீங்க.''

''தெரியும் தம்பி. நீங்க இந்த வார்த்தையைத்தான் சொல்வீங்க. இருந்தாலும் நினைவுப் படுத்த வேண்டியது எங்க கடமை,'' என்றார் சின்னப்பன்.

''திருவிழாவுக்கு வழக்கத்தை விட இந்த வருசம் கூடுதலாவே தந்து விடுகிறேன். நீங்க ஏற்பாடுகளைக் கவனியுங்கள்.''

''இந்த வருசம் கூடுதலாவே தருவீங்களா? என்ன தம்பி? ஏதும் விசேசமான காரணமிருக்கா?'' என்றார் சின்னப்பன்.

''விசேசம்தான். என் வீட்டுக்காரி இந்த வருசம் என் கூட இருக்காளே. அந்த விசேசம்தான்,'' என்று பலமாக பார்த்திபன் சிரிக்க காயத்ரியை வெட்கம் பிடுங்கித் தின்றது. வேலையிருப்பதாக வழக்கம்போல் உள்ளே விரைய பார்த்திபனுடன் பெரியவர்களும் சேர்ந்து சிரித்தனர்.

''அப்புறம் தம்பி இந்த கரகாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், நாடகம் இதையெல்லாம் நடத்திடலாம் தானே?'' என்றார் மருதநாயகம்.

''கட்டாயம் நடத்தணும். இந்த மாதிரி திருவிழாக்களில் அவங்க பொழைப்பு நடந்தாத்தான் உண்டு. நமக்கும் எல்லாத்தையும் சிறப்பா செஞ்சோம்னு திருப்தி இருக்கும்.''

''மாட்டுப் பொங்கலன்னைக்கு ஜல்லிக்கட்டு நடத்திடலாம்தானே?'' என்றார் சின்னப்பன்.

''வருசா வருசம் அப்படித்தான் செய்கிறோம். இந்த வருசமும் அது தவறாம நடக்கும்.''

''சந்தோசம் தம்பி. நாங்க போய் திருவிழாவுக்கு சாமி சாட்ட ஏற்பாடு ஆரம்பிச்சிடறோம். முதல்லேயே ஊருக்குள்ள சொல்லிட்டாத்தான் காப்பு கட்டறதுக்குள்ள வெளியூர் வேலைகளை முடிச்சுக்குவாங்க. காப்பு கட்டிட்டா வெளியூர் போக முடியாதில்ல,'' என்றவாறு அவர்கள் விடைபெற்று சென்றனர்.

வெட்கியவாறு உள்ளே சென்ற மனைவியை அழைத்தான் பார்த்திபன்.

''காயத்ரி.''

''என்னங்க,'' உடனே எதிரே வந்து நின்றாள்.

''உங்க அம்மாவுக்கு இன்னைக்கு போன் போடும் போது திருவிழாவுக்கு வரச்சொல்லி கூப்பிட்டுவிடு'' என்று அவன் கூற,

''நல்லாயிருக்குடா உன் நியாயம்,'' என்று நொடித்தார் சாவித்திரி.

''என்னம்மா?'' என்று அவன் திகைக்க,

''ஏண்டா சம்பந்தக்காரங்களுக்கு போனிலயா அழைப்பு கொடுப்பாங்க. கடிதம் எழுதிப் போடணும்டா. இந்த பழக்க வழக்கமெல்லாம் நான் சொல்லித் தரவேண்டியிருக்கு,'' என்றார் தாய்.

''என்னவோ செய்ங்க. நான் போன் போட்டு மாமா விடம் சொல்லி விடுகிறேன். என்ன காயத்ரி சரிதானே,'' என்று அவன் வினவ,

''அம்மாக்காரி பேசினால் வீட்டுக்காரி கிட்ட பதில் சொல்றான். கல்யாணம் பண்ணிக்கிட்டா கட்டினவ மட்டும் தாண்டா உன் கண்ணுக்கு தெரிவா. பெத்தவ தெரிவாளா,'' என்று குறைபடுவதுபோல் மாமியார் பெருமைப்பட

இப்போது பார்த்திபனின் முகம் வெட்கத்தில் சிவந்தது. அதைக் கண்டு 'களுக்'கென்று சிரித்த காயத்ரி கணவன் முறைக்கவும் மும்முரமாய் போனை எடுத்தாள்.

சென்னையில் கோவிந்தசாமிக்கும் நவநீதத்திற்கும் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

''சொன்னா கேளு நவநீதம். ஒரு வாரமெல்லாம் லீவு போட முடியாது. ஒருநாள்தான் கிடைக்கும்.''

''ஒரு நாளில் என்ன செய்ய முடியும்? காலையில் போய் சாயந்திரம் வரச் சொல்றீங்களா?''

''இல்லை நவநீதம் நான் என்ன சொல்றேன்னா...''

''நீங்க ஒன்றும் சொல்ல வேணாம். உடம்புக்கு சரியில்லாதவங்களை பார்த்துட்டு வரலாம். வாடின்னீங்க. போன இடத்தில் பொண்ணைக் கட்டிக் கொடுத்துட்டு வந்தோம். அந்தத் தம்பியானா மறுவீடு, தலை தீபாவளி எதுக்கும் வரமாட்டேன்னு சொல்லிட்டார். பெத்தது பத்தானாலும் பரவாயில்லை. ஒத்தப் பொண்ணைப் பெத்துட்டு அதையும் ஒரேயடியா மறந்திட்டு இருடின்னா எப்படிங்க? அவங்க வராதபோது நாமதான போய் நம்ம பெண்ணைப் பார்க்கணும். சும்மா போக வேணாம். இந்த மாதிரி திருவிழா நாள் கிழமைன்னா போகலாமே. பெத்த மனசு கிடந்து அடிக்கிறது உங்களுக்கெங்கே புரியப் போகுது. ஆம்பிளைகளாப் பிறந்தா பாசம் இல்லாமலா போகும்.''

''சரி சரி. எனக்கு மட்டும் பெண் நினைவு இல்லையா போகலாம்,'' என்றார் கோவிந்தசாமி.

ஒரு வாரத்திற்கு முன்னரே வந்து விட்ட பெற்றவர் களை மகிழ்ச்சியுடன் வரவேற்றாள் காயத்ரி. நவநீதம் பெண்களுக்கே உரித்தான புத்தி கூர்மையுடன் வீட்டு

நடப்பைக் கவனித்ததில் சாவித்திரி பெயருக்குத்தான் பொறுப்பை வைத்துக் கொண்டு காயத்ரி வசம் எல்லா பொறுப்புகளையும் கொடுத்திருப்பதை அறிந்து கொண்டாள். கோவிந்தசாமிக்கு வேண்டியதோ அவரது தமக்கையின் ஆரோக்கியம். புள்ளிமான் போல் துள்ளி ஓடாத குறையாக சாவித்திரியம்மாள் நடமாடிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் நிம்மதி அவருக்கு ஏற்பட்டது. தாயிடம் ஊர் கதையை விசாரித்து விட்டு தன் ஊர் கதைகளை சொல்லிக் கொண்டிருந்தாள் காயத்ரி. வீடு திருவிழாவை வரவேற்க தயாரானது. விழா ஏற்பாடுகளில் காயத்ரி மும்முரமானாள். அந்த திருவிழா நாளும் வந்தது. அதையடுத்த ஜல்லிக்கட்டு நாளும் வந்தது. அந்த நாள்.. அந்தத் திருநாள்...

அந்த ஒரு நாள்...!

# 10

**ஒருநாள் வாழ்ந்தாலும் போதும் - அந்தத்**
**திருநாள் மீதி வாழ்வை நடத்தும்**
**விழா நாள் ஆயிரம் வரலாம் - நீ**
**வரும்நாள் தானே என் திருநாள்.**

அந்த ஒரு நாள் அழகாகத்தான் வந்தது. விழாவைக் கொண்டாட வீட்டுக்கு வந்து போகும் உறவினர்களை குறையில்லாமல் உபசரித்தாள் காயத்ரி. வீட்டிற்கு முன்புறம் இருந்த தோட்டத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த

கோவிந்தசாமிக்கு காபி கொண்டு வந்தாள் நவநீதம். கணவரின் அருகிலிருந்த மற்றொரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு வீட்டைப் பார்த்தாள். வீட்டின் முன்புறத் தோற்றம் முழுமையாகத் தெரிந்தது. வீட்டின் முன் அமைக்கப்பட்டிருந்த செய் ஊற்றிலிருந்து தண்ணீர் பீய்ச்சி அடித்துக் கொண்டிருந்தது. மனைவியின் பார்வையை கவனித்த கோவிந்தசாமி,

''என்ன நவநீதம் வீட்டை ஆராய்ச்சி பண்றபோல?'' என்றார்.

''ம்ம்.. இத்தனை நாளா எப்போதாவது ஒரு தடவை வந்து ஒரு மணி நேரம் இருந்துட்டுப் போவோம். அப்போ தெல்லாம் இது உங்க அக்கா வீடுன்னு மட்டும்தான் இருக்கும் சரியாப் பார்த்ததில்லை.''

"இப்போ மகள் வீடாயிருச்சு."

''ஆமாம். இவ்வளவு அழகா பிரம்மாண்டமா ஒரு மாளிகை அதில் மகாராணிபோல் என் மகள். நான் போன ஜென்மத்தில் புண்ணியம் பண்ணியிருக்கேன்.''

''உனக்கு மாளிகையின் பிரம்மாண்டமும் இந்த சொத்தின் அளவடங்காத மதிப்பும்தான் தெரியும். இது எல்லாத்தையும் விட பிரம்மாண்டமானது எங்க அக்கா வின் குணம். அது வானத்தைப் போல பெரிசு.''

''ஆமாங்க. உங்க மேல தம்பின்னு பாசம் காட்டறது வேற யாராயிருந்தாலும் மாமியார்ன்னு ஆகிட்டா கொஞ்சம் கெடுபிடி காட்டத்தான் செய்வாங்க. இவங்க நம்ம காயத்ரியை பூப்போல பார்த்துக்கிறாங்க. நம்ம காயத்ரி கொடுத்து வைத்தவள்.''

அதற்குள் வேலையாள் வந்து சாப்பிட அழைப்பதாகக் கூறவும் இருவரும் எழுந்து உள்ளே போனார்கள்.

''நவநீதம் நீயும் தம்பி பக்கத்தில் உட்காரு.''

''இல்லேண்ணி. நான் அப்புறமாய் உங்களோடு சாப் பிடுகிறேன்.''

''நானும், அத்தையும் சாப்பிட்டுக்குவோம்மா. நீங்களும் உட்காருங்க'' மாமியாரும், மருமகளும் பார்த்துப் பார்த்துப் பரிமாறினார்கள்.

''போதும்க்கா. இவ்வளவு இனிப்பை எப்படிச் சாப்பிட?''

''சாப்பிடுப்பா. எங்க வாழ்க்கையையே இனிப்பாக்க தங்கமான மருமகளைக் கொடுத்திருக்கே. உன்னை இனிப்பால குளிப்பாட்ட வேண்டாமா?''

மாமியார் மெச்சும் மருமகள். வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி. ஒரு பெண்ணைப் பெற்றவர்களின் மனம் இதைவிடப் பெருமைப்பட முடியாது. காலை உணவின் பின் மாடி பால்கனியில் தாயும், மகளும் ஓய்வாக அமர்ந் திருந்தார்கள். நவநீதம் மகளைப் பார்த்துக் கேட்டாள்.

''மாப்பிள்ளை உன்னை சந்தோசமா வைத்திருக்கிறாரா காயத்ரி?''

தாயைப் பார்த்து புன்னகைத்தாள் காயத்ரி.

''என்னை விட சந்தோசமாக உலகில் எந்த மனைவி யும் இருக்க முடியாது அம்மா.''

உண்மையாக இதயத்திலிருந்து இந்த வார்த்தை களைச் சொன்னாள் காயத்ரி. பார்த்திபனின் நிழலில் வாழ்வதே போதும் வேறு எதுவும் வேண்டாம். அவன் அருகாமையே ஆயுள் முழுவதும் அவளை சந்தோசமாக வைத்திருக்கும். அந்த அளவு அவன்மேல் காதல் வைத் திருந்தாள் காயத்ரி.

திடீர் திருமணம் செய்து கொடுத்து விட்ட கலக்கம் மாறி நவநீதத்தின் மனதில் மகிழ்ச்சி குடி கொண்டது.

மாலையில் கோவிலுக்கு காரில் போனார்கள். அரக்கு சிவப்பில் பட்டு உடுத்தி அதற்கு இணையாக அரக்கு சிவப்பில் அட்டிகையும் காதில் ஜிமிக்கியும் அணிந்து பார்த்திபனின் அருகில் நின்றாள் காயத்ரி. மனைவியின் அழகில் மயங்கியவன் அவளை விழி கொள்ளாமல் ரசித்துக் கொண்டு வந்தான். கோவிலில் அவனுக்கு முதல் மரியாதை நடந்தது. அபிஷேக ஆராதனைகள் முடிந்ததும் கோவிலை வலம் வந்தார்கள். முன்னால் நடந்து கொண் டிருந்த பார்த்திபன் ஏதோ கேட்பவன் போல் காயத்ரியை உடன் அழைத்துக் கொண்டான். கணவனுக்கு பதில் சொல்லியபடி அவனுடன் இணைந்து நடந்தாள் காயத்ரி. இருவரின் அண்மையைக் கவனித்த பெரியவர்களின் மனம் குளிர்ந்தது.

முதல்நாள் திருவிழா கரகம். ஒயிலாட்டம், பொம்ம லாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் முதலிய கிராமிய கலைகளுடன் முடிவடைந்தது. அடுத்த நாள்.

அடுத்த நாள் மாட்டுப் பொங்கல். தெருவெல்லாம் மஞ்சள் தண்ணீருடன் இளஞ்சிட்டுக்கள் முறை மாப் பிள்ளை முறையில் உள்ளவர்கள் மேல் ஊற்ற அலைந் தார்கள். 'வேண்டாம், வேண்டாமென்று' அலறிக்கொண்டே மனதில் குதூகலத்துடன் இளங்காளைகள் மஞ்சள் தண் ணீரில் முழுக்குப் போட்டார்கள். காயத்ரியின் மனமும் சிறகடித்தது. ஒரு நிமிடம் பார்த்திபன் ஓட தான் மஞ்சள் தண்ணீருடன் துரத்துவது போல் கற்பனை செய்தவள் 'களுக்'கென்று சிரித்தாள். புரியாமல் பார்த்தான் பார்த்திபன்.

''என்ன ஆச்சு? சாயந்திரம் ஜல்லிக்கட்டுப் பார்க்கப் போகலாம். ரெடியாயிருன்னு சொன்னா சிரிக்கிறே?''

''ஒன்றுமில்லை,'' என்று உதட்டைச் சுழித்தாள். அதில் மனம் லயித்தவன் அவளை புரியாத பார்வையாய்

பார்த்தான். அவன் பார்வையை எதிர்கொண்ட அவளின் பார்வை சொல்வது என்ன? தவிப்பில் கரைந்து அவள் பார்வையோடு பின்னிக் கிடந்தது அவன் பார்வை.

''வணக்கம் சார்.''

இளைஞர் பட்டாளம் வந்து கொண்டிருந்தது. அவனிடமிருந்து பார்வையை விலக்கிக் கொண்டு அவள் உள்ளே விரைந்தாள். அவள் சென்ற திசையைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விட்டபடி இளைஞர் பக்கம் பார்வையை திருப்பினான் அவன்.

''என்னப்பா என்ன விசயம்?''

''சாயந்திரம் நடக்கிற ஜல்லிக்கட்டில் ஓரமா போட்டு வைத்திருக்கிற பாதுகாப்பு பந்தல் பலமா இல்லை போல சார்.''

''அப்படியா நான் கவனிக்கலையே. ஏன் என்ன ஆச்சு? எப்பவும் பலமா போடுவாங்களே?''

''நேத்து ராத்திரி நாடகம் நன்றாக அமைஞ்சிருச்சே சார். எல்லாரும் விடிய விடிய நாடகம் பார்த்துட்டு காலையிலே தூங்கிக்கிட்டே வேலி போட்டா இப்படித்தான் ஆகும்.''

''சரி நான் கூப்பிட்டுக் கேட்கிறேன்.''

தெருவின் ஓரத்தில் சிறு கம்புகளால் வேலி கட்டியிருந்தனர். வேலி சரியாகப் போடப்படவில்லையா என்பதை பார்த்திபன் விசாரித்தான். அவன் அதட்டலால் சரி செய்தனர். ஜல்லிக் கட்டு ஆரம்பித்தது. காளைகளின் ஊர் பெயரும் அதன் கொம்புகளில் கட்டப்பட்டிருந்த பரிசுத் தொகைகளும் மைக்கில் அறிவிக்கப்பட்டன. காளைகளை அடக்க வந்த இளங்காளைகள் தோள் தட்டித் தயாராயினர். அவர்களை தங்கள் கடைக்கண் பார்வையில்

கட்டி வைத்திருக்கும் கன்னியரும் வேடிக்கை பார்க்கத் தயாராயினர். காளைகள் பயந்தன. அவற்றை அடக்க காளைகளும் பாய்ந்தனர். காயத்ரி பிறந்தது முதல் ஜல்லிக் கட்டைப் பார்த்ததில்லை. அவளுக்குப் பயமாக இருந்தது. அருகே நின்றிருந்த பார்த்திபனின் கரங்களை இறுகப் பற்றினாள். தன் கரங்களைப் பற்றிக் கொண்ட அவளது தளிர் கரங்கள் நடுங்குவதை உணர்ந்த பார்த்திபன் அவள் பயத்தை போக்க அவள் கரத்தை பதிலுக்கு இறுக்கிப் பிடிக்கும் போது அது நடந்தது.

திடீரென்று ''ஹோ ஹோ''வென்ற சத்தம் கேட்டது. தடை கம்பை உடைத்துக் கொண்டு பார்த்திபனின் மார்பைக் குறி வைத்துப் பாய்ந்தது ஒரு முரட்டுக்காளை. எதிர்பாராத சம்பவத்தால் ஒரு கணம் பார்த்திபன் திகைத்து நின்று விட அந்த கண நேர திகைப்பை தனக்கு சாதகமாக்கிக் கொண்ட காளையின் கொம்புகள் அவனின் மார்புக்குள் புகுந்து கொள்ள நெருங்கி வந்தேவிட்டது. அதே நேரம் அந்த கண நேர இடைவெளியில் மாட்டின் கொம்புகளுக்கும் பார்த்திபனுக்கும் ஊடே பாய்ந்து விட்டாள் காயத்ரி. காளையின் கொம்புகள் அவளைக் காயப்படுத்திய அதே நேரம் பல பேர் ஒரு சேர காளையின் மேல் விழுந்து அதை அடக்கினர். ரத்த வெள்ளத்தில் தன் மேல் சரிந்து விழுந்தவளை உன்மத்தம் பிடித்தவன் போல் கைகளில் வாரிக் கொண்ட பார்த்திபன் மருத்துவமனைக்கு ஓடினான்.

மயங்கிச் சரிந்த சாவித்திரியை தாங்கிக் கொண்டார் கோவிந்தசாமி. மகளின் உயிருக்காக அவள் பின்னால் ஓடுவதா? இல்லை அவள்மேல் உயிரை வைத்திருக்கும் அவளது மாமியாரின் அருகில் நிற்பதா என்று தவித்தாள் நவநீதம். இத்தனை மனிதரின் உணர்ச்சிகளோடு விளையாடி விட்டு மாலை மறைய இரவு வந்தது.

நிலவு நகர்ந்தது.

# 11

**தேவதை நீயென்றே விலகிச் சென்றான் - அவளோ**
**என்தேவை நீயென்றே தேடி வந்தாள்.**
**நிலவின் பொழிவாய் மலர் முகத்தாள் - அவன்**
**நினைவினில் உயிராய் கலந்து விட்டாள்.**

நிலவு நகர்ந்தது. பார்த்திபனின் நினைவும் நகர்ந்தது. அறையினில் மெதுவாய் நடந்து கொண்டிருந்தவன் காயத்ரி யிடம் சிறு சிணுங்கல் சத்தம் கேட்டதும் அவசரமாய் படுக்கையருகில் வந்தான். புரண்டு படுத்தவள் மேற் கொண்டு எந்த அசைவுமின்றி தூங்கலானாள். மெதுவாய் அவள் நெற்றியைத் தொட்டுப்பார்த்து விட்டு கலைந்து கிடந்த அவள் கூந்தலை சரிசெய்தான். களைத்திருந்த அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். நிலவின் ஒளி சாளரம் வழி வந்து அவள் மேல் படிந்ததில் ஒரு தேவதை துயில் கொள்வதைப் போல் உறங்கிக் கொண் டிருந்தாள்.

'இந்த தேவதையின் இதயத்தில் அவனுக்கு இடமிருந் ததா? அவளது உயிரையே அவனுக்காக விடத் துணியு மளவிற்கு காதல் இருந்ததா? மலரினும் மென்மையான அவளது உடலேற்ற ரத்த காயங்கள் அவனுக்காகவா?' அவன் கண்களில் கண்ணீர் வழிந்தது. அவள் வாயி லிருந்து ஒரு சொல் 'உன்னை விரும்புகிறேன்' என்று உதிர வேண்டும் என்று அவன் காத்திருக்க, என் உடல், பொருள், ஆவி எல்லாம் உனக்காகத்தான்' என்று அவள் செய்கையில் உணர்த்திவிட்டாள். அவளது கரங்களை

எடுத்து தன் கரங்களுக்குள் பொத்திக் கொண்டான் பார்த்திபன், அவளது அன்பை பத்திரப் படுத்துவது போல.

அன்று ஊரே அதிசயப்பட்டது. கல்லைப் போன்ற இறுகிய முகத்துடன் என்றுமே காட்சியளிப்பவனின் கண்ணீரையும் துடிப்பையும் கண்டு,

''கவலைப்பட ஒன்றுமில்லை. மேல் காயம்தான். மாட்டின் கொம்பு மேலே தான் கீறியிருக்கிறது. உடலில் கொஞ்சம் கூடப் பாயவில்லை. ஒரு வாரத்தில் காயம் ஆறி விடும்,'' மருத்துவரின் குரல் அவன் காதில் ஏறவில்லை.

''ஐயா பார்த்திபா, எஞ்சாமி. நம்ம தெய்வம் கைவிடாது ராஜா. காயத்ரிக்கு ஒரு குறையும் வராது. டாக்டரே ஒண்ணுமில்லைன்னு சொல்லிட்டாரு பாரு. கண்ணைத் துடைச்சுக்கய்யா. தேர்ந்து எழுந்திரு சாமி. நீ சோர்ந்து போய் நின்னா நான் எங்கே போவேன் தங்கம்? எனக்கு யாரு இருக்கா?'' மயக்கம் தெளிந்து ஓடி வந்த சாவித்திரியின் குரல் அவன் காதில் ஏறவில்லை.

''சரியாகிடும் தம்பி. கவலைப்படாதீங்க,'' தங்கள் கவலை மறந்து மருமகனை தேற்ற முயன்ற காயத்ரியின் பெற்றோர் குரலும் அவன் காதில் ஏறவில்லை.

அவன் செவியில் ஒலித்ததெல்லாம்,

''என்னங்க,'' என்று அலறியபடி மாட்டின் முன் பாய்ந்த காயத்ரியின் குரல் மட்டும்தான்.

திக்பிரமையுடன் அவளையே பார்த்தபடி அருகே அமர்ந்திருந்தான். அவனது கண்டிப்பையும், கோபத்தை யும் மட்டுமே பார்த்திருந்தனர் ஊரார். அவன் கண்ணீர் விட்டு பெற்ற தாய் கூடக் கண்டதில்லை. அப்படிப்பட்ட பார்த்திபன் சுற்றி யார் இருக்கிறார்கள் என்பதை உண

ராதவனாய், கவலைப்படாதவனாய் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்ததைக் கண்டு எல்லோரும் வாயடைத்து நின்றனர்.

ஒரு யுகம் போல் கழிந்த நான்கு மணி நேரம் கழித்து கண் விழித்தாள் காயத்ரி. அவள் முதலில் கண்டது அவனது கண்ணீர் முகத்தைத்தான். அவளது உதடுகள் துடித்தன. பார்வை அவனை அருகே அழைத்தது. அவசர மாய் அருகே சென்று குனிந்தான் அவன்.

''உங்களுக்கு எதுவும் ஆபத்தில்லையே,'' அவளின் பரிதவிப்பில் நின்றிருந்த பார்த்திபனின் கண்ணீர் மீண் டும் பெருக்கெடுத்தது.

''எனக்கு என்ன கேடு? உன்னை பலி கொடுத்து என்னைக் காப்பாற்றிக் கொண்டு கல்லுக் குண்டாய் நிற் கிறேனே.''

அவளது கரங்கள் அவசரமாய் அவனது வாயைப் பொத்தின.

''என்ன பேச்சு இது? நீங்களில்லாமல் நான் உயிரோடு இருப்பேனா?''

பார்த்திபன் உடைந்து போனான். ஒரு சொல் அவள் வாயிலிருந்து வரவேண்டுமென்று சங்கல்பம் செய்து கொண்டு விலகி வாழ்ந்தானே. இன்று அவன் எதிர்பார்த்த சொல் எந்த மாதிரி நேரத்தில் எத்தகைய துடிப்போடு வெளி வந்திருக்கின்றது. அவனது நடுங்கிய கைகளை அவளது கைகள் பிடித்து சமாதானப்படுத்தின.

அவள் மருத்துவமனையிலிருந்த ஒரு வாரகாலமும் தொழில்கள் எதையும் அவன் கவனிக்கப் போகவில்லை. அவளை விட்டு ஓரடி கூட நகரவில்லை. அவள் குண

மாகி வீடு வந்த பின்னரும் காலையில் சிறிது நேரம், மாலையில் சிறிது நேரம் மட்டுமே சென்று வந்தான். காயத்ரியின் பெற்றோர் சென்னைக்கு கிளம்பினர்.

''கிளம்புகிறோம் காயத்ரி. உடம்பை பத்திரமாய் பார்த்துக் கொள். அதைவிட சீக்கிரமாய் எழுந்து மருமகப் பிள்ளையை கவனி. உன்னைக் கவனிக்கிறேன்னு இந்த ஒரு வாரத்தில் இளைச்சிட்டார்,'' நவநீதம் கூறினாள்.

''என்ன நவநீதம். நீயும் தம்பி கூடவே கிளம்புகிற. காயத்ரியின் உடம்பு இன்னும் சரியாகலை. ஒரு வாரம் நீ மட்டுமாவது இருந்துட்டுப் போ,'' என்றாள் சாவித்திரி.

''நானிருந்து பார்க்கப் போகிறதென்ன அண்ணி. அதுதான் இந்த ஒரு வாரமா கண்ணார பார்த்துட்டமே. ஒருத்தர் மேல் ஒருத்தர் எப்படி உசிரை வைச்சிருக் கீங்கன்னு. உங்களுக்கு மருமகளாகவும், தம்பிக்கு பெண் டாட்டியாகவும் வர என் பொண்ணு புண்ணியம் செஞ் சிருக்கேனும். மனசு நிறைஞ்சிருக்கு. சொத்து, சுகம் நிறைய இருக்குன்னு பொண்ணை கொடுத்துட்டோமே, பொண்ணு மனம் நிறைஞ்சு வாழறாளான்னு மனசுல ஒரு ஓரமா சந்தேகம் இருந்துச்சு. இப்ப மனம் பூராவும் நிம்மதி நிறைஞ்சிருக்கு. இது போதும் அண்ணி. நாங்க போயிட்டு வரோம்,'' நவநீதம் கண்களில் நீர் துளிர்க்க விடைபெற்றுக் கொண்டாள். கோவிந்தசாமிக்கோ எதுவும் பேசமுடியாமல் நா தழுதழுக்க தமக்கையிடம் ஒரு தலையசைவுடன் விடைபெற்றுச் சென்றார்.

காயத்ரி குணமாகி எழுந்து பழையபடி நடமாட ஆரம் பித்து விட்டாள். வீட்டில் பழைய மகிழ்ச்சி வந்துவிட்டது. அன்று மாலையில் மழை பிடித்துக் கொள்ள பார்த்திபன்

அவசரமாய் வீட்டுக்கு வந்தான். முன்னறையில் வழக்கமாய் தாயுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் காயத்ரியை காணவில்லை.

''உன் மருமகள் எங்கேம்மா. வெளியே மழை கொட்டுது. அவ பாட்டுக்கு தோட்டம் பார்க்கப் போறேன்னு மழையில் நனையப் போயிட்டாளா'' அவன் பதட்டமாய் கேட்க,

''இல்லைடா தம்பி. மாடியில்தான் இருக்கிறாள்'' என்று பதில் சொன்னார் அவனது அன்னை.

இரண்டிரண்டு படியாய் தாவி மாடியேறினான் அவன். அறைக்குள் அவள் இல்லை. பால்கனி கதவு திறந்திருந்தது. அங்கிருந்த ஊஞ்சலில் ஆடியபடி மழையை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். பின்னாடி காலடி ஓசை கேட்டதும் திரும்பிப் பார்த்தவள் அவசரமாய் எழ ஊஞ்சல் இடித்து கீழே விழப் போனாள். ஒரே எட்டில் அருகே நெருங்கி தாங்கிப் பிடித்துக் கொண்டான் பார்த்திபன். பிடித்த கைகளுக்குள் அவள் உடல் நடுங்குவதை உணர்ந்தாலும் அவன் பிடி விலகவில்லை.

''குளிர் காற்றில் என்ன பண்றே?''

''மழையை வேடிக்கை பார்த்தேன்.''

''இப்போத்தான் உடம்பு தேறிக்கிட்டு வருது. இப்போ மழையை வேடிக்கை பார்க்கலேன்னா என்ன?''

''நான் நல்லாகிட்டேன். சும்மா நோயாளி போலவே என்னைப் பார்க்காதீங்க,'' அவளது வழக்கமான 'வெடுக்' பதிலில் மர்மமாய் புன்னகைத்தான்.

''அப்போ ஆரோக்கியமானவளா பார்க்கவா?'' என்றான் அவளை தாகமாய் பார்த்தபடி.

அவளது அடிவயிற்றில் பந்து சுருண்டது. நாணத்தால் பேச்சு எழும்பவில்லை. அவனது முகம் பார்க்கவும் துணிவில்லை. அவனது கைகளுக்குள் தொய்ந்து விழுந்தாள். அதற்கு மேல் தாங்க மாட்டாதவளாய் பார்த்திபனின் இறுகிய அணைப்புக்குள் அடங்கிப்போனாள். அவனது வேகமான முத்தங்கள் முடிந்து மூச்சு இறைத்தவன் கூறினான்,

''ராத்திரி வைச்சுக்கறேண்டி மீதத்தை,'' என்று.

விலகி வாசலுக்குச் சென்ற காயத்ரி, தைரியம் வரப் பெற்றவளாய் தாலிக் கொடியை தூக்கிக் காண்பித்து,

''இது தாலி சார்! நான் உங்க பெண்டாட்டி. பெண்டாட்டியை வச்சுக்கறேன்னு சொல்ற முதல் ஆண்பிள்ளை நீங்கதான்,'' என்றாள்.

''உன்னை.. இருடி.. கிட்ட வந்து சொல்கிறேன்,'' என்று அவன் துரத்த கலகலவென்று சிரித்தபடி மாடிப்படியில் இறங்கி ஓடிவிட்டாள் அவள்.

அழகான அந்த மழைநாளின் இரவில் இருவரும் ஒருவரிடமொருவர் அடைக்கலமாயினர். சிந்தித்தால்தான் தேவையில்லாத சந்தேகம். சிந்தனையைத் தவிர்த்து,

அந்தக் கடலோடு கலந்தது வானம்.

## 12

**சிறகுகள் விரித்துப் பறந்திடவே - ஒரு**
**சிட்டுக் குருவியாய் மாறிடவே**
**மடலோடு வரம் தந்தது ஒரு கானம் - அந்தக்**
**கடலோடு கலந்தது செவ்வானம்.**

அந்தக் கடலோடு கலந்தது வானம். செந்நிற ஒளி கடலின் கடலின் மேற்பரப்பெல்லாம் பரவ ஒருபுறம் சூரியன் மறைய மறுபுறம் நிலவு எழுந்தது. நீலவானம் செந்நிற ஒளியோடு வெட்கத்தில் முகம் சிவந்து செவ்வானமாய் காட்சி தந்தது. அதைக் காணக்காணத் தெவிட்டவேயில்லை காயத்ரிக்கு. முழங்கால்களை மடித்து அதன்மேல் கைகளைக் கட்டியபடி பேச்சின்றி அமர்ந்து விட்டாள். இந்த அற்புதக் காட்சியை வெளி நாட்டவர் இருவர் படமெடுத்துக் கொண்டிருந்தனர். கடலருகே நின்று கொண்டிருந்த பார்த்திபன் அவளது ஆர்வத்தை ரசித்துக் கொண்டிருந்தான். அங்கிருந்தே விழியசைவில் அவன் அழைக்க அவள் எழுந்து அவ னருகே நின்றாள். கடலலைகள் இருவரின் கால்களைத் தொட்டுத் திரும்ப அதை ரசித்துக் கொண்டிருந்த காயத்ரி,

''இந்த அலைகள் நம்மகிட்ட கொஞ்சி விளையாடுது பார்த்தீங்களா,'' என்றாள்.

''அப்ப தள்ளி நில்லு,'' என்று அவன் அதட்ட புரியாத வளாய்,

''ஏங்க'' என்றாள்.

''உன்கிட்ட நான் மட்டும்தான் கொஞ்சி விளை யாடணும்,'' அவன் முரட்டுத்தனமாய் அவளை இழுக்க, அவள்,

''போதுமே, வழியுது'' என்றாள் சிரிப்புடன்.

''என் பெண்டாட்டிக்கிட்டத்தானே வழிகிறேன். வேறு யார்கிட்டயும்.. அதோ மஞ்சள் சுடிதார் போட்டு அட்ட காசமாய் நிற்கிறாளே அவள்கிட்ட வழிகிறேனா?... இங்கே நீல ஜீன்ஸ் போட்டுகிட்டு அல்டாப்பா லுக் விடுது பார்

இதுகிட்ட வழிகிறேனா.. அப்புறம்,'' அவனை மேலே பேசவிடாமல் அவன் வாயைப் பொத்திய காயத்ரி.

''போதும் போதும். வழிகிறேனா வழிகிறேனான்னு இந்த கடற்கரையில் ஒரு பெண் விடாமல் வர்ணித்து முடித்து விடுவீர்களே. உங்க கெட்டிக்காரத்தனத்தை தொழிலில் மட்டும் காட்டுங்கள்,'' என்று கோபமாய் பேசி னாள்.

கண்களில் குறும்பு மின்ன அவளது கைகளை எடுத்துத் தன் கையோடு கோர்த்துக் கொண்டவன்,

''தொழிலில் மட்டும் தான் கெட்டிக்காரத்தனமாய் இருக்கிறேனா? வேறு எதிலும் கெட்டிக்காரத்தனம் இல்லையா?'' என்று கேட்டான்.

அவன் பார்வையின் பொருள் புரிந்தவள் முகம் சிவக்க,

''ஏய்ய்.. நேரம் காலமில்லாமல் என்ன பேச்சு இது,'' என்றாள்.

'' ஏண்டி பெண்டாட்டிகிட்ட பேசுறதுக்கு கூட நேரம் காலம் இருக்கா. எப்போதும், எங்கேயும் பேசுவேன்.''

''ஆமாம் உங்களை அடக்க யாரால் முடியும்?''

''ஏன் முடியாது. ஒரு சிங்கக் குட்டியை பெற்றுக் கொடு. அவன் அடக்குவான்.''

காயத்ரியின் முகம் கனிந்துவிட்டது. பார்த்திபனின் பிம்பமாய் ஒரு குட்டிப் பார்த்திபனுக்கு அவள் அம்மாவாக இருப்பது போல் கற்பனை செய்ய அது இனித்தது. அவள் முகம் அவளது நினைவின் போக்கை உணர்த்த அவன் மனமும் சிறகடித்தது. இருவரும் பேச்சின்றி அலை யோரம் நடந்தார்கள்.

கன்யாகுமரியில் தொழில் தொடர்பான வேலை யென்று பேர் பண்ணிக் கொண்டு தேனிலவைக் கொண்டாட அவளை அழைத்து வந்திருந்தான். காலையில் சுவாமி தரிசனம் பண்ணினர். கன்யாகுமரி அம்மனை தரிசித்து விட்டு கடற்கரையோரம் நடந்து கொண்டிருந்தனர்.

''ஐயோ அங்கே பாருங்களேன்.''

''என்ன காயத்ரி?''

''அந்த அலைகளைப் பாருங்களேன். நாட்டியம் ஆடிக்கிட்டே வருவதுபோல் இருக்கு.''

''ஆமாம்.''

''அந்த அலைகள் பாறைகள் மேலே ஏறி ஆடணும்னு ஆசைப்படுவது போலிருக்கு. ஆனால்.. ப்ச்.''

''ஏன் என்ன ஆச்சு?''

''பாதியிலேயே கலைந்து தோற்றுப்போய் திரும்புவது மாதிரி சோகமா விழுந்து கலையுது'' காயத்ரியும் ஒருவித சோகத்துடன் பேசுவது போலிருக்க பார்த்திபன் அவள் விரல்களை சுண்டியிழுத்தான்.

''ஏண்டி தேனிலவுக்கு வந்திருக்கிறோம்கிற நினைப்பே உனக்கு இல்லையா. அலையைப் பார்த்தாளாம் அது சோகமா போகுதாம். ஏன் இப்படி நினைச்சுப் பாரேன்.''

''எப்படி?''

''பாறையும், அலையும் காதலர்கள். பாறை அலையோடு கோபிச்சுக்கிட்டு செல்லமா 'டூ' விட்டிருக்கு. நீ என்கிட்ட கேட்காம தாலி கட்டிட்டயே மடையான்னு 'டூ' விட்டிருந்தே இல்லே. அது போல..''

''ம்ம்... என்னைச் சொல்லிட்டு நீங்க மட்டும் எதை எதையோ பொய் பொய்யா பேசுறீங்க.''

''பொறு பொறு நான் இன்னும் சொல்லி முடிக்கலை. அப்போ அலை என்ன பண்ணுது தெரியுமா? நான் உன்னை தேடித்தேடி சைட் அடித்த மாதிரி..''

''யார் நீங்க..? உம்முன்னு முறைப்பீங்க.''

''ஆரம்பிச்ச விஷயத்தை சொல்லி முடிக்க விடுடி. அலை ஓடி ஓடி வந்து பாறையை மெல்ல மெல்ல தொட்டு சமாதானப்படுத்துது.''

காயத்ரி கடலைப் பார்த்தாள். முதலில் அலைகள் பாறைமேல் விழுந்து கலைவது சோகமாய் தோன்றியது. பார்த்திபனின் விளக்கத்திற்குப் பின் அது ஊடலால் முகம் திரும்பி நிற்கும் காதலியை சமாதானப்படுத்துவதுபோல் தோன்றியது. பாராட்டாக கணவனைப் பார்த்தவள்,

''பரவாயில்லை. வியாபாரத்தில் எப்படி ஜெயிக்கறீங் கன்னு இப்போதுதான் புரிகிறது. எதிலுமே பாசிடிவ் அப்ரோச் தான் ஜெயிக்கும். நெகடிவ் அப்ரோச் தோற்கும்'' என்றாள்.

மனைவியைப் பார்த்து கண்களை சிமிட்டி காலரைத் தூக்கி விட்டுக் கொண்டவன்,

''ஐயாவோட பெருமையை இன்னும் ஒன்றொன்றா புரிஞ்சுக்குவே''என்றான்.

விவேகானந்தர் பாறையைப் பார்க்க படகில் ஏறும் போதும் அவள் தடுமாறி விழுந்து விடாமலிருக்க கைகொடுத்து ஏற்றிவிட்டான். விவேகானந்தர் பாறையை ஒட்டிய சதுர வடிவ பகுதியில் அலையின் பரிமாணம் குறைந்திருந்தது. ஆழம் அதிகமென்பது பார்க்கும்போதே

தெரிந்தது. தண்ணீரின் நீலநிறம் பச்சை நிறமாய் தெரிந்தது. இரண்டு சிறுவர்கள் அதில் பயமற்று நீந்திக் கொண்டிருந்தார்கள்.

"என்ன காயத்ரி அந்தப் பசங்களையே பார்க்கிற?"

"நம்மையெல்லாம் பயப்படுத்துற கடல்கிட்ட இவங் களுக்கு பயமேயில்லை பார்த்தீர்களா?"

"அவங்க கடலோட பிள்ளைகள்ம்மா. மீன்களுக்கும், மீனவர்களுக்கும் கடல்தானே தாய் வீடு. பிள்ளைகளுக்கு அம்மாகிட்ட பயமிருக்குமா?"

"ஆமாமில்ல."

"ஒண்ணு ஆமாம்ன்னு சொல்லு. இல்லைன்னா 'இல்லை'ன்னு சொல்லு. மொத்தமா 'ஆமாமில்ல'ன்னா என்னத்தை நினைக்கிறது?"

"என்னைக் கிண்டல் பண்ணலேன்னா உங்களுக்கு ஒண்ணுமே ஓடாது."

"அது நிஜம்தாண்டி."

"எது?"

"உன்னைப் பார்க்காமலிருந்தாலோ, உன்கிட்ட பேசாம லிருந்தாலோ எனக்கு எதுவுமே ஓடாது" பார்த்திபனின் கண்களில் காதல் வழிந்தது. காயத்ரி உதடுகளை மடித்து கடித்துக் கொண்டாள்.

"கதை விடாதீங்க. என்னை கல்யாணம் பண்ணுவ தற்கு முன் எப்படி இருந்தீர்களாம்."

"அதுதான் தெரியலைடி. உன்னைப் பார்க்காமல் நான் எப்படி இருந்தேனோ தெரியாது. இனி முடியாது."

மனைவியின் தோளின் மேல் கை போட்டு இறுக் கியவன்,

''இதுக்கு முன்னால் இங்கே வந்திருப்பாயே, எப்போது யார்கூட வந்தாய்?'' என்று கேட்டான்.

''ஒரு தடவை பள்ளியில் டூர் கூட்டி வந்தார்கள். இன்னொரு தடவை அப்பாம்மா கூட வந்தேன்.''

''அந்த சுற்றுலாவெல்லாம் என்கூட வந்திருக்கிற இந்த தேனிலவிற்கு இணையாகுமா?''

காயத்ரியின் முகம் சிவந்தது. விளையாட்டாய் கண வனின் கைகளைப் பிடித்துக் கிள்ளியவன் அவன் தோள்களில் தலையை சாய்த்து நின்றாள்.

''இந்த இடம் எவ்வளவு அழகாவும், தனிமையாகவும் இருக்கு பார்த்தியா? இந்தப் பாறையை விவேகானந்தர் தவம் செய்ய தேர்ந்தெடுத்ததில் ஆச்சர்யமில்லை. தியான அறையை பார்த்தாயா? கடலின் சத்தம் 'ஓ'மென்று நம் காதில் விழுவது போல் இருந்தது. நம்மையும் அங்கேயே கண்ணை மூடி அமர்ந்து தவம் செய்யச் சொல்வது போல் இருக்கு.''

''போதும் முனிவரே. அப்படி தவம் பண்ண உட் கார்ந்து விடாதீர்கள். ஒரு வருடம் காத்திருந்து இப்போது தான் தங்கள் கடைக்கண் பார்வை என் மேல் விழுந் திருக்கிறது. திரும்பவும் தவம் பண்ண ஆரம்பித்து விடா தீர்கள் சுவாமி. என் மேல் கருணை காட்டுங்கள்'' பவ்ய மாய் கைகூப்பி காயத்ரி விநயமான முகபாவனையுடன் வேண்டிக் கொள்ள பார்த்திபன் சிரித்து விட்டான்.

''வாயாடி. ஒரு நாள் மௌன விரதம் இருக்கச் சொன்னா என்னடி பண்ணுவ?''

''நீங்க ஊருக்குப் போகிற நாளா பார்த்து இருப்பேன்.''

''உன்னை விட்டு ஊருக்குப் போவதா? நானா? நீ பேசுடி. எவ்வளவு வேணும்னாலும் பேசு. கேட்கத்தான் காத்திருக்கேன்'' மையலுடன் மொழிந்தான் பார்த்திபன்.

இரவு ஊர் திரும்புகையில் மன நிறைவோடு கண வனின் தோள் மேல் தலை சாய்ந்துக் கொண்டாள் காயத்ரி. பரிவோடு புன்னகைத்த பார்த்திபன் சாலையில் கவன மாய் காரை ஓட்டினான். தூரத்தில் மைல் கல் தென் பட்டது.

அவர்களது வாழ்க்கைப் பயணத்திலும் மைல் கல் தென்பட்டது.

# 13

**காணிக்கையென்று சொல்லி - நான்**
**கடை வீதி போகையிலே**
**மாணிக்க மென்று சொல்லி**
**மதுரை மீனாள் மடிப்பிச்சை தந்தாளே**
**ஆனிப் பொன் முத்து! - நானுன்**
**அன்னையாதல் தெய்வத்தின் சித்து.**

அவர்களது வாழ்க்கைப் பயணத்திலும் ஒரு மைல் கல் தென்பட்டது. தேனிலவு முடிந்து திரும்பி வந்ததும் வழக்கமான வாழ்க்கை முறைக்குத் திரும்பினாலும் பார்த்திபன் அவற்றில் மாற்றங்கள் கொண்டு வந்தான். வேலைகளை நம்பிக்கையானவர்களிடம் பிரித்து கொடுத் தான். மேற்பார்வையில் அதிக கவனம் செலுத்தினான். மாலை மயங்கியதும் வீடு திரும்புவதை வழக்கமாக்கிக் கொண்டான். வாரம் ஒரு தடவை வெள்ளிக்கிழமையன்று அன்னையையும், மனைவியையும் கோவிலுக்கு அழைத்துச் செல்வான். ஞாயிறன்று மனைவியை மட்டும் டவுனுக்கு

அழைத்துச் செல்வான். திரைப்படம் பார்ப்பார்கள். அருகில் ஒரு அணைக்கட்டு இருந்தது. அங்கே சென்று பொழுதைக் கழிப்பார்கள். எதுவும் இல்லையென்றால் தோட்ட வீட்டைப் பார்க்க போய் விடுவார்கள்.

தென்னந் தோப்பின் நடுவே அமைந்த சிறு வீடும் சுற்றியுள்ள பச்சைப் பசேலென்ற வயல் வெளியும் மோட்டார் ரூமிலிருந்து பம்ப் செட்டில் அருவியாய் கொட்டும் தண்ணீரும் அது விழுந்து செல்ல கட்டி விடப் பட்டிருக்கும் அகலமான சிமெண்ட் தொட்டியும் காயத்ரி மிக அனுபவித்து ரசிக்கும் விசயங்கள். தோட்ட வீட்டிற்கு போனால் திரும்பவே மனமின்றி கணவனுடன் சுற்று வாள்.

அன்று மாலை வழக்கம் போல பார்த்திபன் வந்ததும் காபி, பலகாரம் கொடுத்துவிட்டு அவனருகில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாள் காயத்ரி. மாடி பால்கனியில் ஊஞ்சலில் அமர்ந்தபடி லேசாய் ஆடிக் கொண்டே அவள் பேச அவள் தலையை அசைக்கும் போதெல்லாம் ஆடும் ஜிமிக்கிகளையும் அவளது கலகலவென்ற பேச்சையும் ரசித்தபடி சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி காபியை அருந்திக் கொண்டிருந்தான் பார்த்திபன். பேசிக் கொண்டே யிருந்தவள் திடீரென்று மயங்கிச் சரிய அவசரமாய் எழுந்து அவளை அப்படியே ஊஞ்சலில் கிடத்தியவன் அவள் தலைக்கு அணைவாக தலையணையை வைத்து விட்டு தொலைபேசியில் லேடி டாக்டரை அழைத்தான்.

சாவித்திரி என்னவோ ஏதோவென்று பதறிக் கொண்டு மாடிக்கு ஓடி வந்து விட்டார். வீட்டில் வேலை செய்யும் வேலையாள்கள் அனைவரின் முகத்திலும் கலவரம் டாக்டரம்மாள் பொதுவாக யாருடைய இல்லத்திற்கும்

சென்று பார்க்காதவர் சாவித்திரியம்மாளின் உடல் நிலையை முன்னிட்டும், அவர்களது குடும்பத்திற்கும் ஊரில் இருந்த பரம்பரை செல்வாக்கையும், மரியாதையை யும் முன்னிட்டும் வீட்டிற்கு வந்து பார்த்தார். எல்லோரும் என்னவோ ஏதோவென்று கையை பிசைந்து கொண்டு நிற்க டாக்டரம்மாள் புன்னகையுடன் சாவித்திரியம் மாளிடம் வந்து,

''இனிப்பு இருந்தால் கொடுங்க'' என்றார். ஒரு நொடி யில் செய்தியை புரிந்து கொண்ட சாவித்திரி உடனடியாக உள்ளே சென்று தட்டில் பட்டுச் சேலை பூ, பழம் இவற்றை வைத்துக் கொண்டு டாக்டரம்மாவிடம் நீட்டி,

''குலம் தழைக்குத்துன்னு நல்ல சேதி சொல்லிட்டிங்க. எங்க வயித்தில் பாலை வார்த்துட்டீங்க. இந்தப் பரிசை தட்டாம வாங்கிக்கணும்'' என்று கெஞ்சுதலாய் கூறினார். பெரியவளின் மனம் வருந்தக் கூடாதென்பதால் அதை வாங்கிக் கொண்ட டாக்டரம்மாள் சிரித்துக் கொண்டே விடை பெற்றார்.

பார்த்திபன் புரியாதவனாய், ''என்னவாயிற்று அம்மா. காயத்ரிக்கு என்ன உடம்புக்கு?'' என்று கேட்டான்.

சாவித்திரி கைகொள்ளாமல் இனிப்புகளை அள்ளி வேலையாள்களுக்கு வழங்கியபடி,

''போடா மடையா. நீ அப்பாவாகப் போகிறாய்டா. என் செல்ல மருமகள் என்னை பாட்டியாக்கி இருக்கிறாள். போடா போய் நம்ம ஜவுளிக் கடையிலிருந்து சேலை மூட்டையைக் கொண்டு வந்து இறக்கு. நம்ம வீட்டில். காளவாசலில் கடையில் தோட்டத்தில், கம்பெனியில் வேலை செய்கிறவங்க எல்லாருக்கும் வேட்டி, சேலை கொடு'' என்று மூச்சு விடாமல் பேசினார்.

பார்த்திபன் மாடிக்குத் தாவியேறினான். மனைவியை பார்த்தான். அப்போதுதான் மயக்கம் தெளிந்த காயத்ரி குடிக்கப் பழரசம் தந்தான். குடித்து முடித்தவள் தளர்வாய் எழுந்து உட்கார முயல.

''பார்த்துப் பார்த்து'' என்று பதறினான்.

''போதும் போதும். பதறாதீங்க. லேசா தலை சுத்துது அவ்வளவுதான்'' என்று கூறியவள் பேசிக் கொண்டிருக்கும் போதே வாந்தி எடுக்க கைத்தாங்கலாய் அவளைப் பிடித்து குளியலறைக்கு அழைத்துப் போனான். அவள் முகம் கழுவி, வாய் கொப்புளிக்க உதவி செய்தவன் மீண்டும் படுக்கைக்கு வந்தவளை தன் மேல் ஆதரவாய் சாய்த்துக் கொண்டு தலையைக் கோதி விட்டபடி,

''தேங்க்ஸ் காயத்ரி'' என்றான். அந்த சோர்வான நிலையிலும் தலையில் அடித்துக் கொண்ட காயத்ரி,

''ஐயோ எதுக்கு தேங்க்ஸ் சொல்றதுன்னு விவஸ்தை இல்லையா உங்களுக்கு. யாரேனும் கேட்டா சிரிப்பாங்க'' என்று செல்லமாய் கடிந்து கொண்டாள்.

''என் சந்தோசம் எனக்குத் தாண்டி தெரியும். வாழ்க்கையில் சொந்தமானோம். ஆனால் ஒன்று சேருவோமான்னு கலக்கப்பட்டேன். இப்போ அடுக்கடுக்காய் பரிசு கொடுக்கிறியேடி. மனசு பூரா சந்தோசம் மட்டும் தான் இப்ப நிரம்பியிருக்கு. கேளுடி. உனக்கு என்ன வேணும் கேளு. கார் வேண்டுமா? வைர நெக்லஸ் வேண்டுமா? என்னவேண்டும்ன்னு கேளு. நீ ஆசைப் பட்டதையெல்லாம் உன் காலடியில் கொண்டு வந்து போடுகிறேன்.''

காயத்ரி அவன் மார்பில் சாய்ந்தவாறே தலையை மட்டும் தூக்கி அவனைப் பார்த்து புன்னகை செய்தாள்.

"எனக்கு வேண்டியதெல்லாம் குறைவில்லாமல் எனக் குக் கிடைச்சிருச்சே. உங்க அன்பு வேணும்னு ஆசைப் பட்டேன். கிடைச்சிருச்சு. உங்க காதல் வேணும்னு கனவு கண்டேன். அதுவும் கிடைச்சுருச்சு. உங்க பிள்ளைக்கு அம்மாவாகணும்னு வேண்டிக் கிட்டேன். இப்போ அது வும் கிடைச்சிருச்சு. இது எல்லாவற்றையும் விட உயர்ந்த பரிசு எது இருக்கு சொல்லுங்க."

பேச்சை இழந்து அவளை இறுகக் கட்டிக் கொண்டான் அவன். காதலால் கட்டுண்ட கணவனும் மனைவியும் நெகிழ்ந்து கிடக்க சாவித்திரியோ கால்கள் தரையில் பாவாமல் மிதந்தார். எல்லா கோவில்களிலும் வேண்டு தலை நிறைவேற்றி அபிஷேக ஆராதனைகள் செய்தார். தொழில்கள், தோட்டங்கள், வீடு ஆகியவற்றில் வேலை செய்தவர்கள் அனைவருக்கும் புதுத் துணிகள் பரிசளித் தார். மருமகளை தரை மேல் நடக்க விடாமல் உள்ளங் கையில் வைத்துத் தாங்கினார்.

வாழ்க்கை இவ்வாறே போயிருந்தால் எந்தச் சிக்கல் களும் வராமல் நன்றாகவே இருந்திருக்கும். ஆனால் மேடு பள்ளங்கள் நிறைந்ததல்லவா வாழ்க்கை. அது தடைகல்லை கொண்டு வந்து போட்டது. சீராகவும் வேக மாகவும் சென்று கொண்டிருந்த வாழ்க்கைப் பயணத்தில் சிறு தடங்கல் ஏற்பட்டது.

காயத்ரியை தன் மனைவியாக மட்டுமே எண்ணி வாழும் பார்த்திபன் அவள்தான் உலகமென்று சுற்றி வந்தான். அவளது அன்பை சாவித்திரி பங்கு போடு வதைக் கூட விரும்பாதவனாக குட்டிப் போட்ட பூனையாய் அவள் எங்கே இருக்கிறாளோ அங்கே சுற்றினான். இந்த நிலையில் காயத்ரிக்கு இது தலைப்பிரசவம். அது தாய்

வீட்டில்தான் நடக்க வேண்டும் என்று யார் அவனிடம் கூறுவது? மகனின் மனநிலை அறிந்த சாவித்திரி வளைகாப்பை ஏழாம் மாதம் வைத்துக் கொள்ளாமல் ஒன்பதாம் மாதம் தள்ளி வைத்தார். வளைகாப்பு நாளும் வந்து விட்டது. ஊர் மெச்ச சிறப்பாக மகளுக்கு சீமந்தம் செய்தனர். கோவிந்தசாமி தம்பதியினர். மறுவீடு, தலை தீபாவளி என்று எதற்கும் செய்ய முடியாத அத்தனை உபசாரங்களையும் அன்று ஓர் நாளில் செய்து முடித்து விட்டனர்.

காயத்ரியை அழைத்துச் செல்லும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. சாவித்திரி கைகளை பிசைந்து கொண்டார். மகளை அழைத்துச் செல்லப் போகும் விவரம் மருமகனுக்குத் தெரியாது என்பது கோவிந்தசாமிக்கும், நவநீதத்திற்கும் தெரியாது. உலக வழக்கம்தானே. ஊருக்கு பெரிய மனிதன். பார்த்திபன் இதை அறிய மாட்டானா? என்றே அவர்கள் எண்ணியிருந்தனர். எனவே பார்த்திபன் விருந்து முடிந்து ஓய்வாக மாடியறையில் இருந்தபோது சாவித்திரியுடன், காயத்ரியின் பெற்றோர் மாடிக்குச் சென்று பார்த்திபனிடம் பேசினர்.

''அப்போ நாங்க கிளம்பறோம். தம்பி. சாயந்திரம் கிளம்பினா விடிவதற்குள் சென்னை போயிடுவாம்'' என்றார் கோவிந்தசாமி.

''அதற்குள் கிளம்புகிறீர்களா. ஒரு வாரம் இருந்து விட்டுப் போகலாமே'' என்றான் பார்த்திபன்.

''சாஸ்திரம் தெரியலை போல தம்பிக்கு. வளைகாப்பு பண்ணினா உடனே தாய் வீட்டுக்கு பெண்ணை கூட்டிப் போயிடணும். அதுதான் தம்பி நம்ம பழக்கம்'' என்றாள் நவநீதம்.

''தாய் வீட்டுக்கா. யாரை கூட்டிப் போகப் போகிறீர்கள்'' என்று பதறி எழுந்த பார்த்திபன் கேட்டான்.

''இது என்ன தம்பி புரியாதது போல் கேட்கறீங்க. காயத்ரியைத்தான் கூட்டிப் போகப் போகிறோம்'' என்றார் கோவிந்தசாமி புரியாதவராய்.

''யோசிச்சுத்தான் பேசுகிறீர்களா? யாரைக் கேட்டு என் பெண்டாட்டியைக் கூட்டிப் போவதாகச் சொல்கிறீர்கள்'' என்று கோபமாய் கேட்டான் பார்த்திபன்.

''என்னய்யா தம்பி சின்னப் பிள்ளையாட்டம் பேசுறே. நாட்டு வழக்கம் உனக்குத் தெரியாதா? வளைகாப்பு முடிஞ்சவுடன் பெண்ணை தாய் வீட்டுக்கு அனுப்ப ணும்பா'' என்றார் சாவித்திரி.

''ஏம்மா அவங்கதான் அவங்க பாட்டுக்கு பேசுகிறாங் கன்னா நீங்களும் கூடப் பேசுறீங்க. இது ஒன்பதாம் மாதம். எந்த நேரமும் அவளுக்கு பிரசவம் ஆகிவிடும். இப்போப் போய்... அதெல்லாம் வேண்டாம். அவள் இங்கேதான் இருப்பாள். நான் அனுப்ப முடியாது.''

''இதுக்குத்தான் நாங்க ஏழாம் மாதமே சீமந்தம் பண்ணி பெண்ணைக் கூட்டிப்போய் விடுகிறோமென்று சொன் னோம். கேட்டீர்களா அண்ணி. இப்போ ஒன்பதாம் மாதம்ன்னு ஒரு சொல் தம்பி வாயிலிருந்தே வந்திருச்சு பார்த்தீங்களா'' தன் போக்கில் நவநீதம் மனத்தாங்கல் பட்டாள்.

''அது சரி. ஏழாம் மாதமே கூப்பிட்டிங்களா. அம்மா என்ன நடக்குது இங்கே. என்கிட்ட கேட்காம இன்னும் என்னவெல்லாம் பண்ணி இருக்கீங்க.''

''மாப்பிள்ளை இப்போ என்ன நடக்கக்கூடாதது நடந்திருச்சு. எங்க பொண்ணை தலைப் பிரசவத்துக்கு

தாய் வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போறோம். இதைப் பயங்கர குற்றம் செஞ்ச மாதிரி பேசறீங்களே'' முதன் முறையாக கோவிந்தசாமி குரலை உயர்த்தினார்.

''அவ பிரசவத்துக்கு இங்கேதான் இருப்பா மாமா. எங்கேயும் அனுப்ப முடியாது. ஆரம்பத்திலிருந்து அவளை பரிசோதிச்ச டாக்டரம்மா இங்கே இருக்காங்க. வசதியான மருத்துவமனை. நான் என் பெண்டாட்டியை பார்த்துக்குவேன். நீங்க தேவையில்லாம தலையிட வேணாம்.''

''என்னது... தேவையில்லாமல் தலையிடறோமா. ஒத்தைப் பெண்ணைப் பெத்தவங்க மாப்பிள்ளை. தலைப் பிரசவம் பெத்தவங்கதான் பார்க்கணும். அதுதான் முறை. மறு வீடு, தலை தீபாவளிக்கு எதுவும் செய் யலைன்னு ஏற்கனவே ஊர் பேசுது. அதை பொறுத்துக் கிட்டோம். இப்போ ஒத்தைப் பொண்ணுக்கு தலைப் பிரசவம் பார்க்கக் கூட வக்கில்லாதவன்னு ஊர் பேச ணுமா? அதுக்கா உங்களுக்குப் பெண் கொடுத்தேன்'' கோவிந்தசாமி முறைப்பாய் பேச ஆரம்பிக்க சாவித்திரி தலையிட்டுப் பேசினார்.

''புரியாம பேசாதேடா பார்த்திபா. தலைப் பிரசவத் துக்கு பெத்தவங்க வீட்டுக்குத்தான் அனுப்பணும். அது தான் முறை. அது என்ன நம்ம ஊர் மாதிரி பட்டிக்காடா? சென்னைடா. பெண்ணைப் பெத்தவங்க அவங்கடா. கண்ணுக்குள்ள வைச்சுப் பார்த்துக்குவாங்க. பிடிவாதம் பிடிக்காம அனுப்புடா.''

''அம்மா நீங்க கொஞ்சம் பேசாம இருங்க. சென்னை தான் ஊரா. நம் ஊரெல்லாம் ஊரில்லையா? நான் என்ன காயத்ரியை வீட்டில் வைத்தா பிரசவம் பார்க்கச் சொல்

கிறேன். டவுனில் பெரிய மருத்துவமனைம்மா. நம்ம டாக்டரம்மாவோட மருத்துவமனை. இப்பவே ஏ.சி. ரூம் புக் பண்ணிட்டேன். என் பெண்டாட்டியை பார்த்துக்க எனக்குத் தெரியும். பிறக்கப் போறது என் பிள்ளைம்மா. அவனை தங்கத் தொட்டிலில் போட்டு நான் வளர்ப்பேன். அவங்களை வேணும்னா இங்கே இருந்து பெண்ணைப் பார்த்துக்கச் சொல்லுங்க. நான் முடிவா சொல்லிட்டேன். அவளை அனுப்ப முடியாது.''

''ஏண்டா நீ அர்த்தத்தோடதான் பேசுகிறாயா? பெத்த வங்க கண்ணில் பிள்ளையைக் காட்டாம பிரிச்சு வைக் கிறது பாவம்டா ராசா. பெண்ணைப் பெத்துட்டா பாசத்தை அத்துக்கிடணுமா. பிறக்கிறதுக்கு முன்னாடியே உன் பிள்ளை, உன் பிள்ளைன்னு உரிமை கொண்டாடு கிறாயே. அது போலத்தானே அவங்களுக்கும் இருக்கும்.''

''அம்மா அதெல்லாம் எனக்குத் தெரியாது. அவ என் பெண்டாட்டி. நான் அனுப்ப மாட்டேன்.''

கோபாவேசத்தோடு பார்த்திபன் பேச கோவிந்தசாமி பதில் வாக்குவாதத்திற்கு தயாராக சாவித்திரி திணறிப் போனார். 'ஏதாவது செய்'யென்று காயத்ரியைப் பார்த்து அவர் விழிகள் கெஞ்சின. காயத்ரி தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டாள். காதல் கணவனைப் பிரிய அவள் மனமும் மறுத்தது. பிரசவ நேரத்தில் அவனது அண்மை அவளுக்கு வேண்டியிருந்தது. தலைப் பிரசவம் பெண்களுக்கு மறுபிறவி என்பதை அவள் அறிவாள். தனக்கு ஏதும் ஆகிவிடுமோ என்ற எல்லா பெண் களுக்கும் உள்ள பயம் அவள் மனதிலும் இருந்தது. அவன் அருகில் இருப்பதையே அவளும் விரும்பினாள். ஆனால் பெற்றவர்கள் இதை கௌரவப் பிரச்னையாக எடுக்கக்

கூடும் என்று அவளும் எதிர்பார்க்கவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் பார்த்திபனின் அருகே தயங்கியவாறு சென்றவள்,

''என்னங்க'' என்று மெதுவாக அழைத்தாள். அவன் பதில் சொல்லாமல் அவளை முறைக்க ஆரம்பித்தான்.

''பிள்ளையை ஏண்டா முறைக்கிறே'' சாவித்திரி பரிந்து கொண்டு வர,

''உங்க வேலையைப் பாருங்க'' என்று தாயிடம் எரிந்து விழுந்தான்.

''அப்பா, அம்மா தப்பா ஒண்ணும் சொல்லலைங்க'' என்று காயத்ரி மென்று விழுங்க,

''தப்பா சொல்லலைன்னா, அவங்க சொல்றதுதான் சரின்னு சொல்கிறாயா? உனக்கும் சென்னைக்கு போக ணும்னு தோணிருச்சு இல்லையா'' என்று வரவழைத்துக் கொண்ட நிதானத்துடன் கேட்டான். கண்களில் சிவப் பேற ஆரம்பித்து இருந்தது.

''இப்படிக் கேட்டா என்னடா பதில் சொல்லும்? பச்சைப் புள்ளைடா? ஊரு நியாயம் உனக்கும் எனக்கும் தெரியுமா? அதுக்குத் தெரியுமா? ஊருக்கு நியாயம் சொல்ற, உனக்கு யார் சொல்கிறது.''

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த சாவித்திரி பொரிந்து தள்ள பார்த்திபன் காயத்ரியை திரும்பிப் பார்த்தான்.

''அம்மா என்னை குற்றவாளி ஆக்குறாங்க. நீ சொல்லு. சென்னைக்குப் போக நீ விருப்பப் படுகிறாயா இல்லை இங்கே இருக்க விருப்பப் படுகிறாயா? இப்போது முடிவு உன் கையில்'' என்று கேட்டான். அவன் உன் அப்பா வீட்டிற்குப் போக விரும்புகிறாயா என்று கேட்கவில்லை.

சென்னைக்குப் போக விரும்புகிறாயா என்றுதான் கேட்டான். அந்தக் கேள்வியின் உள் அர்த்தத்தை அவனது ஆழ் மனம் அறியும். அவனைப் பொறுத்தவரை சென்னை காயத்ரியின் தாய் தந்தை வசிக்கும் இடமல்ல. அரவிந்தன் இருக்கும் ஊர்.

அந்தக் கேள்வியின் சூட்சுமம் அறிந்திருந்தால் 'போகிறேன்' என்ற பதிலை காயத்ரி சொல்லியிருப்பாளா? பெண்களுக்கு பிறந்த வீடும், புகுந்த வீடும் இரண்டு கண்கள். எந்தக் கண்ணில் அடிபட்டாலும் வலிக்கும். காயத்ரி எதை விட்டுக் கொடுப்பாள்? தாய், தந்தை மாமியார் மூவர் ஒரு பக்கம். கணவன் ஒரு பக்கம். பெரியவர்களின் கௌரவத்திற்காக கணவனைப் பிரிந்து தலைப் பிரசவத்திற்கு தாய் வீடு செல்ல முடிவெடுத்தாள் அவள். அந்த முடிவு அவள் துயரத்தின் ஆரம்பம் என்பதை அறியாதவளாய்.

# 14

**ஆறு இரண்டும் காவேரி**
**அதன் நடுவில் ஸ்ரீரங்கம்**
**ரங்கநாதர் திருவடியை**
**சேவிக்க நீ பிறந்தவனோ**

அறியாதவளாய் காயத்ரி பேசினாள். அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த பார்த்திபன் மனம் துடிக்க நின்றிருந்தான். அவளது பதிலில்தான் அவனது மன நிம்மதி அடங்கியிருக்கிறது என்பதை அறியாதவளாய் காயத்ரி பேசினாள்.

''அப்பாம்மா என்னை நல்லா பார்த்துக்குவாங்க. நீங்க கவலைப்பட வேண்டாம். நான் சென்னைக்கு அவங் களோடு கிளம்புகிறேன்.''

இந்த வார்த்தைகள் அமிலமாய் அவன் காதில் விழ அவன் இமையோரம் துடிக்க இதழ்கள் நடுங்க அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான். பின் சாவித்திரியின் பக்கம் திரும்பி,

''உன் மருமகள் ஊருக்குப் போகட்டும்மா. அனுப்பி வை'' என்று சொன்னவன் விடுவிடுவென்று மாடிப்படி இறங்கி வெளியில் போய் காரில் ஏறிப் போய் விட்டான். அனைவரும் பிரமித்து நின்று விட்டனர். இரவு அவன் வீடு திரும்பும் வரை கிளம்ப மறுத்து விட்டாள் காயத்ரி. எல்லோரும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் பிடிவாத மாகக் கூறி விட்டாள்.

''அவர் வந்ததும் சொல்லி விட்டுத்தான் வருவேன்'' என்று.

பார்த்திபன் வீடு திரும்பும்போது அவர்கள் கிளம்பாமல் காத்திருப்பதைக் கண்டும் காணாதவன் போல் மாடியேறி போய் விட்டான். தயங்கியபடி மாடியறையில் நுழைந்தாள் காயத்ரி. திரும்பாமல் நின்றிருந்த கணவனின் அருகில் சென்று அவனைத் தன்புறம் திருப்பினாள். சின்னக் கண்ணன் தவழ்வது போல் முந்தானையில் சரிகை வேலை செய்த பச்சைப் பட்டு உடுத்தியிருந்தாள். அந்த சின்னக் கண்ணனைக் கண்டதும் பார்த்திபனின் கோபம் சிறிது தணிய மனைவியைப் பார்த்தான்.

விரல்களில் மருதாணியிட்டு கை நிறைய வளை யல்கள் அடுக்கி நின்றவளின் தாய்மைக் கோலம் அவள் மீது பரிவை வரவழைக்க,

"என்னடி" என்றான்.

"ஊருக்குப் போன்னு சொன்னா போகிறேன். இல்லை போகவில்லை."

"அடேங்கப்பா. புருசன் பேச்சை மீறாதவ. நான்தான் நீ சென்னைக்கு போவதில் இஷ்டமில்லைன்னு காட்டுக் கத்தலாய் உங்க அப்பாகிட்ட கத்திட்டேன். அதுக்குப் பின்னால நான் சென்னைக்குப் போகிறேன்னு நீதானேடி சொன்னவ. இப்போ என் கட்டளையை கேட்டு நிற்கிறவ மாதிரி நடிப்பென்னடி வேண்டிக்கிடக்கு."

"ஏங்க ஊருக்குப் போய் அங்கேயே இருக்கப் போவது போல் சண்டைக்கு வர்றீங்க. எண்ணி மூணு மாதம் உங்க பிள்ளையை தூக்கிக்கிட்டு ஓடி வந்திட மாட்டேனா? பெரியவங்க மனமும் கஷ்டப்படக் கூடாதில்லையா?"

"அப்போ என் மனம் கஷ்டப்பட்டா பரவாயில்லை."

காயத்ரி பதில் பேசாமல் கணவனையே பார்த்துக் கொண்டு நின்றாள். அவள் கண்கள் கலங்கின. அவன் மனம் இளகியது.

"சரி சரி. நானே காரில் வந்து விட்டு விட்டு வருகிறேன் கிளம்பு."

"அப்பா வாடகைக் காருக்குப் போன் பண்ணியிருக் கார்."

"என் தாய் மாமனுக்கு கௌரவ பிரச்னை வந்து விட்டது. நான் அவரிடம் சொல்லிக் கொள்கிறேன். உனக் கில்லாத கார் யாருக்குடி? நம்ம காரில் போகலாம் வா."

"இரவு முழுவதும் கார் ஓட்ட வேண்டும் ஏற்கனவே பகலில் நீங்கள் சரியாக ஓய்வு எடுக்கவில்லை."

''சென்னைக்கு வந்து ஓய்வெடுத்துக் கொண்டால் போகிறது. உன்னை விட்டு விட்டு உடனேவா வரப் போகிறேன். இரண்டு நாள் இருந்து விட்டுத்தான் வரு வேன்.''

''நிஜமாவா'' காயத்ரியின் முகத்தில் வெளிச்சம் பர வியது.

''இப்போதுதான் பழைய களை திரும்பி வருது. கொஞ்சம் சிரிச்ச முகமாவே இருடி.''

''நான் சிரித்த முகமாத்தான் இருந்தேன். நீங்கதான் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க விட்டு என்னை அழுமூஞ்சியா மாத்தினீங்க.''

''தப்புத் தாண்டி தோப்புக் கரணம் போடவா'' என்று அவன் காதைப் பிடிக்க அவள் அவன் மூக்கைப் பிடித்துத் திருகினாள்.

மருமகன் உடன் வருகிறார் என்றதும் மனத்தாங்கல் போய் விட்டது கோவிந்தசாமிக்கும், நவநீதத்திற்கும். முகம் மலர சாவித்திரியிடம் விடை பெற்றுக் கொண்ட வர்களிடம்,

''பத்திரமா பார்த்துக்க நவநீதம். பார்த்திபனுக்கு அனுப்பவே மனதில்லை. நான்தான் பெற்றவர்கள் மனம் நோகக்கூடாதுன்னு வம்படியாய் அனுப்பி வைக்கிறேன். நல்லபடியா பார்த்து அனுப்பி வை'' என்றார்.

''ஏன் அண்ணி பயப்படறீங்க. பச்சைப் பிள்ளை யாட்டம் கண் கலங்கிக்கிட்டு. நாங்க பார்த்துக்க மாட் டோமா அண்ணி. உங்க மருமகளை பெத்து வளர்த்த அண்ணி நான். அவள் நல்லபடியா குழந்தையைப் பெத்து திரும்பி உங்ககிட்ட ஒப்படைக்கிறவரை உயிராய் பார்த் துக்குவேன். கவலை வேண்டாம்.''

''மனசே கேட்கலையே நவநீதம்.''

''நாங்க பார்த்துக்குவோம் அண்ணி நீங்க தெம்பா இருங்க அதுதான் முக்கியம்.''

கிளம்பும் முன் சாவித்திரியின் கால்களில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு கிளம்பினாள் காயத்ரி. பூஜையறையில் கடவுளை வணங்கி அவள் நெற்றியில் குங்குமம், விபூதி இட்டு விட்டு வழி அனுப்பினாள் காயத்ரி.

இரண்டு நாள் சென்னையில் தங்க முடிவு செய்திருந்ததால் வேலையாள்களை கூப்பிட்டு தாயையும், வீட்டையும் பத்திரமாய் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, ஜவுளிக் கடை, கம்பெனிகளுக்கு போன் பண்ணி சில ஏற்பாடுகளைப் பண்ணி விட்டு பார்த்திபன் கிளம்பினான்.

மருமகனும் கூட வருவதில் காயத்ரியின் பெற்றோருக்கு மனம் கொள்ளாத மகிழ்ச்சி. காலையில் இருந்து அதே மருமகன் பண்ணிய ரகளை அவர்கள் நினைவில் இல்லை. எல்லா வேலைகளையும் தள்ளி வைத்து விட்டு மனைவிக்காகவும், மாமனார் மாமியாருக்காகவும் சென்னை வருகிறானாம். தங்களுக்குள் ரகசியம் பேசி மாய்ந்து போனார்கள்.

காரில் பின் சீட்டில் ஏறப்போன காயத்ரியை பார்த்திபன் முன்புறம் நுழைத்துக் கொண்டான். சளசளவென்று பேசிக் கொண்டு வந்தாள் காயத்ரி. பின்புறம் பெரியவர்கள் இருவரும் தூங்கிக் கொண்டு வந்தனர். டேப்பில் பழைய பாட்டுக்கள் அதுவும் கண்ணதாசன் பாட்டுக்கள் ஒலிக்க இருவரும் இதமான மனநிலையோடு விடிய விடிய அரட்டை அடித்துக் கொண்டு சென்றனர்.

இதே போல் ஒரு இரவில் தான் மட்டும் தனியாக கோபால்சாமி பெரியப்பாவுடன் வந்ததையும் அவள் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் அவர் 'என்னத்தை...' என்று ராகம் இழுத்ததையும் தான் சரியான 'என்னத்தை கன்னையா' என்று ரகசியமாய் தலையில் அடித்துக் கொண்டதை அவள் சொல்லிச் சிரிக்கும்போது அவன் முகம் இறுகியதை இருளில் அவள் கவனிக்கவில்லை.

அதிகாலையில் சென்னைக்கு போய் சேர்ந்து விட்டார்கள். காரிலிருந்து இறங்கிய நவநீதம் சுறுசுறுப்பாய் செயல்பட்டாள். ஆரத்தி கரைத்து எடுத்து வந்து மகள், மருமகன் இருவரையும் நிற்க வைத்து ஆரத்தி சுற்றி எடுத்து வீட்டுக்குள் அழைத்து வந்தாள். அதற்குள் மாடியறையை தயார் செய்து விட்ட கோவிந்தசாமி டி.வி.யை தூக்கி வந்து மாடியில் வைத்தார்.

''இதெல்லாம் எதுக்கு மாமா'' என்று பார்த்திபன் சிரிக்க,

''என்ன மாப்பிள்ளை அப்படிச் சொல்லிட்டிங்க. நீங்களும் காயத்ரியும் இங்கே இருக்கும் வரை எல்லாமே மாடியில்தான் இருக்கும்'' என்றார் கோவிந்தசாமி.

அதற்குள் நவநீதம் விருந்து ரெடி பண்ணிவிட எல்லோரும் குளித்துச் சாப்பிட்டார்கள். இரவு விழித்த அசதியில் காயத்ரியும், பார்த்திபனும் மாடியறையில் தூங்கிவிட மதிய உணவிற்கு அசைவ விருந்து தயார் செய்தாள் நவநீதம்.

மதியம் எழுந்தவுடன் அசைவ விருந்தை சுவைத்து சாப்பிட்ட பார்த்திபன் மாடியறைக்கு வர பின்னாலேயே வெற்றிலைத் தட்டை எடுத்து வந்தாள் காயத்ரி. அவள் மடித்துக் கொடுத்த வெற்றிலையை வாயில் குதப்பிய வாறு,

''இது கூட நல்லாத்தான் இருக்கு'' என்றான் பார்த்திபன்.

''எதுகூட...?'' என்று வினவினாள் காயத்ரி.

''மாமனார் வீட்டில் சீராடுறதுதான். எங்க வீட்டில் அம்மா நோயாளி. எல்லாம் வேலையாள்தான் செய்வாங்க. நீ வந்தவுடன் பார்த்துப் பார்த்துச் செய்வாய். ஆனாலும் இது விருந்தாளி மாதிரி எனக்கு புதிதுதான்.''

''இதையெல்லாம் மாப்பிள்ளை உபசாரம் என்றார் அப்பா. நீங்கள் மறுவீடு, தலை தீபாவளி எதற்குமே வரவில்லையே. அதனால்தான் உங்களுக்கு மாமியார் வீட்டின் அருமை தெரியவில்லை.''

''இப்போது யோசிக்கும்போது வந்திருக்கணும்னு தோணுது. புதுசா கல்யாணமானா இருக்கிற ஜோரே வேற இல்லை.''

''ஆமாம். அதை இப்போ சொல்லுங்க.''

''ஏண்டி இப்போ என்ன எனக்கு வயசா ஆச்சு? இன்னும் புது மாப்பிள்ளை ஜோர் இருக்கு.''

''நீங்க புது மாப்பிள்ளையாய் எப்போதுமே இருங்க. இந்த வீட்டில் உங்களுக்கு ராஜ உபசாரம் பண்ண சளைக்கவே மாட்டாங்க. என் அப்பாம்மாவுக்கு அவங்க மாப்பிள்ளை என்னைக்கும் ராஜாதான்.''

மதியம் சிறிது நேரம் கண்ணயர்ந்தனர். மாலையில் காபி பலகாரம் சாப்பிட்டு விட்டு கீழே கொஞ்ச நேரம் இருக்கலாம் என்று இறங்கி வந்தனர். முன்னறையில் பேச்சுக் குரல் கேட்டது. இருவரையும் கண்டதும் எழுந்தவன் உற்சாகமாய் பார்த்திபனிடம் கைகுலுக்க கை நீட்டியவாறு சொன்னான்.

''நான் அரவிந்தன் இண்டஸ்ட்ரீயலிஸ்ட் ராஜதுரை யோட மகன்.''

பார்த்திபன் மனம் சிணுங்க கை நீட்டினான். அதற்குள் இவள் வரவு இவனுக்குத் தெரிந்து விட்டதா? காயத்ரியின் பக்கம் திரும்பிய அரவிந்தன்.

''பார்த்தாயா இதைத்தான் டெலிபதி என்று சொல் வார்கள். காலையில் வந்திருக்கிறாய். எனக்கு ஒரு போன் பண்ணி நீ வந்திருப்பதைச் சொல்லவில்லை. தற்செய லாய் நானாய் இந்தப் பக்கம் வந்தவன் எதற்கும் பார்த்துப் போகலாம் என்று வந்தால் நீ வந்திருக்கிறாய்'' என்று கூறினான்.

''மன்னிக்கணும். காலையில் நாங்கள் வந்ததும் உங் களுக்கு சொல்லணும்னு நினைத்தேன் மறந்து விட்டேன்.''

''வாக்குத் தவறி விட்டாய்'' என்று சிரித்தான் அரவிந் தன். புருவம் உயர்த்தி கேள்வியாய் பார்த்த பார்த்திப னிடம்,

''சென்னைக்கு வந்த அடுத்த நிமிடமே உங்களுக்குத் தகவல் சொல்கிறேன்னு காயத்ரி வாக்கு கொடுத்திருந்தது. அதைத்தான் சொன்னேன்'' என்று விளக்கமளித்தான் அரவிந்தன்.

'சென்னைக்கு வரத் துடித்ததின் காரணம் இதுதானா?' என்று குமுறிய பார்த்திபனின் மனதை, அவனது அறிவு கட்டுப்படுத்தியது.

'பொறு பார்த்திபா. காயத்ரி உன்னைக் காதலிப்பவள்.' என்றுமே அறிவும், உணர்ச்சியும் எதிர் மறை துருவங்கள். இரண்டும் போராட பார்த்திபன் தலையைப் பிடித்துக் கொண்டான். அதைப் பார்த்த கோவிந்தசாமியும், நவ நீதமும் பதறிப் போயினர்.

''என்ன மாப்பிள்ளை தலை வலிக்குதா. காயத்ரி அந்த பேனைப் போடம்மா'' என்று அவர்கள் பதற காயத்ரி பரபரப்பாய் மின் விசிறியைப் போட்டாள்.

சூழ்நிலையில் பேதத்தை உணர்ந்த அரவிந்தன் விடை பெற்றுக் கொண்டான்.

''அப்போ நான் கிளம்புகிறேன் சார். உங்களைப் பார்த்து பேச வேண்டும் என்று நினைத்தேன். இன்னொரு நாள் உங்களுக்கு நேரம் இருக்கும்போது சொல்லுங்கள் வருகிறேன்.''

அவன் சென்ற திசையைப் பார்த்துக் கொண்டிருந்த பார்த்திபன். 'இன்னொரு நாளும் வருவானாமா? ஏன் இவனுக்கு வேறு வேலையே இல்லையா' என்று நினைத்தது.

மறுநாளும் அதே சிந்தனையில் இருந்தவன் தொழில் நிமித்தம் ஒருவரைப் பார்த்து வர வேண்டுமென்று காலை உணவிற்குப் பின் கிளம்பிச் சென்றான். அவன் சென்ற சிறிது நேரத்தில் காயத்ரிக்கு பிரசவ வலி வந்து விட்டது. துடித்துப் போய் விட்டனர். அவளைப் பெற்ற வர்கள். பார்த்திபனுக்கு போன் செய்தபோது அவனது போன் 'ஸ்விட்ச் ஆஃப்' என்று தகவல் சொன்னது. தொழிலில் விசயங்கள் பேசும் போது செல்போனை ஆஃப் செய்து விடுவது அவனது வழக்கம். முக்கியமான பேச்சுக்கள் தடைபட்டு விடக்கூடும் என்பதால் அதைச் செய்வான். இன்று அதுவே அவனது உயிருக்குயிரான காதல் மனைவியின் இக்கட்டான நிலைமையை அவன் அறிந்து கொள்ள முடியாமல் செய்து விட்டது. காலையில் உணவு பரிமாறி கையாட்டி வழி அனுப்பி வைத்தவள் சில நிமிடங்களில் பிரசவ வலி காண்பாள் என்பதை அவன்

அறிந்திருந்தானா என்ன? அறிய நேர்ந்திருந்தால் அவளை விட்டு வினாடிப் பொழுதும் விலகியிருக்க மாட்டானே.

மதிய உணவு வேளையில் அவனது கார் மாமியார் வீட்டின் முன் வந்து நின்றது. வீடு பூட்டியிருந்தது. பக்கத்து வீட்டம்மாள் வந்து விவரம் சொன்னாள்.

''காயத்ரிக்கு பிரசவ வலி வந்திடுச்சு தம்பி. தெருவில் ஒரே கலவரமா இருந்துச்சு. அவங்க எப்படியோ ஆஸ் பிட்டல் கூட்டிப் போயிருக்காங்க.'' அவள் மேலே சொல் வதைக் கேட்க அவனது செவிகள் தயாராக இல்லை. பதறிப் போனவனாய்.

''எந்த ஹாஸ்பிடல் போனாங்க'' என்று வினவினான்.

''மலர் ஹாஸ்பிடல்.''

அடுத்த நொடி அவன் அங்கு இல்லை. காற்றிலும் விரைவாய் அவனது கார் விரைந்தது. புயலாய் மருத்துவ மனையில் நுழைந்தவன் வரவேற்பு பகுதியில் விவரம் சொல்லிக் கேட்டான்.

''காயத்ரி ரூம் நெம்பர் 303'' வரவேற்புப் பெண் முடிக்கு முன் அவன் பறந்து விட்டான்.

முந்நூற்றி மூன்றாம் எண் அறையின் உள்ளே அவன் நுழையப் போகும்போது காயத்ரியின் குரல் கேட்டது.

''மறக்க மாட்டேன் அரவிந்தன். என் உயிருள்ள வரை மறக்க மாட்டேன்.''

பார்த்திபனுக்கு அவனது செவிகளில் விழுந்த செய்தியை நம்ப முடியவில்லை. 'காயத்ரியா பேசுகிறாள்' இருக்காது என்று அறிவு சொன்னது. 'அவளது குரலைத்தான் கேட் டாயே' என்று உணர்ச்சி இடித்தது. பின்புறத்திலிருந்து.

''வாங்க மாப்பிள்ளை'' என்ற குரல் கேட்டுத் திரும்பி னான் பார்த்திபன். நவநீதம் நின்றிருந்தாள். கையில் மருந்து மாத்திரைகள்.

''உங்களுக்கு பையன் பிறந்திருக்கான் மாப்பிள்ளை. சுகப் பிரசவம் ஆயிருச்சு.''

''மாமா எங்கே?''

''உங்க அம்மாவுக்கு போன் பண்ணப் போயிருக்கார். என்னிடம் மருந்து, மாத்திரை வாங்கிக் கொடுத்து விட்டுப் போனார்.''

''காயத்ரியின் செல்போன் எங்கே?''

''இன்னைக்கே பிரசவ வலி வரும்ன்னு எதிர்பார்க் கலை. திடீர்ன்னு வரவும் உங்களுக்கு அவசரமா போன் பண்ணினா சுவிட்ச் ஆஃப்னு பதில் வரவும், துடிச்சுப் போய் போனை தூக்கிப் போட்டுட்டா. அந்த சமயம் அரவிந்தன் வந்திருந்தாப்புல. அந்தத் தம்பி காரிலேயே ஹாஸ்பிடல் கொண்டு வந்து சேர்த்திட்டோம். உடனே பிரசவம் ஆயிடுச்சு. தாயும் பிள்ளையும் நல்லா இருக்காங்க. வாங்க வந்து உங்க பிள்ளையைப் பாருங்க.''

ஆர்வம் வடிந்தவனாய் அவன் உள்ளே போனான். கட்டிலருகில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த அரவிந்தன் எழுந்து,

''வாழ்த்துக்கள்'' என்று கை நீட்டினான். இயந்திரமாய் அவன் கரம் பற்றிக் குலுக்கினான். தொட்டிலின் அருகே சென்று மகனைப் பார்த்தான். ரோஜாக் குவியலாய் அழ காய் துயின்று கொண்டு இருந்தான் அவன் பெற்ற செல்வன்.

'மகனே நீ பிறககும் போது அருகிலிருக்க வேண்டு மென்று துடித்தேனே. இன்று அருகிலேயே நான்

இருந்தும் நீ பிறந்தவுடன் கையில் ஏந்தும் பாக்கியம் இழந்து விட்டேனே' என்று அவன் மனம் குமுறியது.

கட்டிலில் சோர்வாய் கிடந்த காயத்ரி அவனது வருகையைக் கண்டு பரவசம் அடைந்தாள். அவன். முகம் பார்க்க அவள் விழிகள் தவித்தன. அவளுக்கு முகம் காட்டாமல் முதுகைக் காட்டியவாறு மகனிடம் நின்று கொண்டிருந்தவன், அப்படியே வெளியே சென்று விட்டான்.

அதன் பின்னர் பலமுறை அந்த அறையினுள் நுழைந்து மகனைப் பார்த்தவன் அவள் பக்கம் முகம் திருப்பவே இல்லை. செய்தி அறிந்து பட்டுச் சட்டை தைத்து பவுன் சங்கிலி எடுத்துக் கொண்டு பறந்து வந்த சாவித்திரி பேரனைக் கண்டு சீராடும் வரை உடன் இருந்தான். அடுத்த ஒரு வாரமும் சாவித்திரியும், பார்த்திபனும் சென்னையில்தான் தங்கியிருந்தனர். மாமனார், மாமியார், தாயார் ஆகியோரை வீட்டிற்கும், மருத்துவமனைக்கும் மாறி மாறி சலிப்பின்றி அழைத்துச் சென்றான். பணத்தை தண்ணீராய் வாரி இறைத்தான். மருத்துவமனை செலவுகளை மாமனார் சொல்லச் சொல்ல அவனே செய்தான்.

அடுத்ததாகப் புதுக் கார் ஒன்றை வாங்கினான். ஊருக்குப் போன் பண்ணி ஒரு டிரைவரை நியமித்து அனுப்பி வைக்கச் சொன்னான். கிளம்பும்போது அந்தக் காரையும் டிரைவரையும் மாமனார் வீட்டில் நிறுத்தி வைத்தான்.

''இங்கே எதுக்கு மாப்பிள்ளை காரை நிறுத்தி வைக்க றீங்க.''

''இன்னும் மூன்று மாதங்கள் காயத்ரி குழந்தையுடன் இங்கேதான் தங்க வேண்டும் என்று சொல்லி விட்டீர்கள். திடீர் என்று அவசர தேவை வரலாம். என் மனைவிக்கும்,

மகனுக்கும் இந்தக் காரும் டிரைவரும் தேவைப்படும். ஊருக்கு வரும்போது இந்தக் காரிலேயே வரட்டும்.''

விளக்கம் கேட்ட மாமனாரிடம் பதில் கூறினான். நவநீதம் சிரித்துக் கொண்டே,

''அவசரத் தேவைன்னா டாக்ஸியை கூப்பிட்டுக்க லாமே. கார் எதுக்கு? மூன்று மாதம் டிரைவர் வேறு இங்கு தங்கணும். எதுக்கு அநாவசிய செலவு?'' என்று கூறினாள்.

''இதனால் எல்லாம் என் பணம் குறைந்து விடாது. அவர் வெறும் கார் டிரைவர் மட்டுமில்லை. உங்களுக்கு கடை கண்ணிக்குப் போய் வருவார். வெளியே வேலை எதுவும் இருந்தால் செய்வார். அத்தோட என் மகன், மனைவி வாடகை காரிலேயோ, மத்தவங்க காரிலேயோ அது என்னதான் உயிர் போற அவசரமாயிருந்தாலும் போய் வரதை நான் விரும்பலை.''

கோவிந்தசாமிக்கு பொறி தட்டிற்று. ஆணின் குணம் ஆண் அறிவாரே. அவரும் ஒரு கணவன். ஒரு பெண் ணிற்கு தந்தை. புரிந்து கொண்டார். மனைவியை அதட்டி னார்.

''எதுக்கு வீணாய் கேள்வி கேட்கிற, அவர் பெண் டாட்டி, பிள்ளைக்கு என்ன தேவைன்னு அவருக்குத் தெரியாதா? அவர் சொல்றதுதான் சரி. இனிமே தேவை யில்லாம மத்தவங்க உதவியை கேட்காதே. நம்ம கிட்ட இல்லாததா மத்தவங்க கிட்ட இருக்கு?''

''இல்லைங்க நான் எதுக்கு சொல்றேன்னா.''

''வாயை மூடிக்கிட்டு போய் வேலையைப் பார்.''

அவர் கத்தவும் அவள் உள்ளே போய் விட்டாள். மருமகன் பக்கம் திரும்பிய கோவிந்தசாமி பவ்யமாய்.

''நீங்க தப்பா நினைக்காதீங்க மாப்பிள்ளை வீட்டில் பெண்களுக்கு என்ன தெரியும்? நான் பார்த்துக்கறேன். காரும், டிரைவரும் இங்கேயே இருக்கட்டும்'' என்றார்.

வார இறுதியில் அன்னையோடு கிளம்பினான் பார்த்திபன். காயத்ரியை மருத்துவமனையிலிருந்து அழைத்து வந்து வீட்டில் விட்டு விட்டுத்தான் அவர்கள் கிளம்பினார்கள். தெரிந்தவர்கள், உறவினர்கள் குழந்தையைப் பார்க்க வந்து போய் கொண்டு இருக்க காயத்ரியால் கணவனின் முகம் பார்த்து ஒரு சொல் பேச முடியாமலே போனது. கிளம்பும் வரை அவளிடம் ஒரு வார்த்தைகூடப் பேசாதவன் அப்படியே கிளம்பிப் போய் விட்டான். பூங்குளம் வந்து இறங்கிய சாவித்திரிக்கு வீடே பிடிக்கவில்லை. ஒரு வாரமாய் உடனிருந்த பேரனின் நினைவு வாட்டியது. காயத்ரி இல்லாத வீடு வெறிச்சோடியது. அவளது கண்கள் நாற்காட்டியைப் பார்த்து கணக்கிட்டது. காயத்ரி வர இன்னும் எத்தனை நாள்களாகும்?

## 15

**செண்டாடப் பூ மலர - எங்கள்**
**தேசத்தார் கொண்டாட**
**கண்ணான கண்ணன் பிறந்தான் - மனக்**
**களிப்பினை அள்ளித் தந்தான்.**

'இன்னும் எத்தனை நாள்களாகும்' மடியில் கண்ணனை தூங்க வைத்துக் கொண்டிருந்த காயத்ரியின் மனம் கணக்கிட்டது. கண்ணன் பிறந்து இரண்டு

மாதங்கள் முடிந்து மூன்றாம் மாதம் ஆரம்பமாகி விட்டது. பார்த்திபனின் நினைவு அவள் நெஞ்சைத் துளைத்தது. அன்று போனவன் இத்தனை நாள்களில் வரவேயில்லை. தினமும் சாவித்திரிதான் போன் செய்வார். அவன் கோவிந்தசாமியிடம் பேசுவதை அறிந்து கொண்டாள். அதுவும் அவர் பேங்கில் இருக்கும் நேரம் பார்த்துத்தான் அவரிடம் பேசுவான். மகனின் நல விசாரிப்பாகவே அது இருப்பதாக அவர் கூறுவார். ஆனால் மகள் வாழ்க்கையில் எந்த சங்கடமும் இல்லை என்ற நிம்மதியோடு அவரை இருக்கவும் வைத்தான். அதுதான் அவனது கெட்டிக்காரத் தனம்.

ஏன் இந்த கோபமும், விலகலும், தவித்தாள் அவள். என்ன தவறு செய்தாள் என்று எத்தனை முறை யோசித் தாலும் விளங்கவே இல்லை. அன்று சிரித்த முகமாய் அவளிடம் விடைபெற்று தொழில் நிமித்தமாய் ஒருவரை சந்திக்க வேண்டும் என்று கிளம்பிப் போனான். அவன் போன சிறிது நேரத்தில் காயத்ரிக்கு பிரசவ வலி கண்டு விட்டது. கோவிந்தசாமி கால்டாக்ஸிக்கு போன் பண்ணி னார்.

காயத்ரி பார்த்திபனுக்கு போன் பண்ணினாள். பார்த்திபனின் போன் 'சுவிட்ச் ஆஃப்' என்றது. திடீரென்று பார்த்தால் தெருவில் ஒரே கலவரம். தெருமுனையில் அரசியல்வாதி ஒருவரின் வேலையாளை வெட்டிப் போட்டிருந்தனர். இரு தரப்புக்கும் பயங்கரத் தகராறு. சாலையில் ஒரே மக்கள் வெள்ளம். கல் பறந்தது. போலீஸ் குவிக்கப்பட்டது. போக்குவரத்து நான்கு மணி நேரங்கள் தடை பட்டது. கால் டாக்ஸி நுழைய முடியவில்லை என்று போன் வந்தது. தவித்துப் போனவர்களை காப்பாற்ற

தெய்வம் அனுப்பிய துணையாய் அந்த நேரம் பார்த்து அரவிந்தன் அங்கே வந்தான். காயத்ரியின் நிலைமை கண்டு பதறிவிட்டான். தன் காரில் அவர்களை ஏற்றிக் கொண்டு காரை கிளப்பிவிட்டான். ஒரு கல் பாய்ந்து வந்து அவன் கார் கண்ணாடியை உடைத்து அவன் நெற்றியைப் பதம் பார்த்தது. அவன் அசரவில்லை. சந்து பொந்துகளில் திருப்பி ஓட்டி கலவர பகுதியை கடந்து விட்டான். காயத்ரியை பத்திரமாய் மருத்துவமனையில் சேர்த்தும் விட்டான். ஒரு நிமிடம் தாம்தமாக வந்திருந் தாலும் தாய், சேய் இருவருக்கும் ஆபத்து நேர்ந்திருக்கும் என்று மருத்துவர் கூறியவுடன் காயத்ரி கலங்கிவிட்டாள்.

''நன்றி அரவிந்தன் நன்றி. என் உயிருள்ள வரை இந்த உதவியை மறக்கமாட்டேன்'' என்று நாத்தழுதழுக்க நன்றி கூறினாள்.

அத்தகைய ஆபத்திலிருந்து தப்பி பிரசவித்தாளே. அவளின் அருமை நாயகன் முகம் பார்க்க காத்திருந்தாளே. அவன் வந்ததும் 'இதோ உன் மகனும் நான் பத்திரமாய் அவனை பெற்று உன்னிடம் கொடுத்துவிட்டேன்' என்று சொல்லத்துடித்தாளே. அவன் வந்ததும் அதைக் கேட் டானா? அவள் நலம் விசாரித்தானா. 'பார் நம் மகன் என் னையே உரித்து வைத்திருக்கிறான்' என்று பெருமைப் பட்டானா? இல்லையே. எதிரி போல் பாவித்து விட்டு போய்விட்டானே.

காயத்ரியின் கண்களில் நீர் நிறைந்தது. அவன் அவளைக் காதலிக்கவே இல்லையா? அவனுக்காக அவள் உயிரை விடத் துணிந்ததால் ஏற்றுக் கொண்டானா? உறங்கிக் கிடந்த சந்தேக எண்ணங்கள் விழித்து எழுந்தன. அதன் கனத்தில் அவள் அமுந்திப்போனாள். அவளது

செல்போன் ஒலித்தது. எடுத்துப் பார்த்தாள். சாவித்திரி தான் பேசினார்.

''காயத்ரி நல்லா இருக்கியா தங்கம். என் பேரன் எப்படி இருக்கிறான். நாளைக்கு நல்ல நாள் உன்னை அழைத்துக் கொண்டு வர இருக்கிறோம். போனை நவநீதத்திடம் கொடு.''

சாவித்திரியின் குரல் மகிழ்வோடு ஒலித்தது. காயத்ரி நவநீதத்தை அழைத்து போனைக் கொடுத்தாள். வாங்கிப் பேசி முடித்த நவநீதம் சோர்ந்து போனாள். பேரனின் அருகே வந்து அவனைத் தூக்கிக் கொண்டாள்.

''என்னடா கண்ணா. நாளைக்கு உன்னையும் உன் அம்மாவையும் கூட்டிக்கிட்டு போய் விடுவாங்க. அப் புறம் உங்க வீட்டில்தான் இருப்பீங்க. இந்த தாத்தாவை யும், பாட்டியையும் மறந்து விடுவீங்க,'' என்று கண் கலங்கினாள்.

காயத்ரி தாயின் மடியினில் பாசமாய் தலையைச் சாய்த்துக் கொண்டாள். தாயின் தவிப்பு புரிந்தாலும் பெண் வாழ வேண்டிய இடம் புகுந்த வீடல்லவா? அவள் போய்த்தானே ஆகவேண்டும்.

மறுநாள் காரில் பார்த்திபனும், சாவித்திரியம்மாளும் வந்தனர். சம்பிரதாயங்கள் முடிந்தவுடன் தாயுடன், மனைவியையும், குழந்தையையும் அனுப்பி வைத்தான் சென்னையில் நிறுத்தப்பட்டிருந்த புதுக்காரில். அவன் தனியாக தன் காரில் தொடர்ந்து வந்தான்.

வரும்போது மனைவியைப் பின்சீட்டில் அமரவிடாமல் தன்னருகில் அமர்த்திக் கொண்டவனின் இந்தச் செய்கை அவள் மனதைப் பாதித்தது.

இரவு நெருங்குகையில் ஊருக்குத் திரும்பி விட்டனர். வீட்டில் விருந்து தயாராக இருந்தது. உறவினர்கள், ஊரில் உள்ளவர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். ஆனால் பார்த்திபன் அவர்கள் வீட்டில் இறங்கியதும் 'வேலை' யென்று சொல்லி சென்றுவிட்டான். எல்லோரும் விருந்து சாப்பிட்டுக் கிளம்பிச் சென்று விட கணவனுக்காய் காத்து நின்றாள் காயத்ரி.

''அவர் எங்கேயத்தை இன்னும் வரக்காணோம். இவ்வளவு நேரம் வெளியே தங்கமாட்டாரே.''

''அதையேன்மா கேட்கிறே. இந்த மூணு மாசமா ஏதோ 'புரா ஜாக்கெட்'டாமே..''

''அது 'புரா ஜாக்கெட்' இல்லை அத்தை. 'புராஜெக்ட்.''

அந்த நிலையிலும் காயத்ரியின் இதழ்களில் புன்னகை மலர்ந்தது.

''அது என்ன பேரோ என் வாய்க்குள்ள நுழையலை. அது பேரைச் சொல்லிக்கிட்டு நினைச்சா வீட்டுக்கு வாரான். நினைச்சா போறான். நீ வந்திட்ட இல்லை இனி உன் பாடு. அவன்பாடு.''

எளிதாகச் சொன்னார் அன்னை. எளிதில்லை என்று நிரூபித்தான் மகன். இரவு நெடுநேரம் கழித்து வீடு திரும்பியவன் வாசலில் காத்திருந்த காயத்ரியை ஏறிட்டுப் பார்த்தவனின் முகத்தில் காதலுமில்லை. கனிவுமில்லை. உயிரற்ற பார்வையோடு உள்ளே வந்தான்.

''சாப்பாடு எடுத்து வைக்கவா?''

''வேண்டாம். சாப்பிட்டுவிட்டேன்.''

''இன்றைக்குமா. நம்ம வீட்டில் இன்று விருந்து.''

''அது ஊருக்கு.''

விடுவிடுவென்று மாடிப்படி ஏறினவனின் முதுகை வெறித்தாள் அவள். இவ்வளவு வெறுப்பா அவள் மீது? மாடியேறி உள்ளே நுழைந்தவள் தொட்டிலருகே நின்று கொண்டு மகனைப் பார்த்துக் கொண்டிருந்த கணவனைப் பார்த்தாள். அவன் பார்வையில் எல்லையில்லாத வாத்சல்யம் தெரிந்தது. கொள்ளைப் பிரியத்துடன் உறங்கிக் கொண்டிருந்த மகனை பார்த்துக் கொண்டிருந்தவனின் அருகே சென்று,

''நாங்க இன்றைக்கு வீட்டுக்கு வந்திட்டோம்கிற நினைவே இல்லையா?'' என்று கேட்டாள்.

''கூப்பிட்டு வந்தவன் நான்தானே,'' என்றான் அவன்.

''அப்புறம் ஏன் லேட்?''

''ஏன் எப்பவுமே உன் பின்னாலேயே அலையணுமா? நானென்ன வேலை வெட்டி இல்லாதவன்னு நினைச்சியா?''

உயிரைப் பிடுங்கும் பதிலில் அவள் விக்கித்து நிற்க மகனின் பிஞ்சுக் கைகளை எடுத்து முத்தமிட்டவன் அவளை சட்டை செய்யாமல் முதுகு காட்டிப் படுத்துவிட்டான்.

உள்ளங்கை நெல்லிக்கனியாய் அவனின் விலகுதலை விளக்கிவிட்டான் அவன். உதாசீனத்தை உதாசீனப்படுத்தி விட்டு அவனின் மனமறியப் பிடிக்காமல் தானும் விலகிச் சென்றுவிட்டாள் காயத்ரி.

சுயமரியாதை என்பது ஆணுக்கு மட்டுமில்லை பொண்ணுக்கும் உண்டு. காதலால் அடி பணியலாம். காரணம் தெரியாமல் எப்படி அடிபணிய? அவளது உள்ளப் பொருமல் தெரியாத சாவித்திரி பேரனைக் கொஞ்சி தொட்டிலில் இட்டு, தொட்டிலை ஆட்டினாள்.

# 16

**அவர் நெஞ்சினில்**

**நிறைந்தது யார் நிலவே?**

**என் திருமுகமா?**

**இல்லை வேறொரு முகமா?**

தொட்டிலை ஆட்டினாள் காயத்ரி. அழகாய் வடிவமைக்கப்பட்ட கடைந்தெடுத்த வேலைப்பாடுகள் நிறைந்த தேக்கு மரத்தொட்டில் அது. உச்சியில் கிளுகிளுப்பை ஆடியது. அவள் மனமும் சேர்ந்து ஆடியது.

குழந்தையைப் பார்க்க கோட்டையூரிலிருந்து ரெங்கநாதனும் அவரது மனைவியும் வந்திருந்தனர். ''நீதான் பழசை மறக்கலை தங்-ச்சி. என் பொண்ணு கல்யாணத்துக்கு வரவேயில்லை. பேரன் பிறந்திருக்கான்னு கேள்விப்பட்டதும் எங்க மனசு கேட்கலை. வந்திட்டோம்.''

''அப்படியில்லை அண்ணா அன்னைக்குன்னு எனக்கு உடம்புக்கு முடியாம போயிருச்சு.''

''ஏதோ சொல்லணும்னு சொல்லுற. கோபதாபத்தை மனதில் வைத்து என்ன ஆகப்போகுது. செண்பகவள்ளி கூட மூணு மாதமா எங்க வீட்டுக்குத்தான் வந்திருக்கு. மாப்பிள்ளை வேலை விசயமா வெளிநாடு போயிருக்கார். அதுக்கு எங்க கூட வர ஆசைதான். நாங்கதான் வேண்டாம்ன்னு சொல்லிட்டு நாங்க மட்டும் வந்தோம்.''

''ஏன் அண்ணா. கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கலாமே.''

''நீ சொல்லிட்ட இல்லை. போய் சொன்னதும் கிளம்பி வந்தாலும் வந்திடும். போய்ட்டு வரோம் சாவித்திரி.''

வந்தவர்கள் விடைபெற்றுச் சென்றபின் காயத்ரி கேட்டாள்.

''செண்பக வள்ளின்னா...?''

''ரங்கநாத அண்ணனோட மூத்த பெண்.''

''அதாவது..?''

''ம்.. ம்... அந்தப் பெண்தான்.''

மூன்று மாதங்களாய் இங்கிருக்கிறாளா? 'உனது மௌனத்திற்கும், பாராமுகத்திற்கும் அர்த்தம் விளங்கு கிறது என் கணவனே!'

மலைக் கோவிலுக்கு தரிசனத்திற்கு சென்றார்கள். குழந்தை பெயரில் அபிஷேக ஆராதனைகள் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அன்றொரு நாள் இதே மலையில் என்னவென்று அறியாமல் தான் மலை ஏறியதையும் முகமறியாதவனின் மாங்கல்யத்தை ஏற்று அவன் மனைவியாக கரம்பிடித்து இறங்கியதையும் எண்ணிப் பார்த்தாள். அன்றைக்கும் இன்றைக்கும் இடையே எத்தனை வித்தியாசம்? ஆனால் அன்றும் மனம் அலை கடலாய் கொந்தளித்தது. இன்றும் அதே போல் கொந்தளிக்கிறது. கொந்தளிப்பிற்கான காரணம்தான் மாறுபடுகிறது.

கண்ணனை தோளில் சாய்த்துக் கொண்டு படியேறிய வளிடம் திரும்பி,

''இங்கே கொடு,'' என்று மகனை வாங்கிக் கொண்டான் பார்த்திபன். அணைவாய் குழந்தையைத் தோளில் தாங்கிக் கொண்டு படியேறியவனைப் பார்க்க அழகாக இருந்தது.

''மெல்ல ஏறுங்க அத்தை. நின்று நின்று ஏறுங்க.'' என்றவாறு சாவித்திரியின் அருகே வந்து கை கொடுத்து உதவினாள் காயத்ரி.

அபிஷேக ஆராதனைகள் முடிந்து கோவில் பிர காரத்தை சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். பார்த்திபன் ஊர் முக்கியஸ்தர் ஒருவரோடு பேச நின்றுவிட அவனுக்காக காத்திருந்தனர் காயத்ரியும், சாவித்திரியும். கைக்குள் அடங்காமல் துள்ளிக் குதித்துக் கொண்டு இருந்த மகனிடம்,

''ச்சீ போக்கிரி. ஒழுங்காய் இருடா'' என்று செல்லமாய் கடிந்து கொண்டிருந்தாள் காயத்ரி.

''என்ன அத்தை பேரனோடு சாமி கும்பிட வந்திருக் கீங்க போல,'' என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் சாவித்திரி.

பருமனான உடலுடன் முப்பது வயது மதிக்கத் தக்க பெண்ணொருத்தி நின்று கொண்டிருந்தாள். களையான முகம். செழிப்பான வாழ்க்கை வாழ்பவள் என்பது தோற்றத் தில் தெரிந்தது.

''ஆமாம் செண்பகம்,'' என்று பதிலுரைத்த சாவித்திரி யம்மாள்,

''இது என் மருமகள் காயத்ரி,''என்று அவளிடம் அறிமுகப்படுத்திவிட்டு காயத்ரியிடம்,

''நம்ம கோட்டையூர் ரங்கநாத அண்ணனின் பொண்ணு, செண்பகவள்ளி,'' என்று அறிமுகப்படுத்தினார்.

ஒருவருக்கொருவர் கை குவித்துக் கொண்ட பெண் கள் இருவரும் சம்பிரதாயச் சிரிப்பொன்றை சிரித்துக் கொண்டே ஒருவரை ஒருவர் அளவிட்டுக் கொண்டனர்.

''போகலாமா'' என்றபடி பார்த்திபன் வந்தான். அவனைக் கண்டதும் காயத்ரியின் கையிலிருந்து அவனிடம் தாவினான் கண்ணன்.

ஆனந்தமாய் குழந்தையை வாங்கிக் கொண்டவனைப் பார்த்தபடி,

''போய்ட்டு வரேன் அத்தை'' என்று விடை பெற்றுக் கொண்டு போய்விட்டாள் செண்பகவள்ளி.

அறிமுகமற்ற பார்வையால் அவளைப் பார்த்தபடி,

''யாரும்மா அது?'' என்று தாயிடம் கேட்ட பார்த்திபன் பதிலை எதிர்பார்க்காமல் மகனைக் கொஞ்சியபடி படிகளில் இறங்க ஆரம்பித்தான்.

காயத்ரியை ''யாரும்மா அது?''என்ற கேள்வி யோசிக்க வைத்தது. யாரை சுவாசமாய் நினைத்துக் கொண்டு தன்னை ஒதுக்கி வைக்கிறான் என்று நினைத்து மறுகிக் கொண்டிருக்கிறாளோ அந்தப் பெண்ணை அவனுக்கு அடையாளம் தெரியாதா? அவளது சந்தேகத்தின் அடிப்படையே இடிக்கின்றதே.

''அத்தை.''

''என்னம்மா?''

''யாருன்னு செண்பகவள்ளியைப் பார்த்து கேட்கிறாரே அவருக்கு அடையாளம் தெரியாதா?''

''ஆமாம்மா. அவனுக்கு அடையாளம் தெரியாது. உறவுக் குடும்பங்களுக்கு போய் வருகிற பழக்கம் அவனுக்கில்லை. டவுனில் ஆஸ்டலில் தங்கி படிச்ச பிள்ளை. லீவுக்கு வீட்டுக்கு வந்தால் அவன் அப்பா கூட தொழிலை கத்துக்கப் போய்விடுவான். பெரிய படிப்பு படிச்சான். படிச்சு முடிச்சு வந்த புள்ளைக்குத்தான் கல்யாணம் பேசினோம். கல்யாணத்துக்கு முதல்நாள் பரிசம் போடுற

துன்னு பேசியிருந்தோம். பரிசம் போடற பந்தலில் பெண்ணைப் பார்த்துக்கிறேன்னு சொன்னான். அது நடக்காம போச்சே. அப்புறம் அவன் எங்கே அந்தப் பெண்ணைப் பார்க்கிறது? அவன் அவளைப் பார்த்ததேயில்லை. நாம் ஏன் விளக்கணும்னு நானும் சும்மா இருந்திட்டேன்.''

ஆயிரம் குடம் பால் வயிற்றில் விழுந்த ஆனந்தம் அடைந்தாள் காயத்ரி. பாலைவன வெயிலின் மத்தியில் ஐஸ் கட்டி மழை பொழிந்தால் எப்படி இருக்கும்? அவன் மனதில் யாருமில்லை அவன் காயத்ரியிடம் காட்டிய அன்பு கடமைக்காக இல்லை காதலினால்தான்.

'காத்திருப்பேன் கணவனே! உன் மனதில் கசடு மறைந்து நீ மனம் திரும்பும் வரை காத்திருப்பேன். நீ எனக்கு மட்டும் சொந்தமானவன் என்ற இந்த உண்மையே போதும் உன் பாரா முகம் என்னை பாதிக்காது.'

இல்லம் திரும்பியவள் உள்ளம் களிப்பில் மிதந்தது. கணவனுக்கு இரவு உணவு பரிமாறுகையில் உதடுகள் மெலிதாகப் பாட்டிசைத்தன. கேள்வியாய் நிமிர்ந்து பார்த்தவனை குறும்பாகப் பார்த்தாள். ஒரு கணம் தந்நிலை மறந்த பார்த்திபன் அள்ளிப் பருகுவது போல் மனைவியைப் பார்த்தான். அந்த கண நேரத்தில் சந்தேக மேகத்திலிருந்து வெளிவந்த நிலவு முகம் காட்டியது.

## 17

**நிலவே நீ வந்தாய்**
**வாழ்வில் நிழல் கொடுத்தாய்**
**இனிதாய் ஒரு விடியல்**
**இருள் வாழ்வில் நீ கொடுத்தாய்.**

நிலவு முகம் காட்டியது. அடுத்த நிமிடம் சந்தேக முகிலில் மீண்டும் முகம் மறைத்துக் கொண்டது. காயத்ரி கவலைப் படவில்லை. அவனுக்கான பணிவிடைகளை இழுத்துப் போட்டுச் செய்தாள். மகனைக் கொஞ்சுவது போல் அவனைக் கொஞ்சினாள். அவன் முறைத்தான். வேண்டுமென்றே வம்புக்கு இழுத்தாள். அவன் பல்லைக் கடித்தான். இந்த நாடகம் தொடர அதற்கு மூடுவிழா நடத்தவென்று வந்தது போல் சென்னையிலிருந்து காயத்ரியின் பெற்றோர் பேரனைப் பார்க்க வந்திருந்தனர்.

மாலையில் மகனுக்காக சீக்கிரம் வீடு திரும்பி விடும் பார்த்திபன் அவர்களை வரவேற்றுவிட்டு மரியாதையின் பொருட்டு அவர்களின் எதிரே அமர்ந்தான். அவனைக் கண்டதும் வழக்கமான மகிழ்வோடு கைகளை விரித்துக் கொண்டு குதியாட்டம் போட்டான் கண்ணன். ஒரு தகப்பனின் பெருமிதத்தோடு மகனை வாங்கி மடியில் வைத்துக் கொண்டவனிடம்,

''நேற்றுப் போல் இருக்கு இவன் பிறந்தது. இன்னைக்கு அவங்க அப்பாவை கண்டதும் என்னமாய் ஆட்டம் போடறான் பாருங்க தம்பி,'' என்றார் கோவிந்தசாமி.

பெருமையாய் பேரனை பார்த்துக் கொண்டார் சாவித்திரி.

''அன்றைக்கு பயந்து போனோம் அண்ணி. நல்ல வேளை அரவிந்தன் வந்ததால் தப்பிச்சோம்'' என்றாள் நவநீதம்.

''என்ன நவநீதம் என்னாச்சு,'' என்றார் சாவித்திரி.

''அன்னைக்கு காலையில் தம்பி வெளியே போனதும் நம்ம தெருமுனையில் ஒரு கொலை நடந்திருச்சு. அது அரசியல் கொலைங்கிறதால் பெரிய கலாட்டா கலவரம்.

காயத்ரிக்கு திடீர்ன்னு வலி வந்திருச்சு. தம்பிக்கு போன் போட்டால் கிடைக்கலை. கால்டாக்ஸி, ஆட்டோ யாருமே தெருவுக்குள் வரமுடியாதுன்னு சொல்லிட்டாங்க. கடவுளே! சோதனை மேல் சோதனையான்னு கண்ணீர் விட்டுட்டோம். தெருவில் கால் வைக்க முடியலை. ஒரே கல்லெறி.''

''அப்புறம்'' என்று பதறினார் சாவித்திரி.

''கடவுள் நம்மை கைவிடலையண்ணி. அரவிந்தன் தம்பி வீட்டுக்கு வந்துச்சு. காயத்ரியின் நிலையைப் பார்த்ததும் எங்களை காரில் ஏற்றிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் சேர்ந்துருச்சு. அது கார் கண்ணாடியெல்லாம் உடைஞ்சு நெற்றியில் காயம் பட்டிச்சு. ஆனாலும் சரியான நேரத்துக்கு ஆஸ்பத்திரி போய்விட்டோம். ஒரு நிமிடம் தாமதிச்சிருந்தாலும் தாய், சேய் இருவருக்கும் ஆபத்தாகி இருக்கும்ன்னு டாக்டரம்மா சொன்னாங்க.''

''தெய்வமே,'' என்று மேல் நோக்கி கையெடுத்து கும்பிட்ட சாவித்திரி,

''பெருமாள் கை விட மாட்டாரு நவநீதம். காயத்ரி இதைப் பத்தி என்கிட்ட சொல்லவே இல்லையே,'' என்றார்.

''எப்படி சொல்வா அண்ணி. அன்றைக்கு அவ அரவிந்தன் கிட்ட சொன்னதை இப்போ நினைத்தாலும் என் நெஞ்சைப் பிழியுது. 'நான் செத்தால் கூடப் பரவாயில்லை. அரவிந்தன். அவர் குழந்தைக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது'ன்னு சொல்லிக்கிட்டே வந்தாள். நல்லபடியா குழந்தை பிறந்ததும்தான் அமைதியானாள்.

'இந்த நன்றியை மறக்கமாட்டேன் அரவிந்தன் என். உயிருள்ள வரை மறக்க மாட்டேன்'னு திரும்பத் திரும்ப அந்தப் பிள்ளைகிட்ட சொல்லிக் கிட்டே இருந்தாள்.''

''வேறு எப்படி பேசும் என் தங்கம்,'' என்றபடி மரு மகளை பெருமையாய் பார்த்த சாவித்திரி.

''அந்தப் பையன் ராஜதுரை மகன்தானே'' என்று கேட்டார்.

''ஆமாம் அண்ணி. அந்த தம்பிக்குத்தான் நம்ம காயத் ரியை முதலில் பெண் கேட்டார்கள். ஆனால் காயத்ரிக்கு இஷ்டமில்லை. 'உங்க பையனை கல்யாணம் பண்ணிக்க விருப்பமில்லை. அப்படின்னு அவங்க அப்பாகிட்டயே நேரில் சொல்லிருச்சு.''

''யாரு ராஜதுரைகிட்டயா சொல்லுச்சு?'' என்று ஆர்வ மாய் கேட்டார் சாவித்திரி.

''ஆமாம் அண்ணி. அவர்கிட்டத்தான் பட்டுன்னு சொல் லிருச்சு. பாவம் அவங்க புருசன், பெண்டாட்டி இரண்டு பேருக்கும் முகமே மாறிருச்சு...'' என்று தன் போக்கில் பேசிக் கொண்டிருந்த நவநீதத்தை இடைமறித்து,

''பைத்தியக்காரத்தனமாய் இப்போது எதற்கு இந்தப் பேச்சு,'' என்று கோபமாய் அதட்டினார் கோவிந்தசாமி.

மகனின் பிஞ்சு விரல்களை பிடித்துக் கொண்டு விளை யாடுவதுபோல் பாவனை செய்து கொண்டே அனைத் தையும் செவி மடுத்த பார்த்திபன் எழுந்து மாடிக்குச் சென்றான். கண்ணனை தூக்கிக் கொண்டு பெரியவர்கள் மாறி மாறி கொஞ்ச ஆரம்பித்தார்கள். மாடி அறையில் நுழைந்தவன் மாடி பால்கனியில் உலவியபடி சிந்திக்க ஆரம்பித்தான்.

'ஆக காயத்ரிக்கு அரவிந்தன் மேல் விருப்பம் இல்லை. தன்னை கல்யாணம் செய்து கொள்பவன் ஒரு வார்த்தை கேட்காமல் கல்யாணம் செய்து கொண்டானே என்ற

நியாயமான கோபம் மட்டும்தான் பார்த்திபன் மேல் இருந் திருக்கிறது. அவள் பார்த்திபனோடு குடும்பம் நடத்தியது கடமைக்காக அல்ல காதலினால்.' பின்னால் கொலுசு சத்தம் கேட்க திரும்பிப் பார்த்தான். காயத்ரி வந்து கொண் டிருந்தாள்.

''சாப்பிட வாங்க.''

''ம்ம். அவங்க எல்லோரும் சாப்பிட்டாச்சா?'' என்றபடி வெகு நாட்களுக்குப் பின்னர் அவளை நிதானமாய் பார்த் தான். மெலிவான உடல் தாயான பின்னர் சற்று சதைப் பிடிப்பாக மாறியிருந்தது. பின்னலை இழுத்து வாயில் வைக்கும் மகனுக்காக அதைச் சுற்றி கொண்டையிட் டிருந்தாள். அதையும் சுற்றி வளைவாய் மல்லிகை வைத் திருந்தாள். ஆரஞ்சு கலர் உடலில் கருப்பு புள்ளிகளும், கருப்பு பார்டருமான மைசூர் சில்க் புடவையை உடுத்தி யிருந்தாள். உள்ளங்கழுத்தில் கழட்டக்கூடாது என்று கண்டிப்புடன் சாவித்திரி போட்டு விட்டிருந்த வைர அட்டிகை. விழிகளில் மையலுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவளைப் பார்த்து இரு கைகளையும் விரித்து விழிகளால் அழைத்தான்.

ஓடி வந்து அந்த அணைப்பில் தஞ்சம் புகுந்து கொண் டவளின் உடல் குலுங்கியது அழுகையால். ஆதரவாய் தட்டிக் கொடுத்தவன்,

''ஏய்ய் என்ன இது குழந்தையாட்டம்,'' என்றான். முகத்தை உயர்த்தி அவனிடம் கேட்டாள்.

''ஏன்?''

''அரவிந்தன்,'' என்றான் ஒற்றைச் சொல்லாய்.

விலக முயன்றவளை விலக விடாமல் அவனது அணைப்பு இறுகியது.

''ஆரம்பத்தில் நீ விலகிப் போனாய். காரணத்தை நான் தவறாக புரிந்து கொண்டேன்.''

''திடீர் திருமணம்ன்னால் அதிர்ச்சி வராதா?''

''இப்ப புரியுது. அப்ப புரியலை. நீயும் ஒன்றும் என் காலடியில் விழுந்து விடவில்லையே.''

''உங்க பாரா முகத்துக்கு நான் வேறு ஒரு காரணத்தை நினைத்து விட்டேன்.''

''என்ன நினைத்தாய்?''

''வந்து.. வந்து.. நீங்க அந்த செண்பக வள்ளியை.. மறக்கவில்லையோன்னு..''

''செண்பக வள்ளியா யாருடி அது?''

காயத்ரி மென்று விழுங்கிக் கொண்டே,

''கோட்டையூர் ரெங்கநாத பெரியப்பாவின் மகள்'' பார்த்திபனின் விழிகள் சிவந்தன.

''ஏண்டி. அந்தப் பொண்ணு பேரு கூட எனக்குத் தெரியாது. நீ இம்சைப்படுத்திக்கிட்டு இருக்கே. சொல்லு. என்னைப் பத்தி இன்னும் உயர்வான நினைப்பு இன்னும் எத்தனை உன் மனசில் இருக்கு?''

''நீங்க மட்டும் என்னவாம். பொண்ணு கேட்டு வந்தால் அரவிந்தனோடு என்னை சம்பந்தப்படுத்தி நினைக்க லாமா?''

''என்கிட்ட நீ கேட்டிருக்கலாமேடி.''

''நீங்க ஏன் கேட்கலை?''

''இதைப் போய் நான் எப்படிடீ கேட்பேன்.''

''ஆனால் நான் கேட்டிருப்பேன். அதுக்குள்ள எனக்கு உண்மை தெரிஞ்சிருச்சு.''

''அதுதானே நீ யாரு..? ஏண்டி மனசுக்குள்ளேயே இதை மறைச்சு வைத்து துப்பறிஞ்சிருக்கே.''

''மறைத்து வைத்தாலும் உங்க மேல் உயிரை வைத் திருந்தேன்.''

''நான் மட்டும் என்னவாம். உன் மேல் உயிரை வைக் கலையா? அதனால்தான் உன் நிழலைக் கூட மத்தவங்க பார்த்தால் எனக்கு தாங்கவில்லை.''

அவளது விழிகள் கலங்கின.

''எல்லாம் சரி. இனிமேல் ஏதாவது கோபமிருந்தால் நாலு அடி அடித்து விடுங்கள். இப்படி வேதனை படுத்தா தீர்கள்.''

''மன்னிச்சிரு காயத்ரி. நடந்ததை மறந்து விடு. உன் மனதில் நான் மட்டும்தான் இது எனக்கு தெரிந்துவிட்டது. என் மனதில் நீ மட்டும்தான் இதை நீயும் அறிந்து விட்டாய். இனிமேல் இந்த மனப்பிரிவு நமக்குள் வராது. இந்தப் பிரிவால் நான் பட்ட துன்பம்.. அப்பப்பா.''

''நீங்களுமா,'' அவள் முகம் பார்த்த விழிகள் ஆச்சரி யத்தில் மலர,

''நானும்தான். இதில் ஆச்சர்யம் என்னடி இருக்கிறது. உன்மேல் கோபப்பட உன்னை வெறுக்க என்னால் முடி யுமா? உனக்கு தண்டனை கொடுக்கிறதாய்தான் நீ நினைத் தாய். உண்மையில் எனக்குத்தான் அது தண்டனை.''

அந்த இரு உள்ளங்களும் மீண்டும் பின்னிப் பிணைந்தன. நிலாவெளியில் நடப்பது போல் இன்பமான வாழ்வை அவர்கள் தொடர்ந்தார்கள். இனி அவர்கள் வாழ்வில் சந்தோச நிலவை சந்தேக மேகங்கள் மூடி மறைக்காது.

